

OFFICE OF THE STATE EDITOR
29/ஏப்/74
20 MAR 1974
20/3/74
GAZETTEER UNIT, MADRAS
84
68



# திருக்கோயில்

84





| மாலை 16 | பிரமாதீச—பங்குனி | மார்ச்சு—1974 | மணி 6 |
|---|---|---|---|


## பொருளடக்கம்


1. வள்ளலார் காட்டிய வழி
2. வள்ளலாரின் திருவுள்ளம்
3. அருள் வெளி
4. வள்ளலாரும் மாணிக்க வாசகரும்
5. வள்ளலார் கண்ட முருகன்
6. சேக்கிழார் விளக்கும் தத்துவச் செந்நெறி
7. தமிழ் இலக்கியங்களும் வள்ளலாரும்
8. உரிமை நூல்
9. திருக்கோளிலித் தல வரலாறு
10. நூலாசிரியரும் உரையாசிரியரும்
11. திரு மூலர் காட்டும் அறம்
12. பொறிவாயில் ஐந்தவித்தல்
13. முருகன் பெருமை
14. மாசாத்தனர்
15. அம்பிகையின் அழகு வெள்ளம்


### சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும். தனிப் பிரதி விலை ரூபா ஒன்று மட்டும்.

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் ''திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034'' என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல் இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்

158590

# வள்ளலார் காட்டிய வழி

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

## முன்னுரை :

திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகளார் (கி.பி. 1823-1874), நமது தமிழகத்தில் வாழையடி வாழையாகத் தொன்றுதொட்டுத் தோன்றி வந்தருளியுள்ள சான்றோர்களின் வரிசையில், தலைசிறந்த ஒருவராவர். அவர் தம் தூய அருள் வாழ்க்கையும், தெய்விகத் திருப் பாடல்களும், நமக்குப் பல்லாற்றானும் உய்யும் வழிகளை உணர்த்துகின்றன. ''சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகள், நாமும் அவர்களைப் போல நடந்து, நம்முடைய வாழ்க்கையினையும் நாம் தெய்விகம் நிறைந்ததாக ஆக்கிக் கொள்ளுதல் இயலும் என்று, நம்மனோர்க்கு நினைவூட்டி அறிவுறுத்துகின்றன. காலம் என்னும் மணலில், அவர்கள் பதித்து விட்டுச் செல்லும் அடிச் சுவடுகள், பிறவி என்னும் கடலில் வாழ்க்கை என்னும் மரக் கலத்தில் ஏறித் தவறித் தடுமாறி நிற்கும் நமக்குத் தளர்ச்சி நீக்கிக் காப்பாற்றி நலம் புரிகின்றன.''

சீலம் மிக்க பெருமக்கள்
சிறந்த நல்ல எழில் வரலாறு,
ஏல நாமும் அவர்களைப்போல்
இறைமை வாழ்வெய் துதல்தேற்றும்;
கால மணலில் பதிந்தவர்காற்
சுவடு, வாழ்வாம் கலம்கவிழ்ப்பச்
சாலத் தவிக்கும் சகோதரரைத்
தைரி யமேகொண் டுயச்செய்யும்! (1)

—ந.ரா.மு.

இராமலிங்க வள்ளலாரின் தெய்விக அருள் வாழ்க்கையினையும், திருவருட்பா என்னும் சிறந்த தீந்தமிழ்ப் பாடல்களையும், நாம் பல்கால் ஊன்றி நோக்கி ஆராய்ந்து உணரும் போது, அவர்தம் வாழ்க்கையும் வாய்மொழிகளும், நாம் நம்முடைய வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ளுதல் வேண்டும், எவ்வாறு நடத்துதல் வேண்டும் என்னும் உண்மைகளைச் செவ்விதின் உணர்த்துகின்றன.

* வள்ளலார் சித்தி நூற்றாண்டு விழாவில், 'முத்தமிழ்க் காவலர்' திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில், நிகழ்த்திய சொற்பொழிவு. (5—2—74).

—ஆசிரியர்.

## ஐவகை ஒழுக்கம் :

(1) ஆன்மீக அருளியற் சமய நெறி வாழ்க்கையில், செல்லத் தலைப்படுகின்ற அன்பர்கள் அனைவருக்கும், ஐந்து பொருள்கள் மிகவும் இன்றியமையாதனவாகும். உலகியல் வாழ்க்கையில் ஏதேனும் ஒரு துறையில் நுழைந்து ஒரு வேலையைக் கற்றுக் கொள்ளுகின்ற ஒருவனுக்கு ஒரு வழிகாட்டி அல்லது பயிற்சி அளிப்பவர் தேவைப்படுகின்றார். ஒரு வழிகாட்டி அல்லது ஆசிரியர் இன்றி நாம் நம் வாழ்க்கையில், எதனையும் கற்கவோ பின்பற்றவோ, ஒரு துறையில் முன்னேற்றமடையவோ பெரும்பாலும் இயலுவதில்லை. இதுபோன்றே ஆன்மீக அருள் வாழ்க்கையிலும் ஒரு சிறந்த ஆசிரியர் அல்லது ஞானகுரு இன்றியமையாமல் தேவைப்படுகின்றார். மணிவாசகப் பெருமான், தம்மை ஆட்கொண்டு உய்யும் நெறி காட்ட ஓர் அருட் குருவை நாடி ஏக்கற்று நின்றார். சிவபெருமானே ஞானாசிரியராகத் தோன்றி அவரை ஆட்கொண்டருளினார். ''குருவருளின்றித் திருவருள் இல்லை'' என்பது பெரியோர்கள் கூறும் அநுபவ மொழியாகும்.

(2) இங்ஙனமே ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் வழிகாட்டுவதற்கு ஏதேனும் ஒரு சிறந்த நூல் தேவைப்படுகின்றது. அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியில் எத்தனையோ பல எண்ணிறந்த நூல்கள் இருக்கின்றன. அவைகளில் ஏதேனும் ஒன்றை நாம் நம்முடைய வாழ்க்கையில் வழி காட்டுவதற்குரிய நூலாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு போற்றி உய்தல் வேண்டும். அண்மைக் காலத்தில் உலகம் வியக்கும் ஒப்புயர்வற்ற பெருஞ் சான்றோராக விளங்கியிருந்த காந்தியடிகள், தம்முடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும், மனத்திற்கு இனியதாகவும் பகவத் கீதை என்னும் நூலைத் தேர்ந்து கொண்டு, நாள் தோறும் அதனைப் பயின்று போற்றி வந்தார்.

(1) "Lives of great men all remind us
We can make our lives sublime,
And, departing, leave behind us,
Footprints on the sands of time;
Foot prints, that perhaps another,
Sailing o'er life's solemn main,
A forlorn and shipwrecke'd brother,
Seeing, shall take heart again"

—H.W. Longfellow.

N74.16.6 84



(3) இறையருளைப் பெற விரும்புபவர்களுக்குத் தல யாத்திரையும் தரிசனமும் பெரிதும் துணை புரிவனவாகும். நமது தமிழ் நாடு, தலங்களுக்கும் கோயில்களுக்கும் மிகவும் புகழ் பெற்றது. நமது தமிழகம் போலப் பழமையும் பெருமையும் மிக்க எண்ணற்ற பல கோயில்களைக் கொண்டுள்ள நாடு வேறு எதுவும் இல்லை. எண்ணற்ற எத்தனையோ பல தலங்களும் கோயில்களும் இருப்பினும், ஏதேனும் ஒரு தலத்துக்கோயிலை, நாம் நமக்கெனத் தேர்ந்தெடுத்து வரித்துக் கொண்டு வழிபட்டு வருதல் பெரு நலம் பயக்கும். திருத்தொண்டர் புராணம் பாடியருளிய சேக்கிழார் பெருமான், தேவாரத்திருப்பாடல் பெற்ற எல்லாத் தலங்களையும் போற்றினர். அவற்றிற்கெல்லாம் சென்று தரிசித்தார்; அவற்றின் சிறப்புக்களையெல்லாம் தமது நூலின்கண் விதந்து கூறி விளக்கியருளினார். எனினும் தமக்குரிய சிறந்த ஆன்மீக வழிபாட்டுத் தலமாக கும்பகோணத்திற்கு அருகேயுள்ள திருநாகேசுவரம் என்னும் தலத்தையே தேர்ந்து கொண்டார். தாம் அவதரித்த தொண்டை நாட்டுக் குன்றத்தூரில், தெற்கேயுள்ள சோழ நாட்டுத் திருநாகேசுவரத்தின் நினைவாக, வட திருநாகேசுவரம் என்னும் கோயிலையும்அமைத்துப்போற்றி மகிழ்ந்தார். எனவே நமக்கென ஒரு தலத்தை ஆன்மீக வழிபாட்டுத் தலமாகத் தேர்ந்து அமைத்துக் கொண்டு போற்றி வருதல் இன்றியமையாதது.

(4) இவ்வாறே நம்முடைய வாழ்க்கைக்கு ஒரு நோக்கம் அல்லது குறிக்கோள் இருத்தல் வேண்டும். உண்ணுவதும் உறங்குவதும் உழைப்பதுமாகவே நம்மில் பெரும்பாலோருடைய வாழ்க்கை அமைந்திருக்கிறது. ''எல்லாம் யோசிக்கும் வேளையில் உண்பதும் உறங்குவதுமாக முடியும்'' என்று தாயுமான அடிகள் பாடியருளியிருப்பது, நம்முடைய வாழ்க்கைக்கே நனி மிகப் பொருந்துகின்றது. அங்ஙனமில்லாமல் ஆறறிவு உடைய மனிதர்களாகிய நாம் நம்முடைய வாழ்க்கைக்குரிய குறிக்கோள் இன்னது என ஆய்ந்து வரையறுத்துக் கொள்ளுதல் வேண்டும். உயரிய குறிக்கோள் இல்லாத ஒருவனது வாழ்க்கை, ஆடுமாடுகளைப் போன்று அறிவும் பயனும் இல்லாத விலங்கு வாழ்க்கையே யாகும். ''பாலனாய்க் கழிந்த நாளும், பனி மலர்க் கோதைமார்தம் மேலனாய்க் கழிந்த நாளும், மெலிவொடு மூப்பு வந்து கோலனாய்க் கழிந்த நாளும், குறிக்கோள் இலாது கெட்டேன் ; சேல்உலாம் பழனவேலித் திருக் கொண்டீச் சரத்துளானே'' என்று திருநாவுக்கரசர் பெருமான் திருவாய் மலர்ந்திருத்தல், இங்கு நாம் சிந்தித்தற்குரியது.

(5) மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும், தம்மால் பிறருக்கும் பிற உயிர்களுக்கும் நலம் விளையத்தக்க நற்செயல் ஏதேனும் ஒன்றைப் புரிந்து வருதல் வேண்டும். பிறர்க்கு நம்மால் இயன்ற உதவியினை மனமொழி மெய் மூன்றனாலோ, அல்லது அம்மூன்றனுள் ஒன்றனாலோ செய்து வருதல், நமக்கு இன்றியமையாததும் நலம் பயப்பதும் ஆகும். இத்தகைய நற்செயலைத் 'தொண்டு' என நூல்கள் நுவலும். இங்ஙனம் தொண்டு புரிந்து வருபவர்களே, தொண்டர்கள் என வழங்கப்படுவர். பெரிய புராணத்தில் கூறப்பெறும் நாயன்மார்கள் அனைவரும், தத்தமக்கு ஏற்ற இயன்ற வகைகளில் ஒவ்வொரு தொண்டு புரிந்து வந்தனர். திருநீலகண்ட நாயனார், இறைவன் அடியார்களுக்குத் திருவோடு அளித்து வந்தார். அமர்நீதி நாயனார், அடியார்களுக்கு, ஆடைகள் வழங்கி வந்தார். இளையான்குடி மாறநாயனார் போன்றவர்கள், அடியவர்களை அன்புடன் வரவேற்று உணவு அளித்து வந்தனர். இத்தகைய பற்பல தொண்டுகளைச் செய்து வந்ததினாலேயே நாயன்மார்களுக்குத் திருத்தொண்டர் என்னும் பெயர் ஏற்படுவதாயிற்று. அவர்களின் வரலாறு கூறும் நூலுக்கும் 'திருத்தொண்டர் புராணம்' எனப் பெயரமைந்தது. எனவே சைவ நாயன்மார்களைப் போல, நாமும் நமக்கு இயன்ற அளவு, பிறர்க்கு உதவி செய்தல் ஆகிய ஏதேனும் ஒரு தொண்டினைச் செய்து வரல் வேண்டும்.

இவ்வைந்தினையும், இற்றைக்குச்சற்றேறத் தாழ 2,500 ஆண்டுகளுக்கு முன்னர்ப் புத்தர் பிரான் போதித்த பஞ்ச சீலம் போல, நமக்கு நம் வள்ளற்பெருமான் தாமே கடைப்பிடித்துக் காட்டியருளிய ஐவகை ஒழுக்கம் (பஞ்ச சீலம்) எனக் கொள்ளலாம்.

**வள்ளலார் காட்டிய வழி :**

இராமலிங்க வள்ளற் பெருமானிடத்திலும், அவ்வள்ளற் பெருமான் வகுத்தளித்துச் சென்ற சன்மார்க்க நெறியிலும், உண்மை அன்பும், ஈடுபாடும் உடைய ஒவ்வொருவரும், தம்முடைய வாழ்க்கையில் ஒரு குருவையும், நூலையும், தலத்தையும், குறிக்கோளையும், தொண்டினையும் செவ்விதின் ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக் கொண்டு, போற்றி ஒழுகும் கடப்பாடுடையவர் ஆவர். வள்ளற் பெருமான் நமக்கெல்லாம் ஒரு பெருங் குருவாக விளங்கி வந்தார். ஆயினும் அவர் தமக்குரிய ஞான குருவாக ஞானசம்பந்தப் பெருமானை வரித்துக் கொண்டார்.

''முன்புறு நிலையும் பின்புறு நிலையும்
முன்னிநின் றுளம்மயக் குறுங்கால்,
அன்புறு நெறியால் திருநெறித் தமிழ்
கொண்டு
ஐயம்நீத் தருளிய அரசே!

என்புபெண் ணுருவாய் இன்னுயிர் அது கொண்டு
எழுந்திடப் புரிந்துல கெல்லாம்
இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே
என்உயிர்க்கு உயிர்எனும் குருவே''

எனவரும் திருவருட்பாப் பாடலில் தமக்கு ''என் உயிர்க்கு உயிர் எனும் குருவே'' என்று வள்ளலார் திருஞானசம்பந்தப் பெருமானைப் போற்றியிருத்தல் காணலாம்.

இங்ஙனமே, தமக்குரிய ஆன்மீக அருள் ஞானப் பெரு நூலாக, வள்ளற் பெருமான் மகிழ்ந்து போற்றப் பெற்ற மாட்சிமை உடையது திருவாசகம்.

''வாட்டமிலா மாணிக்க
வாசக! நின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த
கீழ்ப்பறவைச் சாதிகளும்,
வேட்டமுறும் பொல்லாத
விலங்குகளும், மெய்ஞ்ஞான
நாட்டமுறும் எனில், இங்கு
நான்அடைதல் வியப்பன்றே''

என்பது போன்ற பல பாடல்களால், திருவருட் பிரகாச வள்ளலார் திருவாசகத்தின் சிறப்புக்களைப் புகழ்ந்து போற்றி மகிழ்ந்திருக்கக் காண்கின்றோம். திருவருட்பாவில் விண்ணப்பக் கலிவெண்பா என்னும் பகுதியில் தேவாரப் பாடல் பெற்ற திருத் தலங்களையெல்லாம் துதித்துப் போற்றியுள்ள வள்ளற் பெருமான், தமக்கென்று ஒரு தலத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். அதுதான் உத்தர ஞான சிதம்பரம் என்ற வடலூர்ப் பெருவெளியாகும். இப்புனிதப் பெருந் தலத்தில், சத்திய ஞான சபை, சத்திய தருமச் சாலை, சித்தி விளாகப் பெரு மாளிகை, முதலியவற்றை அமைத்தருளினர். சமரச சன்மார்க்க நெறியினை உலகெங்கும் பரப்புவதையே, தம்முடைய வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டருளினர். ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமை அல்லது உயிர் இரக்கம் என்னும் சீவகாருண்யச் செயல்களையே தமக்குரிய இன்ப அன்புத் தொண்டாக ஏற்றுப் போற்றி இயற்றிக் கொண்டு போந்தார்.

**முடிவுரை :**

இராமலிங்க வள்ளற்பெருமான் சித்தி பெற்ற நூற்றாண்டு விழாவாகிய இந்தத் தைப்பூசப் பெரு விழா நாளில், மேற்கூறிப் போந்த ஞான குரு—ஞான நூல்—ஞானத் தலம்—நல்ல குறிக்கோள்—நற்பெருந் தொண்டு என்னும் ஐந்தையும், நாம் ஒவ்வொருவரும் நமக்குள் தீர ஆராய்ந்து, தேர்ந்து அமைத்துக் கொள்ளுதல் நலம் பயக்கும். வள்ளற் பெருமானே நமது ஞான குரு; அவர் அருளிய திருவருட்பாவே நமது ஞான நூல்; அவர் பல ஆண்டுகள் தங்கி வாழ்ந்திருந்த உத்தர ஞான சிதம்பரம் என்னும் இவ்வடலூர்ப் பெருவெளியே நமக்குரிய ஞான அநுபூதித் தலம். சமரச சன்மார்க்க நெறி உலகெங்கணும் தழைக்கப் பாடுபடுதலே, நம்முடைய வாழ்க்கையின் குறிக்கோள். உயிர் இரக்கம் என்னும் சீவகாருண்யச் செந்தண்மைச் செயல் புரிதலே நமக்கு உரிய இனிய நற்பெருந் தொண்டு. இவ்வைந்தையும் நாம் செவ்விதிற் போற்றி உய்ந்து உயர்வதற்கு, அருட் பெருஞ் சோதித் தனிப் பெருங் கருணை வடிவாகிய நம் இராமலிங்க வள்ளலாரின் திருவருள், நமக்குத் துணை புரிவதாக!

—ஆசிரியர்.

# வள்ளலாரின் திருவுள்ளம்

"முத்தமிழ்க் காவலர்" திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், திருச்சிராப்பள்ளி.

**முன்னுரை :**

நமது தமிழ்நாடு, ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்கள் பலர் தோன்றியருளிய சிறப்புடையதாகும். அவ்வரிசையில் அண்மைக் காலத்தில், சென்ற நூற்றாண்டில் (கி.பி. 1823-1874) தோன்றி வாழ்ந்திருந்தவர், நம்முடைய இராமலிங்க வள்ளலார். அவர் பற்பல பெருந் தனிச்சிறப்புகள் உடையவர். அவர் ஒரு சிறந்த ஞானியாகவும், கவிஞராகவும் ஒருங்கே திகழ்ந்திருந்தார். ஞானிகள் பலர் கவிஞராக இருந்ததில்லை. கவிஞர்கள் பலர் ஞானிகளாக விளங்கியதில்லை. இராமலிங்க வள்ளலார் சிறந்த ஞானியாகவும், கவிஞராகவும் ஒருங்கே விளங்கியிருந்த திறன், பெரிதும் வியந்து போற்றுதற்குரியதாகும். வள்ளலார் அருளிச் செய்த திருவருட்பாப் பாடல்கள், கற்பவரின் உள்ளமெலாம் கொள்ளை கொண்டு, "தேன் கலந்து பால்கலந்து செழுங் கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கும்" இயல்பு மிக்குத் திகழ்கின்றன.

**மூவகை மனம் :**

திருவருட்பாப் பாடல் ஒவ்வொன்றும், ஆயுந்தொறும் ஆயுந்தொறும், அரிய பல கருத்துக்களைச் சுரக்கும் அருள் ஊற்றாகவும், அறிவு அநுபவக் களஞ்சியமாகவும் விளங்குகின்றது. அவற்றை ஓதுந்தோறும் நம் மனம் மாசுகள் அகன்று, தெய்விக நலம் பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. வள்ளலார் தமது பாடல்களில், ஆங்காங்கே நமது மனித மனத்தின் இயல்புகளைப் பலவகைகளில் சுவை மிக எடுத்து விளக்குகின்றார்! சிறப்பாக, நம் மனித மனத்தைப் பேதைமனம்-குரங்குமனம் -ஏவல்மனம் என மூவகைகளில், அவர் குறிப்பிட்டருளி யிருக்கின்றார். இவற்றை முறையே சேய்மைமனம், ஆய்வுமனம் தூய்மை மனம் எனவும் குறிப்பிடலாம். தூய்மை மனத்தைச் சித்திமனம் என்று குறிப்பிடுதலும் பொருந்துவதாகும்.

**மகாதேவ மாலை :**

திருவருட்பாவில் 'மகாதேவமாலை' என்னும் பகுதியில் உள்ள ஒரு பாடலில் பேதை மனத்தின் இயல்புகளை வள்ளலார் சுட்டிக் காட்டி விளக்குகின்றார். அவர் தம்முடைய மனத்தின் இயல்பைக் குறித்துக் கொள்வது போலப் பாடியிருந்தாலும், உண்மையில் அவர் நம்முடைய மனத்தின் இயல்புகளைப் பற்றியே குறிப்பிடுகின்றார் எனலாம். நாம் நம் குற்றங்களை மறந்துவிட்டு, பிறர் குற்றங்களையே ஆராய்ந்து காண முற்படுவோம். ஆனால் குற்றமற்ற ஞானிகளோ, பிறர்மீது குற்றங்களைக் கூற விரும்பாமல் பிறர் குற்றங்களைத் தம் மீது ஏறிட்டுக் கொள்ளும் இயல்பினராக விளங்குவர். இது ஞானிகள் அனைவருக்குமே உரிய பொது இயல்பாகும். அம் முறையில் நம்மனத்தின் இழிந்த இயல்புகளைத் தம் மனத்தின் இயல்புகள்போல வைத்துப் பாடுகின்றார் வள்ளலார்.

**பேதை மனம் :**

உலகில் மரம் மலை மாடி முதலியவற்றில் நாம் ஏறுகின்றோம். அவைகள் நம்மீது ஏறுதல் இயலாது. ஆனால் இவ்வியல்பிற்கு மாறாகச் சில பொருள்கள் உண்டு. நாம் வண்டியில் ஏறுகின்றோம். வண்டி நம்மீது ஏறுவதும் உண்டு. ஆனால் ஏறுதலும் ஏறப்படுதலும் ஒரே சமயத்தில் நிகழ்வதில்லை. ஒன்றே ஒன்றில் மட்டும், இரண்டும் ஒருசேர நிகழும். தயிர் கடையும்போது மத்து தயிரில் ஏறும். தயிர் மத்தில் ஏறும். அதனால் தயிரும் மத்தும் ஆகிய இரண்டும் கலங்கி அலையும். அதுபோல நம்முடைய மனித மனம், உலகியலாகிய வஞ்சக வாழ்க்கையில் மயக்கமுற்று, விருப்பம் மிக்கு, மதங்கொண்டு, பித்தம் பிடித்து, உழலத் தொடங்குகின்றது. அம்மனத்தால் நாம்படும் துன்பம், பேயின் பிடியுள் சிக்கியவர்கள் படும் தொல்லைகளிலும் கொடியதாக உள்ளது. இங்ஙனம் அறிவற்ற யான் படுகின்ற துன்பத்திற்கு ஓர் எல்லையே இல்லை எனக் கூறி வருந்துகின்றார் வள்ளலார்.

"மத்தேறி அலைதயிர்போல் வஞ்ச
வாழ்க்கை
மயலேறி விருப்பேறி மதத்தி னோடு
பித்தேறி உழல்கின்ற மனத்தால் அந்தோ
பேயேறி நலிகின்ற பேதை யானேன்"

---

வடலூரில் நிகழ்ந்த வள்ளலார் சித்தி நூற்றாண்டுப் பெருவிழா நாளில் நிகழ்த்திய தலைமையுரை. கேட்டுத் தொகுத்து எழுதியவர் ந.ரா. முருகவேள்.

எனவரும் திருவருட்பாப் பாடலில், நம் பேதை மனத்தின் இயல்பினை, வள்ளற்பெருமான் நன்கினிது விளக்கியிருத்தலைக் காணலாம்.

**குரங்கு மனம் :**

இனி, வள்ளலார் நமது குரங்கு மனத்தின் இயல்பினையும், தமது பாடல்களில் ஆங்காங்கே பல இடங்களில் அழகுற எடுத்து விளக்கியிருக்கின்றார். அவற்றுள் ஒன்றனை மட்டும் ஈண்டுக் குறிப்பிடுதல் சாலும். சென்னைக் கந்தகோட்டம் முருகனைப் பற்றிய தெய்வமணி மாலையில், நம்முடைய குரங்கு மனத்தின் இயல்பினைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''சென்னையில் கந்தகோட்டத்தில் வளர் தலமோங்கு கந்தவேளே! தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி சண்முகத் தெய்வ மணியே! என்னுடைய மனம் ஒரு குரங்கு; வெறும் குரங்கு அன்று, பெரும் முரட்டுக் குரங்கு; அது பேய் கொண்டு திரிகின்றது; கள்ளுண்டு கலங்குகின்றது, கோலினால் மொத்துண்டு உழல்கின்றது; பித்துண்டு அலைகின்றது; அம்மட்டுமோ? குயவனின் சக்கரம்போலச் சுழல்கின்றது. சிறுவர்கள் விளையாடுகின்ற பந்துபோல மேலும் கீழுமாக மாறிமாறித் தாவிச் செல்லுகின்றது. புலி சிங்கம் போன்ற கொடிய விலங்குகளைப்போலச் சீறிப் பாய்கின்றது. பெரிய சூறுவளிக் காற்றில் சிக்கிச் சுழல்கின்ற காற்றாடியைப்போல வானத்தில் பறக்கின்றது. இதனைக் காலவடிவம் என்பதா? இந்திர சாலவடிவம் என்பதா? அல்லது என்னுடைய கர்ம வடிவம் என்பதா? என்று தெரியவில்லை. உன்னுடைய திருவடிகளை நினையாமல் பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை என்னும் மூவகை ஆசைகளில் அழுந்தித் திரியும் இம்மனத்தால், யான் படுகின்ற கொடுமைகளை என் வாயினால் எடுத்துச் சொல்வது இயலாது. யான் என் செய்வேன்! என் செய்வேன்!'' என்று, இராமலிங்க வள்ளலார் நம்முடைய குரங்கு மனத்தின் இயல்புகளை விவரித்துப் பாடுகின்றார்.

''பேய்கொண்டு கள்ளுண்டு கோலினால் மொத்துண்டு
பித்துண்ட வன்கு ரங்கோ;
பேசுறு குலாலனாற் சுழல்கின்ற திகிரியோ?
பேதைவிளை யாடு பந்தோ?
காய்கொண்டு பாய்கின்ற வெவ்விலங் கோ, பெருங்
காற்றினால் சுழல் கறங்கோ,
காலவடிவோ, இந்த்ர சாலவடிவோ, எனது
கர்மவடி வோஅறி கிலேன்''

**தெய்வ மணி மாலை :**

இங்ஙனம் குரங்கு மனத்தின் கொடுமைகளை நன்கனம் விவரித்த வள்ளலார், கந்தகோட்டத்து முருகப் பெருமானிடம் ஒரு வேண்டுதல் புரிகின்றார். உலகத்தில் பெரும்பாலான ஞானிகள், மனை மக்கள் சுற்றம் என்னும் மாய வலையிலிருந்து விடுபடுதலையே, பெரிதும் விரும்பியுள்ளனர். இவ்வுலக வாழ்வும் மனிதப் பிறப்பும் வேண்டாம், எனவே பெரிதும் வெறுத்துப் பாடியுள்ளனர். ஆனால் ''மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'' என நாயன்மார்களில் திருநாவுக்கரசரும், ''இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்'' என்று ஆழ்வார்களில் தொண்டரடிப் பொடியாழ்வாரும்தான் பாடியுள்ளனர். அதுபோல நம்முடைய வள்ளற் பெருமானும், இல்லற வாழ்வின் தொல்லைகளை நீக்கியருள்க என்று பாடிய ஏனையரைப் போல இல்லாமல், நல்லதோர் இல்லற வாழ்வை முருகப் பெருமான்பால் நயந்தினிது வேண்டுகின்றார்.

''அலையிலாச் சிவஞான வாரியே! ஆனந்த
அமுதமே! குமுத மலர்வாய்
அணிகொள்பொற் கொடிபசுங் கொடிஇரு புறம்படர்ந்து
அழகுபெற வருபொன் மலையே!
தலைவர்புகழ் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே!
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே!''

**வள்ளலார் விரும்பும் மனைவாழ்வு :**

இல்லற வாழ்விற்கு அன்புமிக்க மனைவி ஒருத்தி வேண்டும். அவள் உயர் குலத்தில், உயர் குடியில் தோன்றியவளாக இருத்தல் வேண்டும் என்றும், வள்ளலார் விரும்புகின்றார். அம்மட்டோ! நல்ல புதல்வன், செல்வம், துணைவன், நண்பன், வேலையாள், வசதியான வீடு ஆகியவையும் வேண்டும் என்கின்றார். நிராசை (விருப்பமின்மை), அதுவும் 'நிலையுறும் நிராசை' ஆகிய மனைவியும், சாந்தம் என்னும் புதல்வனும், உதார குணம் என்னும் நல்ல செல்வமும், அறியாமை இருளை நீக்குகின்ற அறிவு ஆகிய துணைவனும், நிராங்காரம் (செருக்கு இன்மை, பணிவுடைமை) என்னும் நண்பனும், சுத்தம் (தூய்மை) மிகுந்த மனமென்னும் ஏவலாளனும், சகலம் (பகல்), கேவலம் (இரவு) இல்லாத நல்ல வசதியான இடமாகிய வீடும், ஆகியவைகளைப் பெற்று

இன்பமாக வாழ்கின்ற வாழ்வை அருளுவாயாக! என்பது, இராமலிங்க வள்ளலாரின் வேண்டுகோள்.

''நிலையுறு நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடு,
நிகழ்சாந்த மாம்பு தல்வனும்,
நெறிபெறும் உதாரகுணம் என்னுநற் பொருளும், மருள்
நீக்கும் அறிவாந் துணைவனும்,
மலைவறு நிராங்கார நண்பனும், சுத்த முறும்
மனமென்னும் நல்லே வலும்,
வருசகல கேவலம் இலாதஇடமும் பெற்று,
வாழ்கின்ற வாழ்வ ருளுவாய்!''

சிறந்த இனிய இந்தத் தெய்வமணிப் பாடலில் ''சுத்தம் உறும் மனம் எனும் நல் ஏவலும்'' என்று வள்ளலார் குறித்திருப்பது, இங்குச் சிறப்பாகக் கருதற்பாலது. மனம் சுத்தமாக இருக்க வேண்டும், நாம் அதற்கு ஏவல் செய்யாமல் நமக்கு அது ஏவல் செய்ய வேண்டும், என்று கூறியிருப்பது சிந்திப்பதற்குரியது. இதனையே ஏவல் மனம் அல்லது தூய்மை மனம் என முன்னர் கண்டோம்.

**தூய்மை மனம் :**

இத்தகைய தூய்மை மிக்க மனம்தான், கூத்தப் பெருமான் எழுந்தருளி விளங்குதற்குரிய உண்மையான கோயிலாகும். இம் மனமாகிய கோயிலை நாம் தூய்மையாக வைத்திராமல், அதன்கண் காமம் வெகுளி மயக்கம் முதலிய அழுக்குகளை மிகுதியாகச் சேர்த்து வைத்திருப்பதனால்தான், கூத்தப் பெருமான் நம் மனக் கோயிலில் இராமல், தில்லைக் கோயிலுக்குச் செல்ல வேண்டியவனாகி விட்டான். நாம் நம் உடம்பின் புறத்தே அழுக்கெதுவும் படாதபடி, எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக் கொள்ளுகின்றோம். ஆனால் மனத்தில் ஏராளமான அழுக்குகளை நிரப்பி வைத்துக் கொண்டிருக்கின்றோம். நம்முடைய தலைமுடி முதலியன கோணலாக இல்லாமல் பல வகைகளில் முயன்று கண்ணாடியின் முன் நின்று சரி பார்த்து அழகுபடுத்திக் கொள்கின்றோம். ஆனால் மனத்தை அங்ஙனம் கோணல்கள் இல்லாமல் அழகுபடுத்தி வைத்துக் கொள்ள நினையாமல், அருவருக்கத் தக்க நிலையில் வைத்துக் கொண்டிருக்கின்றோம். மனக் கோணல்களையெல்லாம் போக்கி, நாம் நம்முடைய மனத்தை ஒரு சிறந்த கோயிலாக மாற்றியமைக்க வேண்டும்.

**சோதி தரிசனம் :**

நம் தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான கோயில்கள் இருப்பினும், மூன்று கோயில்கள் மிகவும் முதன்மையானவை. அவை திருவொற்றியூர், தில்லை, திருவாரூர் என்பனவாகும். 1300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த திருநாவுக்கரசர் ''திசைஎட்டும் தெரிப்பதற்கு முன்னே பின்னே திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே'' என்று திருவாரூர்க் கோயிலின் பழமையைக் குறிப்பிடுகின்றார். பழமை மிக்க இம் மூன்று கோயில்களும், வள்ளற் பெருமானின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தவை. திருவாரூரிலும் திருவொற்றியூரிலும் தியாகராசரும், தில்லையில் நடராசரும் எழுந்தருளி விளங்குகின்றனர். தொன்மை மிக்க இம் மூன்று கோயில்களிலும், பண்டைக்காலம் தொட்டே ஒளி வழிபாடு நிகழ்ந்து வருகின்றது. அதனாலேயே வள்ளற் பெருமான் சோதி தரிசனம் என்னும் ஒளி வழிபாட்டினையே நமக்குப் பெரிதும் அறிவுறுத்தியருளினார்.

ஒளி வழிபாடு ஒரு நாட்டார்க்கோ, ஒரு இனத்தார்க்கோ, ஒரு சமயத்தார்க்கோ மட்டுமே உரியதன்று. எல்லாருக்குமே உரியதானதாகும். ஒளி வழிபாட்டை வற்புறுத்தியே வள்ளலார் ''அருட்பெருஞ் சோதி, தனிப் பெருங்கருணை'' என்னும் பொருள் செறிந்த திருமொழியை நமக்கு வழங்கியருளினார். 'அருட்பெருஞ் சோதி' என்பது எல்லாம் வல்ல சிவம் ஆகிய தந்தை; 'தனிப்பெருங் கருணை' என்பது அருளே உருவமாகக் கொண்ட சக்தியாகிய தாய். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். அருட்பெருஞ் சோதி தரிசனம், ''அம்மையப்பர்'' வழிபாடே யாகும். ''அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்று அறிக; அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர்'' என்பது சிவஞானச் செல்வர்கள் கூறிப்போந்த திருமொழியாகும்.

**முடிவுரை :**

இத்தகைய அருட்பெருஞ் சோதி தரிசனத்தை, வடலூர்ப் பெருவெளியில், சத்திய ஞான சபையில், தைப் பூசத் திருநாளில், இராமலிங்க வள்ளற் பெருமான், நம்மனோர் உய்யும்பொருட்டு நிகழும்படி செய்தருளினார். இந்த அருட்பெருஞ் சோதி தரிசனத்தை இங்குப் புறத்தே மட்டுமல்லாமல், நம்முடைய மனத்திலும் நாம் கண்டு தரிசித்தல் வேண்டும். அத்தகைய தரிசனத்தை நாம் பெற வேண்டுமாயின், நம்முடைய மனத்தில் எத்தகைய சாதி மத நாடு நிற மொழி இன பேதங்களும் இருத்தல் கூடாது. எல்லா உயிர்களையும் நம்முடைய உயிரைப் போலவே எண்ணி, ஒத்த உரிமையளித்து, அவற்றை நாம் உவந்து

போற்றுதல் வேண்டும். அத்தகைய சிறந்த மனத்தை நாம் பெற்றுவிட்டால், நாம் ஒப்புயர்வற்ற வித்தகர்கள் (ஞானிகள்) ஆவோம்! நம்முடைய உள்ளத்தில் கூத்தப் பெருமான் சுத்த சித்துருவாய் எழுந்தருளித் திருநடம் புரிந்து உறைவான். இவ்வுண்மையினை,

''எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்
யாவர்? அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம்எனநான் தேர்ந்தேன்; அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் செய்திட என்
சிந்தைமிக விழைந்த தாலோ!''


என வள்ளற் பெருமான், தெள்ளத் தெளிவாக அருளிச் செய்திருத்தல் காணலாம். எனவே, நாம் நம்முடைய பேதை மனம்—குரங்கு மனம் ஆகியவற்றைக் கூத்தப் பெருமான் திருநடம் புரிவதற்குரிய தூய்மை மனம் ஆக்கிக் கொண்டு, வையத்து வாழ்வாங்கு வாழ முற்படுவோமாக!

வாழ்க வள்ளலார் புகழ்!

வளர்க வள்ளலார் நெறி!

அருட்பெருஞ் சோதி! தனிப்பெருங்கருணை!

—ஆசிரியர்



மதுரை அருள்மிகு. மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலில், திருவாலவாய்ச் சைவசித்தாந்த சபையின் சார்பில், பொற்றாமரைக் குளக்கரையின் சுவரில், சிவஞானபோதக் கல்வெட்டுத் திறப்பு விழா, திருப்பனந்தாள் காசிமடத்தின் அதிபர் தவத்திரு. முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் நன்கொடையினால், தமிழவேள் திரு. பி. டி. ராஜன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. (26—1—74).

# அருள் வெளி

மாட்சிமிகு திரு எஸ். மகராஜன், B.A., B.L. அவர்கள்,
நீதிபதி, உயர்நீதி மன்றம், சென்னை.

''காலம் ஒரு நிறுத்தம் பெற வேண்டும்'' (Time must have a stop) என்ற நூலிலே ஆல்டசு அக்சிலி (Aldous Huxley) உடலுக்கும், உயிருக்கும் உள்ள உறவை, இந்து சம்பிரதாயத்தையொட்டி விளக்கியிருக்கிறார். மனிதன் சாதாரணமாக இரண்டு மண்டலங்களிலே சஞ்சாரம் செய்கிறான். அவனுடைய உடம்பு பௌதிக உலகத்திலே வாழ்க்கை நடத்துகிறது. ஆனால், அந்த உடலுக்குள்ளே இருக்கும் ஆன்மா சூட்சும உலகத்திலே சஞ்சரிக்கிறது. மேற்சொன்ன நூலிலே யூஸ்டஸ் பார்னக் (Eustace Barnack) என்ற ஓர் அருமையான பாத்திரத்தைச் சிருட்டித்திருக்கிறார் அக்சிலி. அவன் உடம்பே பிரதானம் என்று நம்புகிறான். ஐம்புலன் மூலமாக அனுபவிக்கக்கூடிய இன்பம் ஒவ்வொன்றையும், மிச்சம், சொச்சம் வைக்காமல் அனுபவிக்கிறவன். ''இன்று கிடைக்கக்கூடிய சிற்றின்பத்தை நாளை நுகரலாம் என்று வாயிதாப் போடாதே'', என்பதே அவனுடைய சித்தாந்தம். விலாப்புடைக்கச் சாப்பிடுகிறான்., வெறிக்க வெறிக்க மது மாந்துகிறான், திகட்டத் திகட்டக் கலவிக் கடலிலே மூங்கி முழுகுகிறான், மாய்கிறான். மாய்ந்தபின் அவனுடைய ஆன்மா விண்ணுலகத்தின் ஆனந்த லகரியிலே இரண்டறக் கலக்க மறுக்கிறது. உடல் மூலம் பெறக்கூடிய சிற்றின்பத்தை, உடம்பை இழந்தபின், பெற முடியாமல் அவன் ஆன்மா வாடி வதங்குகிறது. உடம்பிருக்கும் போதாவது மனிதன் செயலில் ஈடுபட்டுத் தன்னுடைய இன்னல்களையெல்லாம் மறக்க முடிகிறது. ஆனால், உடல் கழன்று விழுந்த பிறகோ, மறதி என்ற அருமருந்து அவனுக்குக் கிட்டுகிறதில்லை. ஆசையும், அதைப் பூர்த்தி பண்ண முடியவில்லையே என்ற ஏக்கமும் ஏமாற்றமுமே ஆன்மாவின் இணைபிரியாத நண்பர்களாகி விடுகிறார்கள். ஆனால், ப்ருனோ ராண்டினி (Bruno Rontine) என்ற மற்றொரு பாத்திரம் இதற்கு நேர்மாறானவன். உடல் என்பது ஆன்ம வளர்ச்சிக்காக நமக்கு இறைவன் அருளிய வரப்பிரசாதம், விடுதலையடைவதற்காக நமக்கு ஏற்பட்ட கருவி அல்லது சாதனம், லட்சியத்தை மறந்து சாதனத்தையே லட்சியமாகக் கொள்வது மடமை என்று அவன் கருதுகிறான்.

இந்த சித்தாந்தத்தைத்தான் திருமூலர் பல நூற்றாண்டுகளுக்கு முன் எடுத்து விளக்கியிருக்கிறார். சுவானுபவத்தால் ஏற்பட்ட அதிகாரத்தோடு விளக்கியிருக்கிறார். உடல், உயிரை உய்விக்க வந்த கருவி என்பது உண்மைதான். ஆனால், அது நம்மைப் படுத்தி வைக்கிற பாடு இருக்கிறதே, அதிலே நாம் நம்மையும், நமது உயிரையும் மறந்து, உடல் தத்துவத்திலேயே முழுக்க, முழுக்க ஈடுபட்டு விடுகிறோம்.

உதாரணமாக, காமம் என்ற சக்திதான் எப்படியெல்லாம் மனிதனை ஆட்டி வைக்கிறது! உடம்பை மாத்திரம் அல்ல, உணர்ச்சியையும், அறிவையுமே பேயாட்டம் ஆடச் செய்துவிடுகிறது. திருமூலர்கூடக் காமச் சூறாவளியிலே அகப்பட்டு மூக்கறுபட்டவர் தான்.

''வையகத்தே மடவா ரொடும்கூடி என்
மெய்யகத்தோர் உளம் வைத்த விதிஅது''

என்று சொல்லி, அந்தப் பொல்லாத விதியைச் சுட்டிக் காட்டிப் பெருமூச்சு விடுகிறார். ஆனால் காமத்தினால் நன்மையும் ஏற்படுகிறது என்பதைத் திருமூலர் உணர்ந்தவர். காலத்தால் பீடிக்கப்பட்டவன் தன் உடம்பை மறந்து மற்றொரு உடம்பை நினைத்து நினைத்தாவது உருகுகிறான். அந்த மட்டுக்கும் தன் உடம்பின் பிரதானம் கரைந்து குறைகிறது. ஈரேழு உலகங்களும், சந்திர சூரியர்களும், ஏன்! பிரபஞ்சம் முழுவதுமே, தன்னைச் சுற்றி இயங்குவதாக நம்பினான் இராவணன். ஆனால், சானகியிடத்தில் அவனுக்கு ஏற்பட்ட காமம், அவனது ஆணவத்தைச் சிதறடித்து, தெம்பை அடக்கி ஒடுக்கி, பத்துத் தலைகளோடும் அவள் கால்மாட்டிலே விழுந்து பணியும்படி செய்யவில்லையா? ஆகவே, இந்தப் புலால் துருத்தியே பிரபஞ்சம் என்று கருதுகிறவனைக்கூட, அதற்குப் புறம்பாயிருக்கும் பொருள்களிடத்திலேயும் ஈடுபடும்படி செய்துவிடுகிறது காமம். சிற்றின்ப அனுபவத்திலே சிறிது நேரமாவது, மனிதன் காலம், தூரம் என்ற உணர்ச்சிகளற்று அகண்டாகாரத்தில் அமிழ்ந்துவிடுகிறான்.

''புணர்ச்சியுள் ஆயிழைபால் நட்பும்போல
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்க வல்லார்''

என்று காமுகனையும் யோகியையும் சமநிலையில் வைத்துப் பாராட்டுகிறார் திருமூலர். காமரசத்தை அனுபவிப்பவர்கள், கட்குடியர்களைப் போல, கேவலம் பழக்கத்துக்கு அடிமையாகி விட்டால் கேடு விளைவது நிச்சயம். பழக்கத்தின் கொடுங்கோன்மையிருக்கிறதே, அது உடலோடு நின்றுவிடுவதில்லை. மனசையும், ஆவியையுமே விலங்கிட்டுச் சீரழிக்கிறது. காமத்தால் கிடைப்பது துன்பமாக இருந்தாலும், பழக்கத்தை உதறித் தள்ளமாட்டாமல், மனிதன் அதில் ஈடுபடுகிறான்.

''ஆத்த மனையாள் அகத்தி லிருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்(கு) இடருற்ற வாறே''

கைமேலிருக்கும் பலாவின் கனியை அனுபவிக்கும் திறமையை இழந்துவிட்டு, ஈச்சம்பழத்தை நினைத்து, நினைத்து சுவப்பனவத்தையில் இருப்பார்கள். ஈச்சம் பழமேன்? வேப்பங்காயை நினைத்துக்கூட அங்கலாய்ப்பார்கள். பழக்கத்தின் கொடுமை இது. இப்பேர்ப்பட்ட பழக்கத்துக்கு இளக்காரம் கொடுத்துவிட்டாலோ, அது சைத்தானைப்போல, நம்மை விடாப்பிடியாகப் பிடித்துக்கொள்ளுகிறது. பிரபஞ்சம் முழுவதும் நமது உயிருக்குச் சொந்தம் என்ற அகண்ட உணர்வு மாறி, அது வேறு, நாம் வேறு என்ற வேற்றுமைப் புத்தி வலுப்பெறுகிறது.

ஆனால் காமத்தினால் விளைவதெல்லாம் துன்பம் என்று ஒப்பாரி வைப்பதும் தவறு. அதற்கு அழிக்கும் சக்தி எவ்வளவு இருக்கிறதோ, அவ்வளவு ஆக்கும் சக்தியுமிருக்கிறது. காமத்தின் உதவியால்தான் மனிதன் காதல் உலகத்தை அடைய முடிகிறது.

''நம்பியைக் காண நங்கைக்கு
ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறும்
குரிசிற்கும் அன்ன தேயாம்''

காதலால் ஏற்படுகிற ஆயிரம் நயனத்தையும், ஆயிரம் இதயத்தையும் வைத்துக்கொண்டு உலகத்தை உணர்ச்சிப் பெருக்குடன் பார்க்கும்போது, நம்முடைய எண்சாண் உடம்பு வெடிபட்டு, விட்டு வாங்குகிறது; உள்ளே சிறைப்பட்டது போலிருந்த ''செங்கட்சீயம்'' விசுவரூபக் காட்சியளிக்கிறது. இரணியனுடைய காமத்துக்கும், இராவணனுடைய காமத்துக்கும் அடிப்படையான பேதமொன்றுண்டு. காமானுபவத்தில்கூட இரணியன் தன்னுடைய ஆணவத்தை மறக்க இயலாதவனாயிருந்தான். தன்னுடைய வீரத்திலும், வாள்வலியிலும் அவனுக்கிருந்த இறுமாப்பு, அவனது ஆன்ம வளர்ச்சிக்குப் பெரிய இடையூறாக இருந்தது.

''வாளினைத் தொழுதல் அல்லால்
வணங்குதல், மகளிர் ஊடல்
நாளினும் உளதோ, என்னா
அண்டங்கள் நடுங்க நக்கான்''

''மகளிரோடு ஊடும் காலத்தில்கூட நான் அவர்களை வணங்கியதில்லையே. இந்த அரியையா வணங்கச் சொல்லுகிறாய்! என்று பிரகலாதனைப் பார்த்து நகைக்கிறான். ஆனால், இராவணனுடைய மனமோ, காதலால் பண்பட்டது. தன்னை மறந்த லயத்தில் அவனை அமுத்திவிட்டது காதல். ஆகவே, காதல் மூலம் அவன் உடலை மறந்து, தன்னை மறந்து, பேத நிலையற்று, பூரணத்தோடு ஐக்கியமடைந்தான், சூர்ப்பணகையைப் போல. காமத்துக்கு இரண்டு வித சக்தியுமிருக்கிறது. அதன் உதவியால் மனிதன் உடலை மறந்து, உயிரை வளர்க்கலாம்; உயிரை மறந்து, உடலையும் வளர்க்கலாம்.

காமத்தைக் காட்டிலும் கொடியது கோபம் அது எப்பொழுதுமே நமக்கும், மற்றவர்களுக்கும் இடையே பேதம் கற்பித்து, விரோத பாவத்தை மூட்டி, ஐக்கிய புத்தியை, பிரம பாவனையைக் கெடுக்கிறது; மனசைக் கல்லாக்கி மருளை ஊட்டுகிறது. ஆகவேதான், திருமூலர் வெகுளியை அறவே வெல்ல வேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகின்றார்.

''வெல்லு மளவில் விடுமின் வெகுளியை
செல்லு மளவும் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளொடு தூங்கினால்,
கல்லும் பிளந்து கடுவெளி யாமே''

என்று பாடுகிறார்.

காமத்தையும், கோபத்தையும் விடக் கொடுமை வாய்ந்தது லோபம். காமமும் கோபமும் உடலிலே ஏற்படுகிற சேட்டைகள். பசி ஏற்படும்போது, உணவு அருந்தினால் நீங்கிவிடும்; பசியால் ஏற்படுகிற மனக்குழப்பமும் நீங்கிவிடும். காமத்தையும், கோபத்தையும் அவ்வாறே தீர்த்துக் கொள்ளலாம். ஆனால், பண ஆசை என்பதைத் திருப்தி செய்வது கடின சாத்தியமான காரியம். ஏனென்றால் அது உடம்பைப் பொறுத்ததல்ல, மனசிலேயே வேரூன்றி வளர்வது; திருப்தி செய்ய முடியாதது. ஆகவே, அது இடைவிடாமல் மனிதனுடைய நடத்தையைப் பாதித்துக் கொண்டேயிருக்கிறது. அன்பையும், இரக்கத்தையும் அது கொல்லுகிறது; திருமூலரின் கோபத்துக்கு இலக்காகிறது.

''வட்டிகொண் டீட்டியே, மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயனறி யாரே''

என்று அவர்களைச் சபிக்கிறார் திருமூலர். ஆகவே, காமக் குரோத லோபங்களை அடக்கா விட்டால் மனித மனம் மெய்ப் பொருளோடு ஐக்கியம் பெற முடியாமல் விகற்பமடைந்து அல்லலுறுகிறது.

விண்ணுலக யாத்திரையிலே வளர்ச்சி யுற்றுத் தடைப்பட்டு நின்றது உயிர். உடல் மூலம் கர்மங்கள் செய்து, கர்மங்கள் மூலம் அனுபவம் பெற்று, அனுபவத்தின் மூலம் ஆன்ம வளர்ச்சியடைய வேண்டும் என்று ஓர் அற்புதமான உடலைக் கொடுத்தான் இறைவன். ஆனால், உடல் என்ன செய்கிறது? தன்னகத்தே வந்தடைந்த உயிரை ஏமாற்றி, காமக் குரோத லோபங்களின் உதவியால், ''உயிரைக் காட்டிலும் உடலே பிரதானம்'' என்ற மயக்கத்தை ஊட்டி விடுகிறது. ''இன்று கிட்டுகிற சிற்றின்பத்தை நாளைக்கென்று வாயிதாப் போடாதே'', என்ற பல்லவியை யூஸ்டஸ் பார்னக்கோடு நாமும் சேர்ந்து பாடுகிறோம்.

*



கருவூர் ஆனிலையப்பர் திருக்கோயிற் குடநீராட்டு விழாக் காட்சி (3—2—74)

# வள்ளலாரும் மாணிக்கவாசகரும்

திருக்குறள் பீடம் குருகுலம் அழகரடிகள்,
மதுராந்தகம், செங்கை மாவட்டம்.

மாணிக்கவாசகரும் வள்ளலாரும் காலத்தால் வேறு பட்டவர். ஆயினும், இவர்களிடையே ஓர் ஒற்றுமை உண்டு. அதுதான் 'சன்மார்க்கம்' என்பது. இருவரும் சன்மார்க்க நெறியினர். வள்ளலாருக்கு மாணிக்கவாசகரிடத்தில் மிக்க ஈடுபாடு. மாணிக்கவாசகர் நடந்து காட்டிய சன்மார்க்கத்தை வள்ளலார் தாமும் கடைபிடித்து நன்கு விளக்கி அதுதழைக்க நிலையங்கள் நிறுவியும் உதவியிருக்கிறார்.

முன்னோர் மொழிகளுக்கும் கருத்துக்களுக்கும் விளக்கங்கள் கொடுப்பதில் வள்ளலார் மிகவும் கருத்தூன்றியிருக்கிறார். வள்ளலார் ஆற்றல் அந்நிலையிலும் சிறந்து விளங்குகிறது. அருட்பாவில் இதற்குப் பல எடுத்துக் காட்டுகள் கிடைக்கின்றன. 'சன்மார்க்கம்' என்பது வள்ளலாரால் மிகவும் விளக்கம் பெற்றிருக்கிறது.

**ஞான சன்மார்க்கம் :**

'சன்மார்க்கம்' என்பது 'சீலம்', 'நோன்பு' 'செறிவு' என்னும் முதல் மூன்று நிலைகளுக்கும் அப்பாற்பட்ட நான்காவதாகிய 'ஞானம்' என்னும் தெளிவு நிலை! அதனால், 'ஞானசன்மார்க்கம்' என்றும் இது வழங்கும். 'ஞான சன்மார்க்கமே தெளிமின்' *(6 : 104 : 12)* என்று வள்ளலார் விளக்கினார்.

**சுத்த சன்மார்க்கம் :**

தூய்மை என்பது அவாவின்மை என்றார் திருவள்ளுவர் ; ஞான நிலை பற்றற்ற தன்மையுடையதாதலின் மிகவும் தூய்மையானது; அதாவது மிகவும் உயர்ந்த (அதீதமான) ஞானத்தின் ஞானமான உச்ச நிலையுடையது. இத் தூய சன்மார்க்கம் இதனால் 'சுத்த சன்மார்க்கம்' என்று வள்ளலாரால் இனிது விளக்கப்பட்டது. ''சுத்த' என்னும் அடைமொழி, பல இடங்களில் இங்ஙனம் உயர்ந்த கடந்த மிகத் தூய நுண்ணிய தனி நுகர்வு நிலைக்கு அவரால் வழங்கப்பட்டிருக்கிறது.

''தருணம் இஞ்ஞான்றே சுத்த சன்மார்க்கத்
தனிநெறி உலகெலாந் தழைப்பக்
கருணையும் சிவமுமே பொருளெனக் கருதும்
கருத்துமுற் றெம்மனோர் களிப்ப''
*(6: பிரிவாற்றாமை, 18).*

**சிவ சன்மார்க்கம் :**

தூய இந் நுகர்வு, மற்றவற்றைப் போல் மயங்குவதில்லை; எப்போதும் மங்கலமாகவே இருக்கும். மங்கலம் என்பது மங்காதது. வாடாதது ; கிளர்ச்சியும் வளர்ச்சியும் பொலிவும் இருந்து கொண்டே இருக்கும். மங்குவது மதிப்புக்கு உரியதாகாது. அழிவு உடையது; நிலையில்லாதது; ''மங்குவா ரவர் செல்வம் மதிப்போமல்லோம்'' என்றார் அப்பர் பெருமான். ''யாம் மங்கலம்'' (மங்க மாட்டோம்) என்னும் மங்காத நிலையில் மரணமிலாப் பெருவாழ்வில், விளங்குவோர் சன்மார்க்கிகள்.

மங்கலத் தன்மையைச் 'சிவம்' என்றும் சொல்வதுண்டு; அழியாத மங்கல நிலை கடவுள் நிலை ; கடவுள் மங்கலமானவர் ; எல்லாம் வல்ல தனிப் பெருங் கடவுளை முன்னோர் இக் காரணத்தால் 'சிவம்' என்று பெரிட்டு அழைத்தனர். மரணமிலாப் பெரு வாழ்வாகிய வாடாத மங்கலத்தை அளிக்கும் 'சன்மார்க்கம்' என்பது, 'சிவ மார்க்கம்' என்றே இதனால் கூறப்படும்; 'சிவ சன்மார்க்கம்' என்றும் வழங்கப்படும். இப்படி இரு வகையாலும் வள்ளலார் விளக்கி வழங்கி இதனைச் சிறப்பித்தார்.

''செப்பாத மேல்நிலைமேல் சுத்த சிவ
மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல்
வேண்டும்''

''துடிசேர்எவ் வுலகமும்எத் தேவரும்எவ்
வுயிரும்
சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றிடுதல் வேண்
டும்''
*(6: சுத்த சன்மார்க்கவேண்டுகோள் 1,6)*

சன்மார்க்கப் பெரு நெறியினராகிய மாணிக்க வாசகரை வள்ளலார், ''வாட்டமிலா மாணிக்கவாசக'' என்று மங்கலக் கருத்தில் அழைத்த தனிச் சிறப்பும் இங்கு நினைவு கூறுதற்குரியது.

**சமரச சன்மார்க்கம் :**

சன்மார்க்கம் என்னும் சொல் ‘உண்மை நெறி’ என்னும் பொருளுடையது. உண்மை, உள்பொருளாகிய இறைவனை உணர்த்தும். உண்மை என்பது அனைவர்க்கும் பொதுவானது. கொள்கைகளால் நிலைகளால் படிமுறைகளால் பயிற்சிகளால் வேறுபட்டவர்கள் எல்லாரும் உள்பொருளை இறுகப் பற்றியே அவரவர் நெறியில் ஓங்க வேண்டியிருக்கிறது. ஆதலால் சன்மார்க்கம் யாவர்க்கும் பொதுவானது. அதனால் இயல்பாகவே ‘‘சமரச சன்மார்க்கம் பெற்ற வியப்பிதுவே’’ என்று வள்ளலார் அதனை எடுத்துக் காட்டினார்.

**சத்திய சன்மார்க்கம் :**

‘சன்மார்க்கம்’ என்னும் பெயரில் ‘சத்’ என்பது உள்பொருளைக் குறிக்கும், உள் பொருள் ‘சத்’ என்றால் அதன் இயல்பு ‘சத்தியம்’ எனப்படும். உள்பொருளைப் பின்பற்றுவதென்றால், அதன் இயல்பைப் பின்பற்றுவதென்பதுதான் பொருள். ஆதலால், சன்மார்க்கம் ‘சத்திய சன்மார்க்கம்’ எனவும் விளக்கம் பெற்றது. ‘‘சத்திய சன்மார்க்கச் செங்கோல் அளித்தது பாரீர்’’ *(6 : 146 :4)*.

**ஷடாந்த சன்மார்க்கம் :**

இனி இச் சன்மார்க்கம் ‘ஷடாந்த சன்மார்க்கம்’ என்பதும் வள்ளலார் கருத்து. ஆறும் திருமுறை இறுதியில் வள்ளற் பெருமான், ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சங்கம் என்பதற்கு விரித்துதவிய விளக்கம் காணப்படுகிறது. அதில், சன்மார்க்க சங்கத்தை ‘‘எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவு நூல் முடிபான நான்காவது மார்க்கத்தை அனுட்டிக்கின்ற கூட்டம்’’ என்று தெளிவாக விளக்கிக் கொண்டு ‘மார்க்கம் நான்காவன’, தசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என விரித்து, இவற்றில் உயர்ந்ததாகிய சன்மார்க்கத்தை எடுத்து, ஷடாந்த, சமரச, சுத்த, சிவ சன்மார்க்கம் என்று தக்க அடைமொழிகள் தந்து தெளிவுபடுத்தத் தொடங்கி, ‘ஷடாந்தம்’, ‘சமரசம்’, ‘சுத்தம்’ முதலியவற்றின் கருத்துக்கள் இன்னவை என்று வள்ளற் பெருமான் காட்டிச் செல்கின்றார்.

ஷடாந்தம் என்பன, ‘வேதாந்தம்’, ‘சித்தாந்தம்’ முதலிய ஆறு அந்தங்களாகிய மதங்கள் எனவும், ‘சைவம்’ முதலிய சமயங்களின் கொள்கைகள் எனவும், சமயங்கள் மதங்கள் என்னும் இவற்றில் தாச மார்க்கம் முதலிய நுகர்வு நெறிகளாகிய மார்க்கங்கள் நான்கும் உள்ளன எனவும், இவற்றில் ‘சன்மார்க்கம்’ என்பது உச்ச நிலையானது எனவும் விளக்கியருள்வார்.

சமயத்தில் மதம் முக்கியம், மதத்தில் மார்க்கம் முக்கியம். மார்க்கத்தில் சன்மார்க்கம் தலையானது என்றும் தெளிவிப்பார். சமயவொழுக்கமுடையோர் சன்மார்க்கத்தை எட்டும்போது சமய சன்மார்க்கம் எனவும், மதச் சிறப்பினர் சன்மார்க்கத்தை எய்தும்போது மத சன்மார்க்கம் எனவும் பெயராதலைப் பிரித்துக் காட்டுவார்.

இனிச், சன்மார்க்கம் என்பதும் நான்கு வகைப்பட்டு, ஞானத்தில் ஞானமாய உயரும் போது, தூய கடந்த சுத்த சன்மார்க்கமாகும் என்று ஒரு விளக்கம் கொடுத்துக்கொண்டு, இப் பெரிய நிலையை அடைவோர் சுத்த தேகிகள் என்றும் எடுத்துக் காட்டுவார். வாட்டமில்லாத மாணிக்கவாசகரை இத்தகைய அநீதி சன்மார்க்கத்தின் சாத்தியராய், அதாவது கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என்னும் ஞான சாதனங்கள் கைவந்து அவற்றிற்கு அப்பாலான ஞானத்தில் ஞான முதிர்வுடைய ஞான ஞான இன்புருவினராய், (சுத்த தேகியாய்) விளங்குவோர் என்று போற்றினார், வள்ளலார்! ‘‘அருளுளுருவம் பெற்ற பின்னர் இன்புருவமாயினை நீ எழில் வாதவூர் இறையே’’ என்பது அவர் துதி!

மாணிக்கவாசகப் பெருமானும், தாயுமானுர் முதலிய சான்றோர்களும் பொதுவாகச் ‘சன்மார்க்கம்’ என்று கூறியதில், ‘‘வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யானொருவன் அலனோ’’ என்று தாம் உரிமை கொண்டாடியபடி அப்பெரியோர் வழி வந்த இராமலிங்க அடிகளார், சன்மார்க்கம் என்பது இவ்வளவு நுண்ணிய உயர்நிலைகளைத் தன்னுட் கொண்டதென்று விளக்க முற்பட்டு, அதனை ஷடாந்த சமரச சுத்த சத்திய சிவ சன்மார்க்கம் என்று, இங்ஙனமெல்லாம் உரிய அடைமொழிகள் மூலம் விளக்கியருளும் அழகையும் தெளிவையும் கருணையையும் என்னென்பது! அப் பெருமான் கருணையில் தோய்ந்து உலகம் உய்தி கூடுவதாக!

*

# வள்ளலார் கண்ட முருகன்

'சன்மார்க்கச் சான்றோர்'

திரு. நா. மகாலிங்கம் அவர்கள், B.Sc., M.I.E.,

வள்ளலார் ஓதாதுணர்ந்த ஞானி என்பது நாமனைவரும் அறிந்ததே. ஐந்தாம் வயது முதல் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடத்தில் இவரைக் கல்வி கற்க விட்டபோது கல்வியில் இவருக்குக் கருத்தூன்றவில்லை. இறைவன் மேல் தோத்திரப் பாடல்களைப் புனைந்து பாடிக் கொண்டிருந்தார். இவ்வாறு இவர் பாடுவதை ஆசிரியர் சபாபதி முதலியார் அறிந்ததும் இவரது பெருமையை உணர்ந்து இவருக்குக் கல்வி கற்பிப்பதை நிறுத்திக் கொண்டார். இவ்வாறு வள்ளலார் இளமையில் பாடி வழிபட்ட தெய்வம் முருகன்.

முருகன் என்றாலே இளமையும் அழகும் மணமும் தெய்வத் தன்மையோடு கலந்து நம் கண் முன்பு நிற்கும். தமிழ் நூல்கள் கண்ட முருகன் காட்டும் காட்சி இது. ஆகவே தமிழ்க் கவிஞராகவே பூத்த இளைஞர் வள்ளலாருக்குக் கடவுள் முருகனாகவே காட்சியளித்ததில் வியப்பு இல்லை. வள்ளலாருக்கு இளமையில் எப்போது முதல் முருகன் மேல் பக்தி ஏற்பட்டது என்று சொல்ல முடியாது. மிகச் சிறு வயதிலிருந்தே முருகன் வள்ளலார் உள்ளத்தே ஒளி வீசத் தொடங்கி விட்டான்; தானே ஞான குருவாகவும் விளங்கி வள்ளலார் அறிய வேண்டியவை அனைத்தையும் அறிவுறுத்தி விட்டான். ''எனை உண்மை அறிவித்த குருவே!'' என்று தெய்வ மணி மாலையில் இவரே கூறுகிறார்.

வள்ளலார் வரலாற்றில் தமையனாருக்குத் தெரியாமல் சிறுவர் இராமலிங்கம் மாடியறையில் கண்ணாடி முன் திருவிளக்கை ஏற்றி வழிபட்டிருந்தபோது, ஆறுமுகமும் வேலும் மயிலும் கோழிக் கொடியும் கொண்டு முருகன் தணிகாசல மலையுடன் சிறுவர் புறக் கண்ணுக்குக் காட்சியளித்தார்.

''சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும்
திகழ் கடப்பந்
தார் கொண்ட பன்னிரு தோள்களும்
தாமரைத்
தாள்களும் ஓர்
கூர் கொண்ட வேலும் மயிலும் நற்கோழிக்
கொடியும் அருள்
கார் கொண்ட வண்மைத் தணிகாசலமும்
என்
கற்றண்ணுதே''

என்ற பாடலை அனைவரும் அறிவோம். வள்ளலார் மற்றோரிடத்தில் கூறுகின்றபடி இந் நிகழ்ச்சி அவரது ஒன்பதாம் ஆண்டளவில் நிகழ்ந்திருக்கலாம். ஆகவே முருகனைப் பற்றிய வள்ளலாருடைய பாடல்கள் எல்லாம் ஒரு சில தவிர தணிகை மலையைப் பற்றியதாகவே இருக்கின்றன.

வள்ளலாருக்குப் படிப்பு வரவில்லையே என்று தமையனார் வருந்திய காலத்திலேயே வள்ளலார் ஒரு தடவை தமையனாருக்குப் பதிலாகப் பெரிய புராணப் பிரசங்கம் புரிந்து தமது அபார ஞான ஒளியை வெளிப்படுத்தினார். அதன் பின் வள்ளலார் திருவொற்றியூர்த் தியாகேசனை வழிபடும் வழக்கத்தை மேற்கொண்டார். என்றாலும் முருகன் வழிபாடும் அவருடைய வாழ்வில் ஒரு கணிசமான அளவுக்கு இடம் பெற்றிருந்தது. ஐந்தாம் திருமுறையில் தொகுக்கப்பட்டிருக்கிற ஏராளமான முருகனைக் குறித்த பாமாலைகள் ஐயா அவர்களுடைய ஆன்ம அனுபவங்களை—ஆண்டவனைப் பற்றிய தெளிவை நமக்கு வெளியிடுகின்றன. ஜீவ சாட்சியாக நின்று தன்னை இயக்கும் சக்தியாக முருகனை வள்ளலார் கண்டார். பின்னால் தான் காணப் போகும் ஒற்றியூர்த் தியாகேசனையும் வடிவுடை மாணிக்க அம்பிகையையும், கணபதியையும், நடராசப் பெருமானையும் அனுபவித்து உணர்தற்கும், முடிவாக அனைத்தையும் 'அருட்பெருஞ் சோதி' என்ற, நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் ஒரு பரம் பொருளாக உணர்தற்கும் இந்த அனுபவமே தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. திரு வி. க. அவர்களும் வள்ளலாருக்கு வழிபடு தெய்வம் முருகன் என்று கூறியது குறிப்பிடத் தக்கது.

'தெய்வம் ஒன்றே கண்டீர்' என்று வள்ளலார் கூறுகின்றபடி ஒரே தெய்வம் பல உருவில் தோன்றுகின்றதென்ற உண்மை வள்ளலாரின் இளமை உள்ளத்திலேயே முருகன் அருளால் தோன்றிவிட்டது. முருகனும் சிவபிரானும் ஒன்றே.

''பனிப்பற அருளும் முக்கண்
பரஞ்சுடர் ஒளியே போற்றி!
தனிப்பெருந் தவமே போற்றி!
சண்முகத் தரசே போற்றி!''
(ஐந்தாம் திருமுறை: போற்றித் திருவிருத்தம்)

குணம் குறி கடந்து அருட்பெருஞ் சோதியாகவே ஆண்டவனைக் கண்டு பாடும் ஆறும் திருமுறையிலும் சண்முக சாமியை வள்ளலார் மறக்கவில்லை.

''மன்னப்பா! மன்றிடத்தே மாநடம் செய் அப்பா! என்
றன் அப்பா! சண்முகம் கொள் சாமிஅப்பா! எவ்வுயிர்க்கும்
முன்னப்பா! பின்னப்பா! மூர்த்தியப்பா! மூவாத
பொன்னப்பா! ஞானப் பொருள் அப்பா! தந்தருளே''
(திருமுறை 6—தனிப்பாடல்கள் பாடல் 4).

அருட்பெருஞ் சோதியை ஆறுமுகனாக—முருகனாகக் கொள்ளுவதன் தத்துவத்தைசைவ முருகனாகக் கொள்ளுவதன் தத்துவத்தை வசன பாகத்தின் சுப்பிரமணியம் என்ற தலைப்பிலே படித்து மகிழலாம். ஒரு சிறு பகுதி வருமாறு :—

''நமது புருவ மத்தியில் ஆறுபட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணி பிரகாசம் பொருந்தி இருக்கிறது.
இந்த சோதி மணியைச் சண்முகம் என்று பெரியோர் சொல்வார்கள்.
இதன்றி நமது மூலாதாரத்திற்கு மேல் மூன்றிடம் தாண்டி
விசுத்தியாகிய இருதயத் தானத்தில் இடது புறத்தில்
ஆறுதலையுடைய ஒரு நாடி இருக்கிறது. இதைச்
சுப்பிரமணியம் என்று சொல்வார்கள்.
இந்தத் தேகத்திலுள்ள ஆறறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்த
விவேகம் என்பதையும் சண்முகம் என்பார்கள்.
ஆயினும் சர்வ தத்துவங்களினது அந்தத்தில் உன்மனிக்கு அப்பால்
சாந்த நிறைவாய் உள்ள ஆறுதலாகிய சுத்த ஆன்ம
அறிவாகிய உள்ளமே சுப்பிரமணியம்''

ஆகவே வள்ளலார் கண்ட முருகன் அருட்பெருஞ் சோதியின் ஒரு வடிவமே என்பதில் ஐயமில்லை.

சென்னைக் கந்த கோட்டத்துள் வளர் முருகனைப் பாடிய தெய்வ மணிமாலை வள்ளலார் இளமையிலேயே பாடிய பாடல் எனப்படுகிறது. இப் பாடல்களைக் கூர்ந்து கவனித்தோமென்று சொன்னால் மனிதனுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டியவை இவை வேண்டாதவை இவை என்பதை உணரலாம். முருகனுக்குச் சாத்திய இத் தெய்வ மணிமாலையை நாமும் பாராயண நூலாக நாவில் தரித்துப் பயன்பெறலாம். ''நோயற்ற வாழ்வில் நாம் வாழ வேண்டும் என்றால் என்னென்ன வேண்டும் என்று இவர் முருகனைக் கேட்கும்'' 'ஒருமையுடன் நினது மலரடி' என்ற பாடலை நாம் அறிவோம்.

முருகனுடைய அடியாருடைய புகழைச் செப்பினாலும் போதும், இம்மையில் சிறக்க வாழ்வதற்கான எல்லாவற்றையும் பெறலாம். அவை யாவை?

''பார்கொண்ட நடையில் வன்பசிகொண்டு
வந்திரப் பார்முகம் பார்த்திரங்கும்
பண்பும், நின் திருவடிக்கன்பும், நிறை ஆயுளும்,
பதியும், நன் நிதியும் உணர்வும்,
சீர்கொண்ட நிறையும்உட் பொறையும் மெய்ப்
புகழும், நோய்த் தீமை ஒரு சற்றும் அணுகாத்
திறமும், மெய்த் திடமும், நல் இடமும் நின்
அடியர் புகழ், செப்புகின்றோர் அடைவர் காண்''

ஆதலின் முருகனை மறக்கலாமா? வள்ளலாரைப் போன்றே நமக்கும் கீழ்க்கண்டபடி முருகன் தோற்றம் மனதில் வேரூன்ற வேண்டும்.

''கூர் கொண்ட நெட்டிலைக் கதிர் வேலும்
மயிலும்ஒரு-கோழியங் கொடியும் விண்ணோர்
கோமான்றன் மகளும், ஒரு மாமான் தன் மகளும் மால்
கொண்டநின் கோலம் மறவேன்''

வள்ளலார் கண்ட முருகன் நம்மையும் ஆட்கொண்டு அருள் செய்வானாக.

*

# சேக்கிழார் விளக்கும் தத்துவச் செந்நெறி

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,

**முன்னுரை :**

''உலகப் பெருங் கவிஞர்களின் பேரவையில் இங்கிலாந்து நாட்டின் சார்பாளர்களாக விளங்குதற்கு, ஷேக்ஸ்பியரும் மில்ட்டனும் மிகவும் சிறந்த தகுதியுடையவர்கள். ஆயினும் அவர்கள் இங்கிலாந்து நாட்டிற்கு மட்டுமேயன்றி, உலகத்திற்கேயுரிய பெருங் கவிஞர்கள் ஆவர்'' (1) என்று ஆங்கிலேய அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார். அம்முறையில் ஆராய்ந்து கூறுதலுறின், உலகப் பெருங் கவிஞர்களின் பேரவையில், தமிழ்நாட்டின் நாகரிகப் பண்பாட்டுக் கலைநலங்களை நன்கினிது எடுத்து விளக்கவல்ல சார்பாளர்களாகச் சென்றுவீற்றிருத்தற்குத் திருவள்ளுவர், சேக்கிழார் என்னும் இரு பெருந் தெய்வப் புலவர்கள் மிகவும் தகுதியுடையவர்கள் என நாம் கூறிதல் கூடும்.

**கலைக் கருவூலம் :**

சேக்கிழார் பெருமான், ஏதோ சைவ நாயன்மார்களின் கதைகளைப் பாடிய கவிஞர் என்று, ஒருசிலர் எளிதாகக் கருதுவது உண்டு. வெறும் கதைகளையே பாடிச் சென்ற வீண் கவிஞர் அல்லர் சேக்கிழார் பெருமான்! சேக்கிழார் பாடியருளிய திருத்தொண்டர் வரலாறு கூறும் பெரியபுராணம், நம் தமிழகத்தின் தலைசிறந்த தேசிய காவியம் ஆகும். முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவிஞர் ஆகிய சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் ஒரு பெருங் கலைக்கருவூலம்; சிறந்த வரலாற்றுக் களஞ்சியம். அதன் அருமை பெருமைகள் அளவிடற்பாலன அல்ல.

''கண்ணுதல் கருணை வெள்ளம்
ஆயிர முகத்தாற் கண்டார்''

என்று சேக்கிழார் பெருந்தகையே பாடுதல் போல, நாமும் பெரிய புராணத்தினை எத்தனையோ பற்பல கோணங்களில் ஆராய்ந்தறிந்து வியந்து மகிழலாம். பெரியபுராணச் சொற்பொழிவாளர்கள், ஒருசில முதன்மையான நாயன்மார்களின் கதைகளை மட்டுமே பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்வர்; அவற்றிலும் ஆழமும் அருமையும் தத்துவ நுட்பமும் மிக்க பகுதிகளை விட்டுவிட்டு, வெறும் கதைப் போக்கான பகுதிகளை மட்டுமே சொல்லிச் செல்வர். ஆனால் பெரியபுராணப் பெருங்கடலில், ஆங்காங்கே குவிந்து அமைந்து கிடக்கும் செழுங்கலை மணித்திரள்கள் பற்பலவாகும்.

**சமய தத்துவச் சிந்தனைகள் :**

மேலைநாட்டுப் பேரறிஞர் ஆகிய அரிஸ்டாட்டில் என்பவர், தம்முடைய 'கவிதையியல்' என்னும் நூலில், ''கவிதைகளில் தத்துவக் கூறுகளைவிட, வரலாற்றுக் கூறுகளே பெரிதும் மிகுந்திருக்கும்'' (''Poetry is more philosophical than historical''—Aristotle, *Poetics.*) எனக் குறிப்பிடுகின்றார். மிகப் பெரும்பாலான கவிதை நூல்களுக்கு அவர்தம் கூற்று மிகவும் பொருந்துவதே யாயினும், சேக்கிழாரின் பெரியபுராணத்தில் வரலாறு தத்துவம் ஆகிய இரண்டுமே, ஏற்றபெற்றி இணைந்து பிணைந்துள்ளன. பெரிய புராணத்தில் வரலாற்றுக் கூறு மிகுதியா? தத்துவக்கூறு மிகுதியா? எது மிகுதி எனின், இரண்டுமே மிகுந்துள்ளன என்றுதான் கூறுதல் வேண்டும். ஏனெனில், சைவநாயன்மார்களின் வரலாறுகளினின்றே, சைவசித்தாந்தம் என்னும் தமிழகத்துத் தனிப் பெருந் தத்துவக் கொள்கை, சாரமாக வடித்தெடுத்து விளக்கப் பெற்றுள்ளது. ஆதலின் பெரியபுராணத்தில் சமய தத்துவச்சிந்தனைகள் அரிய முறையில் அமைந்து கிடக்கும் திறனை வலியுறுத்துவதற்கு, அதன்கண் மிகவும் முதன்மையானதொரு பகுதியினை மட்டும், ஈண்டுக் கண்டு, அமைதல் சாலும்!

**முதன்மையானதொரு பகுதி :**

திருஞானசம்பந்தப் பெருமான் பாண்டிய நாடு சென்று, நின்றசீர் நெடுமாறர்-மங்கையர்க்கரசியார்-குலச்சிறையார் முதலியோர்

---

(1) "England may choose to be represented by *Milton* and *Shakespeare* at an international congress of World-poets, but they are more than English. They are of all countries ; Milton no less than Shakespeare"

—*Mark Pattison*, English Men of Letters, P. 220

களை ஆட்கொண்டு, பாண்டி நாட்டில் சிவ நெறி செழித்தோங்குமாறு செய்து, பல தலங்களுக்கும் சென்று வழிபட்டு, பின்னர் சோழ நாட்டிற்கு மீண்டு போந்தார். சோழ நாட்டில் திருக்களர் திருப்பாதாளீச்சுரம் திருக்கொள்ளம்பூதூர் திருநள்ளாறு திருத்தெளிச்சேரி முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு செல்லலுற்றார். அதுபோது வழியில் போதிமங்கை என்னும் ஓர் ஊர் இருந்தது. அங்கே புத்தர்கள் மிகுதியாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் திருஞானசம்பந்தர் தமது திரளான அடியவர் திருக்கூட்டத்தோடு வருதலைக் கேள்வியுற்று, அழுக்காறு காரணமாக மனம் வெதும்பினர். புத்த நந்தி என்பவரின் தலைமையின் கீழ்த் திரண்டு கூடிவந்து, திருஞானசம்பந்தரையும், அவர்தம் திருக்கூட்டத்தாரையும் வழிமறித்துச் சமய தத்துவ வாதப்போருக்கு வருமாறு வலியுறுத்தி அழைத்துத் தடுத்து நிறுத்தினர்.

அவர்கள் விடுத்த அறைகூவலைத் திருஞான சம்பந்தர் 'இதுவும் இறைவன் திருவுளம் போலும்' எனக் கருதி, அங்ஙனமே ஆகுக என்று ஏற்றுக் கொண்டார். சாரிபுத்தன் என்னும் ஒருவர், பௌத்தர்களில் தலைவராக வாதம் நிகழ்த்துவதற்கு முற்போந்தார். மதுரையில் சமணர்கள் புரிந்த அனல்வாதம் புனல்வாதம் மந்திரவாதம் முதலியன அல்லாமல், தம்முடன் தத்துவ வாதம் மட்டுமே செய்தல் வேண்டும் எனப் பௌத்தர்கள் வற்புறுத்தினர். அங்ஙனமே அதற்குத் திருஞான சம்பந்தர் இசைந்தார். அப்போது திருஞான சம்பந்தரின் அடியவர்களுள் ஒருவராகிய சம்பந்த சரணாலயர் என்பவர், அப்பௌத்தர்களுடன் தத்துவ வாதம் புரிதற்குத் தம்மை அனுமதித்தருளுமாறு திருஞானசம்பந்தரின் திருவடியிற் பணிந்து விண்ணப்பித்துக் கொண்டார்.

இருதிறத்தாரும் ஒரு மண்டபத்திற்குச் சென்று அமர்ந்து வாதம் நிகழ்த்தத் தலைப்பட்டனர். பௌத்தர்கள் விடுத்த அறைகூவலை ஏற்றுக்கொண்ட சம்பந்த சரணாலயர், பௌத்தர்களின் தலைவராகிய சாரிபுத்தன் என்பவரை நோக்கி ''இனி நாம் வாதத்தைத் தொடங்குவோம். உங்களுடைய கடவுளின் இயல்பினையும், அவர் அருளிச் செய்து விளக்கியுள்ள வீடுபேற்று இயல்பினையும் பற்றிக் கூறுக'' என்றார். அதன்படியே தொடங்கப் பெற்ற சமய வாதத்தில், சாரிபுத்தன் என்பவர் பின்வருமாறு தமது பௌத்த சமயத்தின் கொள்கைகளைக் கூறலாயினர்:

சாரிபுத்தன்: புத்தர்பெருமான், எங்களது பௌத்த சமயத்தின் தலைவர். அவர் எல்லையற்ற ஊழிகள் தோறும், எத்தனையோ பல எண்ணற்ற பிறவி வேறுபாடுகளில் பிறந்தும் இறந்தும், பிற உயிர்களுக்கு உறுதி செய்து, பின்னர் அக்குதியினின்றும் மாறி வீடுபேறு எய்துவார். கணபங்கம் என்னும் நிலையாமை இயல்பு கூறுவது, எங்களுடைய பௌத்த சமயம். அதன்கண் நின்று தானம் தவம் யோகம் என்பவற்றை முறையாகச் செய்தால், அவற்றின் பயனாக ஞானம் உதிக்கும். அந்த ஞானத்தினால் பேரின்ப முத்தியைப் பெறலாம் அங்ஙனம் ஞானம் எய்திப் பேரின்ப முத்தி பெற்றவரே எங்களுடைய புத்தர் பெருமான். எல்லா மக்களும் உய்திபெற்று ஈடேறும்படி, அவர் தருமநெறிகளை உலகிற்கு உபதேசித்தார். அவரே நாங்கள் வணங்குகின்ற கடவுளாவார்.

சரணாலயர்: நல்லது; உங்களது தலைவர் வீடு பேறாகிய முத்தி பெற்றார் என்று கூறினீர். அம் முத்தியின் இயல்பு எத்தகையது?

சாரிபுத்தன்: அறிவுள்ள உயிர்கள் எல்லாம், உருவம், வேதனை, குறிப்பு, செய்கை, ஞானம் என்னும் ஐந்து கந்தங்களும் சேரும் சேர்க்கையால் உண்டாவன. இவ்வைந்தும் நீங்கி அழிந்தொழிதலே, வீடுபேறு ஆகிய முத்தி அல்லது நிர்வாணம் என்பது, பௌத்தர்களாகிய எங்களுடைய கொள்கை.

சரணாலயர்: உங்களது சமயத்திற்குரிய தலைவராகிய புத்தர் முத்திபெற்றாரெனின், அவர் முன்பு பெற்றிருந்த ஞானம் முதலாகிய ஐந்து கந்தங்களின் சேர்க்கையும் அவரிடமிருந்து, ஒருங்கே அழிந்து கெட்டிருத்தல் வேண்டும். அங்ஙனம் அழிந்து கெட்டனவாயின், உங்கள் கொள்கையின்படி அவரும் அழிந்தனராதல் வேண்டும். அழிந்த பின்னர் அவரை இருப்பவராகக் கொண்டு, புத்த விகாரம் என்னும் கோயில்களைக் கட்டி, அவற்றுள் நிற்றல் இருத்தல் படுத்தல் ஆகிய நிலைகளில் அவருக்கு வடிவங்களையும் அமைத்து, ஊட்டுதல் பூச்சூட்டுதல் கேட்பித்தல் முதலிய வழிபாடுகளையும் நீங்கள் செய்வது எற்றுக்கு? நீவிர் செய்யும் வழிபாடுகளை ஏற்றுக் கொள்பவர் யாவர்?

சாரிபுத்தன்: இருவினைக்குக் காரணமான பஞ்சகந்தம் ஆகிய உடம்புகெட, எம் தலைவன் முத்தியிற் சேர்ந்திருக்கின்றார். அதனால் அவருக்குக் கோயிலும் வடிவமும் விழாவும் பூசையும் எடுத்தல் பொருந்துவதே யாகும்.

சரணாலயர்: இருவினைக்குக் காரணமான பஞ்சகந்தங்களால் ஆகிய உடம்பு கெடுதலே முத்தி என்றீர். அங்ஙனமாயின் முத்தியிற் சேர்ந்ததும், அவருக்கு உடலும், பொருள்களை உணரும் கருவிகளாகிய கண் முதலிய கரணங்களும், இல்லாது ஒழிதல் திண்ணம்.

உடலும், கரணங்களும் இல்லாதொழிந்தால், அவருக்கு உணர்வு உதித்தல் இல்லையாகும். அவர் பொருட்டு உங்களாற் செய்யப் பெறும் வழிபாட்டை ஏற்றுக்கொள்ளுதற்கு, அவருக்கு உணர்வு வேண்டும்; அவ் உணர்வு உண்டா தற்கு ஐந்து கந்தங்களும் அவிந்து ஒழிகின்றன என்பது உங்கள் கொள்கை. ஆதலின் உங்கள் தலைவனுக்கு முத்தி நிலையில் உணர்வு நிகழ் வதும், வழிபாடு புலனுவதும் இல்லை. எனவே நீவிர் அவர் இருப்பதாகக் கொண்டு, இங்கு எடுக்கும் கோயில் வடிவம் வழிபாடு முதலியன பயனில் செயல்களேயாம்.

சாரிபுத்தன்: அறிவு உணர்தலின்றி உறக் கத்தில் ஆழ்ந்து கிடக்கின்ற ஒருவனை, மற் றொருவன் நிந்தித்து மிதிப்பானாயின், உறங்கு பவன் அதனை உணராவிடினும், நிந்தித்து மிதித்தவனுக்கு அச் செயல்களானாய தீவினைப் பயன் வந்தே தீரும். அதுபோல, முத்தியில் இருக்கும் முதல்வன் நமது வழிபாடு முதலி யனவற்றை உணராவிடினும்கூட, நாம் செய் யும் வழிபாடு முதலியனவற்றின் பயன், நமக்கு வருதல் திண்ணம்.

சரணாலயர்: ஒருவன் தனக்காகச் செய்யப் படும் ஒரு செயலின் பயனை எய்துவதற்கு, அதனை அவன் உடன்படுதலோ வெறுத்தலோ செய்தல் வேண்டும். இரண்டுமே நிகழாத போது, ஒருவன் ஒரு செயலின் பயனை எய்துவ தில்லை. உம் தலைவன் பஞ்ச கந்தமும் அவிந்த நிலையாகிய முத்தியில் நின்றான் எனப்படுத லால், உடன்பாடோ வெறுப்போ அவன்பால் நிகழ்தற்கு வாய்ப்பு இல்லை. ஆதலின் அவன் நின் வழிபாட்டினை ஏற்றுக்கொள்ளுதலோ, பயன் தருதலோ இல்லை.

சாரிபுத்தன்: பயன் வருதலுக்கு உடன் பாடும் எதிர்வும் ஆகிய உணர்வுடைய மனநிலை வேண்டுவதில்லை. முன்னைய உணர்வு இன்றி உறங்கினவனுக்குப் புற நிகழ்ச்சிகளில் உடன் பாடும் எதிர்வும் இல்லை. ஆனால் அவனைக் கொன்ற ஒருவனுக்குக் கொலைப்பாவம் வரும். அதுபோல எம் இறைவன் எமது வழிபாட்டில் உடன்பாடும் எதிர்வும் இலனாயினும், வழிபாட் டின் பயன் எமக்கு வருதல் ஒருதலை.

சரணாலயர்: நன்று சொன்னாய். உறங்கி னேன் கொலைப் பயன்போல, வழிபாட்டின் பயன்வரும் என்றாய். கொலையினால் பிரிக்கப் பட்ட உயிரும், உடலும், கொலைத் துன்பம் எய்திய உட்கருவிகளும் உண்டு என்பது, நின் உவமையினால் பெறப்படும். அவ்வுவமையின் படி, உனக்கு உன் வழிபாட்டின் பயன் வரு வதற்கு, உனது வழிபாட்டிற்குரிய இறைவ னுக்கு உயிரும் உடலும் கருவிகளும் ஆகி யவை, அம் முத்தி நிலையிலும் இருத்தல் வேண் டும். அங்ஙனம் இருப்பின் அது கந்தங்கள் அவிந்த நிலை அன்றாம். அன்றாயின், நுமது புத்தன் முத்தியில் சென்றதும் இல்லையாய் முடியும். நீ செய்யும் வழிபாட்டின் பயன் நினக்கு வரவேண்டுமானால், நின் முதல்வ னுக்கு உடல் உயிர் கரணம் ஆகியவைகள் அமைந்திருத்தல் வேண்டும்; அவன் அழியாத முத்தியில் சென்றிருப்பானாயின், உடல் உயிர் கரணம் முதலியன அவனுக்கு இல்லையாய், முன்பே கெட்டொழிந்திருத்தல் வேண்டும். இதனால் நின்னுடைய கொள்கையும் கூற்றும் ஒன்றினொன்று பொருந்தாமல் முற்றிலும் முரண்பட்டு நிற்கின்றன.

மேலும், நின் தலைவன் ஒழியாத பேரின்ப முத்தியுற்றான் என்றாய். ஞானமே ஆன்மா; அது நீரோட்டம் போலத் தொடர்ச்சியாய்க் கணந்தோறும் தோன்றி அழியும்; அவ்வாறு தோன்றி யழியுங்கால் வரும் வாசனையைப் பற்றுதலால் அறிவு நிகழும்; அவ்வாசனையும் ஞானமும் அழிவதே முத்தி என்பது கொள்கை. இன்பம் அடைதற்கு அறிவு உள்ளதாதல் வேண்டும். அறிவு நிகழ்தற்குக் கந்தங்களின் செயற்பாடு வேண்டும். நீ சொல்லுவது போலக் கந்தத்துடனே அறிவும் கெடுதலே முத்தியாயின், அந்த முத்தியில் இன்பம் அடை தற்கு எத்தகைய வாய்ப்பும் இல்லை.

கந்தங்கள் அவிந்து பொய்யாய் முடிந்த நிலையில் எம் புத்தன் முத்தியிற் சேர்ந்தான் என்றும்; அதற்கும் முன்னமே அவன் எல்லாப் பொருள்களையும் உணர்ந்து, உலகம் உய்ய அறம் உரைத்துப் போயினான் என்றும் கூறி னாய். கணந்தோறும் தோன்றி அழியும் இயல் பிற்றாகிய அறிவினை உடைய அவன், கணந் தோறும் தோன்றி அழியும் பொருள்கள் முழு வதையும் ஒருங்கு உணர்தல் யாங்ஙனம்? நும் புத்தன் பெற்ற முத்திநிலை பொய்யாயினவாறு போல, அவன் எல்லாம் உணர்ந்து அறம் உரைத்துப் போந்தான் என்பதும் பொய்யே யாகும்.

சாரிபுத்தன்: உணர்வானது பொதுவும் சிறப்பும் என்று இரண்டு வகைப்படும். ஓர் இடத்தில் அடர்ந்து உள்ள மரங்களைப் பிரித்துக் கூறாமல் தொகுதியாக நோக்கிக் காடு என்றல் பொது உணர்வு. அங்ஙன மன்றி அங்குள்ள மரங்களைத் தனித்தனியாகச் சுட்டித் தேக்கு-வேங்கை-சந்தனம்-மந்தாரம் என்று கூறி உணர்தல் சிறப்புணர்வு. இவ்வாறே எல்லாப் பொருள்களின் உணர்வும், பொதுவும் சிறப் பும் என இரு திறப்படும். தீயானது விறகுக் குவியலின் வைப்பினும் சுட்டெரிக்கின்றது. விறகைப் பிரித்துத் தனித்தனியே ஒவ்வொன் றாக வைப்பினும் எரிக்கின்றது. அதுபோல உணர்வானது, எல்லாப் பொருள்களையும்

தொகுதியாய்ப் பொதுவாகவும் கண்டு கூறும்; தனித்தனியாகச் சிறப்பாகவும் கண்டு கூறும். இவ்வகையிலேயே எங்கள் முதல்வனும் பொருள்களையெல்லாம் தொகுத்தும் விரித்தும் தான் முதற்கண் உணருகின்றான்; தொகுத்தும் விரித்தும் பின்னர் ஏனையர்க்கு உரைக்கின்றான்.

சரணாலயர்; நன்று கூறினாய். உணர்வு இல்லாத தீயின் செயலை உணர்வின் செயலுக்கு உவமையாக எடுத்துக் காட்டினாய். பொருள்களைச் சார்ந்து நின்ற உணர்வு உருவுடையதன்று. நீ உவமை கூறிய எரியோ உருவம் உடையது. ஆதலின் நீ கூறிய உவமை இடப் பொருத்தம் உடையதன்று. மற்றும் நின் தலைவன் நிகழ்காலமேயன்றி, மற்றும் அதனை முன்னும் பின்னுமாகத் தொடர்ந்து வரும் இறப்பு எதிர்வு என்னும் காலங்களையும் தொகுத்து, முக்காலமும் ஒருங்கே அறிவான் என்றாய். அங்ஙனம் நின் தலைவன் அறிவானாயின், முக்காலமும் உணரும் உணர்வுக்கு உவமையாக நீ கூறிய பொருளாகிய எரியும் கூட, நிகழ்காலத்தில் இடப்பெற்றபோது சுடுதலே அன்றி, ஏனைய இறப்பு எதிர்வுகளினும் கூடச் சுடுதல் வேண்டும். தீ அங்ஙனம் சுடுதல் யாண்டும் இல்லையாகலின், நீ கூறிய உவமை காலப் பொருத்தமும் உடையதன்று.

ஆதலின், நீ கூறிய முத்தியிலக்கணம் பொருந்தாதவாறு போல, நின் தலைவன் ஒரு கணத்திலேயே எல்லாப் பொருள்களையும் முழுதொருங்குணர்ந்தான் என மொழிந்த நின் கூற்றும் பொருந்தாமல் புரைபட்டது. எனவே, இத்தகைய புரைபட்ட அறிவுடன் நின் தலைவன் ஆகிய புத்தன் கூறிய திரிபிடகம் என்னும் நூலும் புரையுடைத்தேயாகும்.

இது கேட்ட சாரிபுத்தன் மேலும் வேறு ஏதும் பேச வழியின்றி வாயடைத்து நின்றான். தான் கூறியவற்றைக் கொண்டே, தன் கூற்றுகளை மறுத்தது கண்டு, அவன் செய்வது அறியாது திகைத்தான். அப்போது சம்பந்தர் பெருமான் ''சமயம் என்பது அறநெறி பிறழாத பயன்மிக்க நல்லொழுக்க வாழ்க்கையேயன்றி, அறிவு நெறி தழுவிய பயனில் வாதமும் நம்பிக்கைகளும் அன்று'' (''Religion is not correct belief but righteous living'') என்று பலவகைகளில் அறிவுறுத்தி, அவனைச் சிந்தை திருத்தித் தெளிவு பெறச் செய்தருளினார் என்று, சேக்கிழார் பெரியபுராணத்தின்கண் கூறிச் செல்லுகின்றார்.

## முடிவுரை :

பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் வரலாற்றில் (2812-2882), பொருத்தம் சுருக்கம் திட்பம் நுட்பம் திருத்தம் என்னும் பலநலங்கள் அமைந்து வரும் இந்தப் பகுதியையே, அடிப்படையும் ஆதாரமுமாகக் கொண்டு ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியர், தமது சிவஞானசித்தியாரில் வரும் சௌத்திராந்திக பௌத்த மறுதலைப் பகுதியை இயற்றியருளினார் என்பது, இவ்விரண்டினையும் புடைபட வைத்து ஒப்பிட்டு ஆராய்ந்து காண வல்லார்க்கு எளிதிற் புலனாகும்.

சமண பௌத்த மதங்களைச் சைவ வைணவ சமயங்கள் சூழ்ச்சிகளாலும் பூசல்களாலும் அழித்துவிட்டன என்று ஒருசிலர் கருதுவதும் கூறுவதும் உண்டு. அஃது உண்மையன்று. ''சமண பௌத்த மதங்களைக் காட்டிலும், சைவ வைணவ சமயங்கள், பெரிய கல்வியாளர்களையும், அரிய நூலாசிரியர்களையும், சிறந்த அருளாளர்களையும், தேர்ந்த கலைநுண்ணறிஞர்களையும் தோற்றுவித்தன; செயற்றிறன்மிக்க பக்தியுணர்வையும், உலகநலம் வளர்க்கும் ஒப்புரவாண்மையையும் கடைப்பிடித்து ஒழுகின. இவற்றின் மூலமாகவே சமண பௌத்த மதங்களைச் சைவ வைணவ சமயங்கள் புறங்கண்டு வெற்றி கொண்டன'' (2) என்பது, இங்கு நாம் அறிதற்குரியது. இவ்வாற்றால், சேக்கிழார் விளக்கும் தத்துவச் செந்நெறி எத்தகையது என்பதனை, நாம் இனிதுணர்ந்து மகிழலாம்.

—ஆசிரியர்.

(2) "This was effected not by its persecuting or penalising the Buddhists, but by producing greater scholars, better authors, nobler saints and finer artists, and above all by practising greater active piety and philanthropy"

—Sir. Jadunath Sarkar.

# தமிழ் இலக்கியங்களும் வள்ளலாரும்

திரு. அ. மு. பரமசிவானந்தம், M. A., M. Litt.,
தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

வள்ளலார் தம்மை மறந்த அடியவர். வையகமெல்லாம் வளமுற்று வாழ வேண்டும் என்பது அவரது ஆசை. அந்த ஆசை நிறைவேறும் வழித் துறைகளையெல்லாம் எண்ணி எண்ணிச் சமரச சன்மார்க்க நெறியினை வகுத்தார்— பரப்பினார்— முயன்றார். எனினும் அவர் நினைத்தபடி வெற்றி பெற முடியவில்லை, இறைவன் திருவுள்ளம் அது போலும். 'கடையை விரித்தோம் வாங்குவோரில்லை' என்று அவரே சொன்னதாக வழக்காறு உண்டு. எப்படியாயினும் அவர் தம் சமரச சன்மார்க்க நெறி இன்னும் நாட்டில் தழைக்கவில்லை என்பது தேற்றம். அந் நெறி தழைத்தால்தான் வையம் வாழும் என்பது அதனினும் நன்கு தெளிவாகும் உண்மை.

தம் செம்மை திறம்பா நல்ல வாழ்வின் அடிப்படையை வள்ளலார் பல பாடல்களில் விளக்கிக் காட்டுகின்றார். அவர் தமக்கு முன் வாழ்ந்த 'தம்மை மறந்த' மெய்யடியார்கள் பலரையும் எண்ணிப் பார்க்கிறார். அவர் தம் பாக்கள் இவர் உள்ளத்தில் நிழலிடுகின்றன. அவர் தம் வாழ்வையும் வரலாற்றையும் வாய்மொழிகளையும் எண்ணி எண்ணிப் பார்க்கிறார். அத்தனையும் தன் உயிருக்கு வழியாக அமையும் சிறப்பை யெல்லாம் எண்ணுகிறார். 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உணர்வு உள்ளத்து எழும்ப, வாய் அருட்பாவைப் பாடுகின்றது. எனவே அந்த நல்ல அருட் பாக்களில் தமிழ் நாட்டுப் பழம் பெரும் இலக்கியங்களின் வாடை வீசக் காண்கிறோம்.

அடிகளார் ஆழ்ந்த புலமையுள்ளவர். தெய்வ உள்ளத்தோடு தமிழ் உள்ளமும் பெற்றவர். அவர் பாக்களைப் படிக்குந்தோறும் அவர் தம் புலமை புலப்படாமற் போகாது. திருவள்ளுவரும் கபிலரும் பரணரும் நக்கீரரும் களிநடம் புரிவர். மணிவாசகரும் அப்பரும் பிற சமயத் தலைவர்களும் வந்து வந்து சிந்தை மகிழ்விப்பர். அடிகளாரின் ஆழ்ந்த தமிழ்ப் புலமை ஒவ்வொரு அடியிலும் நிழலிடும். சிலவிடங்களில் அவர் மொழியும் பொன்னேபோல் போற்றுவம் என்ற மரபிற்கு இலக்கியமாகப் பல சொற்களைத் தொடர்களை அப்படி அப்படியே எடுத்தாள்வதைக் காண்கின்றோம். எனவே அத்தனையும் இங்கே நம்மால் எண்ணிப் பார்க்க இயலாது. எனவே ஒரு சிலவற்றை மட்டும் காணலாம்.

அடிகளார் முந்திய அடியவர் தம் பாடல்களுள் தோய்ந்தவர் எனக் கண்டோம். அவருக்கு முன் வாழ்ந்த ஞானசம்பந்தர் தேவாரத்தை ஓதி உணர்ந்து, அதன்படி நடவாத நெஞ்சை நைந்து நோக்குகின்றார்; வாய் பாடுகிறது. உலகில் உடலை விட்டு உயிர் நீங்கப் போவது உண்மை. அக் காலத்து உயிர்களுக்கு உற்ற உறவினனாய் 'அஞ்சேல்' என்று அருள் செய்பவன் ஆண்டவனே யாவன். இந்த அடிப்படை உண்மையை உணராத காரணத்தினாலேதான் உயிர்கள் நிலைகெட்டு மயங்குகின்றன. இதை அடிகளார் தன் நெஞ்சை நோக்கியே கூறும் வகையில் உலகுக்கு அறிவுறுத்துகின்றார்.

'புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டை மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்றருள்
செய்வான் அமரும்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்
கும் திருவையாறே'

என்பது ஞானசம்பந்தர் வாக்கு. இதை உள்ளத்து உணர்ந்த அடிகளார் நெஞ்சினை நோக்கி

'புலனைந்தும் என்றருளும் பொன்மொழியை
மாயா
மலமொன்றி அந்தோ மறந்தாய்'
(நெஞ்சறி-470)

எனக் கூறி, உலகில் உயிர்கள் இந்த உண்மையை உணர்ந்தாலன்றி வாழ்வில்லை என்பதை விளக்கிக் காட்டிவிட்டார்.

அப்பரடிகளார் உலகில் மக்கள் உற்றுழலும் பல வேறுபாடுகளை எண்ணிப்பார்க்கிறார். சாதியும் சமயமும் மக்களை அலக்கணுறச் செய்வதைக் காண்கிறார். உள்ளம் நைகிறது. உதடு பேசுகிறது.

'சாத்திரம் பல பேசும் கழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்
வீர்?'

எனக் கேட்கின்றார். அப்பர் காலத்தைக் காட்டிலும் வள்ளலார் காலத்தில்நிச்சயமாகச் சாதி, சமயப் பூசல்கள் அதிகமாக நிலவி இருக்கும் என்பது உறுதி. எனவே அவர் அப்பர் அடிகளை ஒற்றி, உலக மக்களை நேரில் நோக்கி,

'சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரக்
குப்பையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழ
கலவே'
(ஆறும் திருமுறை)

எனக் கூறி அறிவுறுத்துகின்றார். இவ்வாறே அடிகளார் மணிவாசகர் தம் திருவாசகத்தைப் பலப் பல இடங்களில் எடுத்தோதுகிறார். அடிகளார் மணிவாசகரிடம் தம்மைப் பறி கொடுத்த நிலையினையும் அவர் பாடலைப் பாடிப் பாடிக் கசிந்து கண்ணீர் பெருக்கிய நிலையினையும் உலகம் நன்கு அறியும். எனவே அத்துணைப் பாடல்களையும் நம்மால் தொகுத்துக் காட்டல் இயலாது, ஒன்றே காண்போம்.

மணிவாசகர் இறைவனிடம் பண்டமாற்று வாணிபம் செய்கின்றார். தன்னை அவனுக்கு அளித்தார், அவன் தன்னை இவருக்களித்தான், இருவரில் பயன் பெற்றவர்தானே எனப் பெருமிதத்தோடு கூறுகின்றார். ஆம்! இறைவன் அருள் வலத்தால் உயிர்கள் பெறும் பலன் எண்ணற்றவை. ஆனால், நம்மால் அவனுக்கு என்ன பயன்? இதையே மாணிக்க வாசகர் நம் பொருட்டு வாயாரப் பாடுகிறார்.

'தந்ததுன்றன்னைக் கொண்ட தென்றன்னைச்
சங்கரா யார் கொலோ சதுரர்
அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்ற தொன்றென்பால்'

என்பது திருவாசகம். இப் பெருவாசகத்தில் தம்மை மறந்த வள்ளலார் அம்மையின் முன்னின்று,

'நின்னால் எனக்குள எல்லா நலனும் நினை
அடைந்த
என்னால் உனக்குள தென்னை கண்டாய்?
எமை ஈன்றவளே!
முன் நால் வருக்கருள் ஒற்றியெம்மான் கண்
முழுமணியே
மன்னு மறையின் முடிவே! வடிவுடை
மாணிக்கமே!
(வடிவுடை மாலை 91).

எனப் பாடுகின்றார். இவ்வாறு வள்ளலாருக்கு முன் வாழ்ந்த சமயத் தலைவர்தம் வாக்கும் கருத்தும் பிற நலங்களும் அவர்தம் அருட்பாவில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

அருட் பாக்களைப் பாடிய அடியவர்கள் மட்டுமின்றி, வள்ளலார் உள்ளத்தை அறம் பாடிய வள்ளுவரும் ஈர்த்துள்ளார் எனக்காண்கின்றோம். சமய நெறி கடந்த பெரு நூல் எனக் குறள் போற்றப்படினும், அதில் அமைந்துள்ள மெய்க் கருத்துக்கள் அனைத்தும் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளமை அறிவோம். அடிகளார் வள்ளுவர் காட்டிய வழியை உணர்ந்து உணர்ந்து இறைவன் முன் நிற்கின்றார். அப்படி அப்படியே குறட்பாக்களைத் தம் பாடல்களில் எடுத்தாள்கின்றார்.

'உறங்குவது போலுமென்ற ஒண்குறளின்
வாய்மை,
மறங்கருதி அந்தோ மறந்தாய்'
(நெஞ்சறி-466)

'செல்லாவிடத்துச் சினந்தீது செல்லிடத்
தும்
இல்லதனில் தீயதென்று எண்ணிலையே'
(நெஞ்சறி-433)

'பற்றற்றான் பற்றினையே பற்றியிடல்
வேண்டுமது
பற்றற்றால் அன்றிப் பலியாதால்'
(நெஞ்சறி-624)

என்பன அருட்பா அடிகள். இவை குறள் நலம் சான்றவை என்று கூறவும் வேண்டுமோ?

இவ்வாறு எண்ணற்ற இலக்கியங்களை வள்ளலார் தம் வாய் மொழிக்கிடையில் எடுத்தாண்டு, தம் புலமைத் திறனையும் தெய்வ நலத்தையும் காட்டி நம்மை மகிழ்விக்கின்றார், என்றென்றும் மகிழ்விப்பார். அவர் தம் அருட்பாவின் வழி உலகம் நடக்கத் தொடங்கின் நலனுண்டு. அவ்வாக்கப் பணிக்கு— ஒன்றிய உலக சமரச சன்மார்க்க அருள் நெறி வளர்க்கும் பணிக்கு, 'சேரவாரும் சகத்தீரே!' என அழைத்து அமைகின்றேன். *

# உரிமை நூல்

திரு. டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள்,
துணைவேந்தர், மதுரைப் பல்கலைக் கழகம்.

பெரியவர்கள் அறிவுரை கூறினுல் அதைப் பற்றி ஆராய்ச்சி செய்யாமல், காரணம் கேட்காமல், அப்படியே ஏற்று நம்பிக்கை கொண்டு நடக்க வேண்டும் என்பது ஒரு கொள்கை. யார் என்ன கூறினுலும், கூறியவர் எவ்வளவு உயர்ந்தவராக இருந்தாலும், கூறப்பட்ட பொருள் எவ்வளவு விழுமியதாக இருந்தாலும் கண்மூடி ஏற்றுக் கொள்ளாமல் ஆராய்ந்து உணர வேண்டும் என்பது மற்ருெருகொள்கை. இரு வகைக் கொள்கைகளும் நெடுங் காலமாக இருந்து வருகின்றன. திருவள்ளுவர் முதலானவர்கள் பின்னைய கொள்கை உடையவர்கள்.

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்பது திருவள்ளுவரின் கொள்கை. அந்தக் கொள்கைக்கு ஏற்பவே அவர் தம்முடைய நூலை இயற்றித் தந்துள்ளார்.

பொதுவாக ஒன்று கூறலாம். பழங்காலம் பெரும்பாலும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு விளங்கியது. இன்றைய உலகம் அந்த அளவிற்கு நம்பிக்கையை அடிப்படையாகக் கொள்ளவில்லை. ஆராய்ச்சியையே பெரிதும் சார்ந்து இருக்கிறது. எதற்கும் காரணம் காட்டி உணர்த்தினுல்தான் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை இன்று பெருகிவிட்டது. அறிவியல் வளர்ச்சி அந்தமனப்பான்மை பெருகி விட்டதற்குத் தலையான காரணம் எனலாம். போக்குவரத்து மிகுதியான காரணத்தால் பலவகைச் சமயக் கொள்கைகளும், மற்றக் கருத்துக்களும் நெருங்குதலும் மோதுதலும் மிகுதியாகிவிட்டன. அவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பும் மிகுந்துவிட்டது. அதனுல் இதுவே உண்மை, மற்றவை உண்மையாக இருக்க முடியாது என்ற பழங்காலப் பிடிப்புத் தளர்ந்து, இதுவா அதுவா எது உண்மை என்ற தயக்கம் தலை காட்டுகிறது. பழைய நம்பிக்கையின் தளர்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாகலாம். இந்த நிலையெல்லாம் ஏற்படுவதற்கு முன்னரே, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் தோன்றிய சான்ருேர் ஒருவர், தாம் எழுதிய தமிழ் நூலில் ஆராய்ச்சி மனப்பான்மை கொண்டு அறத்தையும் அரசியலையும் விளக்கியிருப்பது தமிழ் பெற்ற பெரும்பேறு ஆகும். அதனுல்தான் இன்றைய வாழ்க்கைக்கும் வழிகாட்டும் நூலாகத் திருக்குறள் பலராலும் போற்றப் படுகிறது.

திருக்குறளிலும் நம்பிக்கையை வற்புறுத்தும் பகுதிகள் இல்லாமற் போகவில்லை. மனித வாழ்க்கையில் எல்லாவற்றையும் அறிவைக் கொண்டே அளந்து பார்த்து விட முடியாது. அறிவுக்கு எட்டாத கூறுகளும் சில உண்டு. அனுபவம் ஒன்றே அவற்றின் உண்மையை உணர்த்த வல்லது. அனுபவம் நிரம்பும் வரையில் நம்பிக்கை கொண்டு பொறுக்கத்தான் வேண்டும். பள்ளிச் சிறுவர்கள் ஏழேழு நாற்பத்தொன்பது என்பதை நம்பி மனப்பாடம் செய்வதுபோல், வளர்ந்த மனிதர்களும் அறத்தின் ஆற்றல் முதலியவற்றை நம்பித்தான் ஆகவேண்டும். பள்ளிச் சிறுவர்கள் வளர்ந்த பிறகு ஏழேழு நாற்பத்தொன்பது ஆவதை உண்மை என்று தெளிவது போல, பண்பட்ட மனிதர்களும் அனுபவத்தால் அறத்தின் ஆற்றலை உணர்ந்து தெளிகிருர்கள். அதுவரையில் நம்பிக்கை ஒன்றே வழியாக உள்ளது. கடவுளைப் பற்றிக் கொண்டவர்களுக்கே கவலையை மாற்ற முடியும் என்று திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தில் உணர்த்துகிருர். அங்கே அவர் ஆராய்ச்சிக்கு இடந் தரவில்லை. அதை நம்பித்தான் மேலே தொடர வேண்டும் என்பது அவர் விருப்பம். தீயவை செய்தவர்கள் தப்ப முடியாது. ஒருவனை நிழல் தொடருவதுபோல் அவர்களைக் கேடு தொடரும் என்று சொல்கிருர். இவ்வாறு அவர் உணர்த்தும் உண்மைகள் சில நம்பிக்கையையே அடிப்படையாகக் கொண்டவை. ஆயினும் அவை நூற்றுக்குப் பத்து விழுக்காடு என்ற அளவிலே உள்ளன. ஆனுல், அறிவு கொண்டு ஆராயத் தக்கன நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு உள்ளன. அவற்றைக் கண்மூடி நம்புமாறு வற்புறுத்தாமல், சிந்தனை செய்து உணரும் வகையில் எடுத்துரைத்திருப்பதே திருக்குறளின் சிறப்பாகும். இனியவை கூறல் முதலிய அதிகாரங்களில் திருவள்ளுவர் அறிவியல் முறைப்படி உணர்த்துகிருர்.

இன்சொலால் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. (1)

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று (2)

இன்சொலால் ஈரம் அளைஇப்படிறு இலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல் (3)

அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின் (4)

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. (5)

முதலிய குறள் மணிகள் எவ்வகைத் தடையும் இல்லாமல் பகுத்தறிவு ஏற்கத் தக்கனவாக உள்ளன. கூட்டல் கழித்தல் கணக்குகள்போல் அறிந்து தெளியுமாறு அவை அமைந்துள்ளனவே அல்லாமல், நம்பி மனப்பாடம் செய்ய வேண்டிய வாய்பாடுகள் போல் இல்லை.

பிறன்மனை நயவாமையைக் கூறும்போது, பகை, பாவம், அச்சம், பழி என்ற நான்கும் நீங்காமல் தொடரும் என்ற காரணத்தைக் கூறி விளக்குகிறார். பொறுமையை வற்புறுத்தும்போது உண்ணா நோன்பு இருப்பவரின் மன வலிமையைவிட, மற்றவர்களின் கடுஞ் சொற்களைக் கேட்டுப் பொறுப்பவர்களின் மன வலிமை பெரியது என்கிறார். உண்ணா நோன்பால் பசியைப் பொறுத்துக் கொள்பவர்களின் ஆற்றலைவிடப் பிறருக்கு உணவு அளித்து அவர்களின் பசியை ஆற்றுவாரின் ஆற்றல் சிறந்தது என்று கூறி ஈகையை வலியுறுத்துகிறார். தவத்தைப் பற்றி விளக்கும்போது தவ வேடத்தைச் சிறப்பிக்காமல் உள்ளத்தின் பண்பாடே அடிப்படை என்கிறார். உற்றநோய் நோன்றலும் உயிர்க்கு உறுகண் செய்யாமையும் ஆகிய இரண்டுமே தவத்திற்கு உரு என்கிறார். அடுத்த அதிகாரத்தில் கூடாவொழுக்கம் என்ற தலைப்பில் உள்ளம்பண்படாதவர்களின் வெறுந் தவ வேடத்தைக் கடிந்து கூறுகிறார். தவ வேடம் பூண்டு தவறு செய்து வாழ்தல், புதரிலே மறைந்து பறவைகளை வலை வீசிப் பிடிப்பது போன்றது என்கிறார். மனம் பண்படாமல் தவ வேடம் மட்டுமேஉடையவன், பறவைகளை நம்பச் செய்து ஏய்த்துக் கொல்லும் வேடன் ஆகின்றான். அவனுடைய தவவேடம் வேடனுக்கு உதவும் புதர் என்ற அளவிலேயே திருவள்ளுவர் மதிப்பிடுகிறார்.

நெஞ்சில் துறவார்துறந்தார்போல்வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். (1)

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் (2)

முதலிய குறள் மணிகள் பகுத்தறிவாளருக்கு மிக்க மகிழ்ச்சி ஊட்டுவன. வரைவில் மகளிர், கள், சூது என்பவற்றை வெறுக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கூறும் பொன்மொழிகள் முப்பதும் அறிவுக்கு இயைந்தவை. இவை பாவம் என்றோ, முத்திக்கு இடையூறு என்றோ கூறவும் முன் வராமல், இவ்வுலக வாழ்வின் முன்னேற்றத்துக்கு எவ்வெவ் வகையில் இடையூறு என்பதை ஆராய்ச்சி முறையில் விளக்கிச் செல்கிறார்.

இத்தகைய நோக்கம் கொண்டு திருக்குறளை ஆராயும்போது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிவியல் முறையில் வாழ்க்கையை ஆராய்ந்த ஒரு சான்றோரின் மனப்பான்மை புலப்படுகிறது. நம்பத் தக்கவற்றை நம்புமாறு வற்புறுத்தி, மற்றவற்றை ஆராய்ந்து தெளியுமாறு ஒளி தரும் நூல் அது. அதனால் தான், அந்த நூலை எல்லோரும் விரும்ப முடிகிறது. இளைஞர் முதல் முதியோர் வரையில் எல்லோரும் நன்றியுணர்ச்சியுடன் அன்பு கலந்த மதிப்புடன் அந்த நூலைப் போற்றுவதற்குக் காரணம் அதுவே ஆகும். தாயும் தந்தையும் நமக்கு எவ்வளவோ உதவிகளைச் செய்திருக்கிறார்கள். ஆயினும் நம் உள்ளம் அவர்களிடம் அன்புடன் நன்றியுணர்ச்சியுடன் ஈடுபடுவதற்குக் காரணம், அவர்கள் நம் வளர்ச்சியில் நமக்குத் தந்த உரிமையே ஆகும். ஒரு முறை அல்லாமல் பல முறை தவறு செய்வதற்கும் உரிமை தந்து, தவறுகளைப் பொறுத்தார்கள்; கடிந்தார்கள்; தவறுகளைக் கண்டு நம்மை ஒதுக்கிவிடாமல் ஒழித்துவிடாமல் மேலும் மேலும் வளர்வதற்கும் வாழ்வதற்கும் உரிமை தந்தார்கள். அவர்கள் செய்த உதவிகளை விட அளித்த உரிமைதான் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்வது. தந்தையைவிடத் தாய் மிகுதியான உரிமை தரும் காரணத்தால், தாயிடத்தில் நம் நெஞ்சம் மிகுதியாக ஈடுபடுகிறது. அறிவுலகத்தில் வாழ்க்கையின் உண்மைகளை உணர்த்தும் வகையில் திருவள்ளுவரின் பொய்யாமொழி நம் அறிவிற்கு அத்தகைய உரிமையைத் தருகிறது. எல்லாவற்றையும் நம்ப வேண்டும் என்ற வற்புறுத்தல் இந்தத் தாயிடம் இல்லை. சிலவற்றை நம்பச் சொல்லி நயமாக உணர்த்தி விட்டு, பலவற்றை ஆய்ந்து உணருமாறு உரிமை தரும் தாயை இங்குக் காண்கிறோம். உரிமையை இயற்கையாக விரும்பிப் போற்றும் மனம் அறிவுக்கு உரிமை தரும் இந்த அன்னையை அன்புடனும் போற்றுவதில் வியப்பில்லை.

# திருக்கோளிலித் தலவரலாறு

## முன்னுரை :

திருக்கோளிலி என்னும் சிவத் தலம், தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினம் வட்டம் திருவாரூரிலிருந்து அறந்தாங்கி செல்லும் இருப்புப் பாதையில், திருநெல்லிக்காவல் நிலையத்திலிருந்து கிழக்கே 7 கல் தொலைவிலும் நாகப்பட்டினத்திலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் கற்பாதையில் கீழையூரில் இருந்து 3 கல் தொலைவிலும் உள்ளது. திருவாரூரிலிருந்து இத் தலத்திற்கு நேரே செல்லப் பேருந்து வசதி உண்டு.

இது சோழ நாட்டிலுள்ள சப்தவிடங்கத் தலங்கள் ஏழனுள் ஒன்று. திருவாரூர் திருநாகைக்காரோணம் திருநள்ளாறு திருமறைக்காடு திருக்காறுயில் திருவாய்மூர் திருக்கோளிலி என்னும் ஏழும், சப்த விடத்தலங்கள் என வழங்கப்படும். இந்த ஏழு தலங்களிலும் தியாகராசப் பெருமான் எழுந்தருளி விளங்குகின்றார். (சப்தம்-ஏழு. விடங்கர்-தியாகராசர். டங்கம்-உளி; விடங்கர் -உளியினால் செய்யப் பெறாதவர்).

## முசுகுந்தச் சோழன் :

முன்னொரு காலத்தில் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு முசுகுந்தன் என்னும் சோழ மன்னன் அரசாண்டு வந்தான். இம் முசுகுந்தச் சோழனைப் பற்றிய குறிப்புக்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் பண்டைத் தமிழ் நூல்களிலும் காணப்படுகின்றது. வலன் என்னும் அசுரன் தேவர்களைத் துன்புறுத்தி நலிந்தபோது, தேவேந்திரன் முசுகுந்தச் சோழனின் துணைகொண்டு வலாசுரனை அடக்கி வெற்றி பெற்றான். வெற்றி பெற்ற தேவேந்திரன் முசுகுந்தச் சோழனை நோக்கி, 'நீ விரும்புவது எதனையேனும் என்னிடம் கேள். யான் அதனை நினக்கு மகிழ்ச்சியுடன் தருகின்றேன்'' என்று கூறினான். அப்போது முசுகுந்தச் சோழன் தேவேந்திரன் பூசித்து வந்த தியாகராசப் பெருமானின் திருவுருவைத் தனக்குத் தரும்படி வேண்டிக் கொண்டான்.

இது கேட்டுத் தேவேந்திரன் சிந்தை கலங்கித் திகைத்தான். தனது வழிபடு கடவுளை முசுகுந்த மன்னனுக்குக் கொடுக்க, இந்திரனுக்கு மனம் இசைய வில்லை. அதே சமயத்தில் கேட்பது எதுவாயினும் கொடுப்பதாகக் கூறிவிட்டு, அதனை மறுக்கவும் துணிவு இல்லை. அதனால் தனது வழிபடு கடவுளாகிய தியாகராசப் பெருமானின் திருவுருவைப் போலவே ஆறு திருவுருவங்களைப் படைத்துச் சுற்றிலும் வைத்து, நீ விரும்பியதனை எடுத்துக் கொள்க என்று பணித்தான். முசுகுந்த மன்னன் இறையருளால் உண்மைத் தியாகராசர் திருவுருவையே தேர்ந்தெடுத்தான். அது கண்டு வியப்புற்ற தேவேந்திரன், தான் வழிபட்டு வந்த தியாகராசர் திருவுருவத்தினையும், மற்றும் தான் செய்வித்த ஏனைய ஆறு திருவுருவங்களையும் முசுகுந்தனுக்கே வழங்கி, இவைகளைத் திருவாரூரிலும், அதைச் சூழ்ந்துள்ள ஏனைய ஆறு தலங்களிலும் நிறுவி, வழிபட்டு நலம் பெறுக என்று கூறிப் பலவகைப் பரிசில்களையும் சிறப்புக்களையும் அன்புடன் அளித்து, முசுகுந்தச் சோழனை வழியனுப்பி வைத்தான்.

## சப்த விடங்கத் தலங்கள் :

அதன்படி முசுகுந்தச் சோழன் திருவாரூரிலும், அதனைச் சூழ்ந்துள்ள ஏனைய தலங்களிலும், தான் தேவருலகத்தில் இருந்து கொண்டு வந்த தியாகராசர் திருவுருவங்களை நிறுவி வழிபட்டு அருள் பெற்றான். திருவாரூர் முதலான இந்த ஏழு தலங்களே, சப்த விடங்கத் தலங்கள் எனப் பெரிதும் சிறப்பித்துப் போற்றி வழிபடப் பெற்று வருகின்றன.

இந்த ஏழு தலங்களிலும் உள்ள ஏழு தியாகராசர்க்கும் தனித் தனியே சிறப்புப் பெயர்கள் உண்டு. இவ் ஏழு தலங்களிலும் ஏழு வகையான திருநடனங்களைத் தியாகராசப் பெருமான் செய்தருள்கின்றார்.

(1) திருவாரூர் : வீதிவிடங்கர், அசபா நடனம்; மேலும் கீழுமாக ஏறி இறங்கியும், முன்னும் பின்னுமாகச் சென்று வந்தும், மந்திரங்களை வாய் விட்டு உச்சரிக்காமல், மானசீகமாகச் செபித்தருளும் நிலையில், அன்பர்களின் உள்ளத்தில் இருந்து ஆடும் நடனம்.

(2) திருநாகைக்காரோணம் : சுந்தர விடங்கர், பாராவாரதரங்க நடனம் ; கடல் அலைகளின் அசைவை ஒத்து ஆடும் நடனம். பாராவாரம்-கடல். தரங்கம்-அலை.

(3) திருநள்ளாறு : நகவிடங்கர், உன்மத்த நடனம் ; பித்துக் கொண்டவன் தலைசுற்றி ஆடுவது போல ஆடும் நடனம். உன்மத்தம்-பித்துத் தன்மை.

(4) திருமறைக்காடு : புவனிவிடங்கர், அம்சபாத நடனம் ; அன்னப் பறவை தன் அடிகளைப் பெயர்த்து வைத்து ஆடுவது போன்ற நடனம். அம்சம்-அன்னம். பாதம்-கால், காலடி.

(5) திருக்காறாயில் : ஆதிவிடங்கர் , குக்குட நடனம் ; கோழி ஆடுவது போன்ற நடனம். குக்குடம்-கோழி.

(6) திருவாய்மூர் : நீலவிடங்கர் ; கமல நடனம். நீர் நிறைந்த குளத்தில் ஒற்றைத் தாளில் நிற்கும் தாமரை மலர் காற்றால் தள்ளுண்டு மெல்லென ஆடுவது போன்ற நடனம். கமலம்-தாமரை மலர்.

(7) திருக்கோளிலி : அவனி விடங்கர், பிரமர நடனம். மலர்களுக்குள் வண்டு குடைந்து சென்று ஆடுவது போன்ற நடனம். பிரமரம் (பிருங்கம்)- வண்டு.

## தல வரலாறுகள் :

திருவாரூரில் இறைவன் புற்றிடங் கொண்டவராய் விளங்குதல் போல, இத் தலத்திலும் வெண் மணலே சிவலிங்கமாக அமையப் பெருமான் விளங்கி வருகின்றார். ‘கோள்’ என்னும் சொல் கிரகங்களைக் குறிக்கும். நவக்கிரகங்கள் இங்கு இறைவனை வழிபட்டுத் தம் குற்றங்களும் தீங்குகளும் இல்லையாய் நீங்கப் பெற்றன. மேலும் இங்குள்ள இறைவனை வழிபடுவோர்க்கு, நவக்கிரகங்களால் ஏற்படும் தொல்லைகள் ஏதும் இல்லையாய் நிகழாதொழியும். ஆதலின் இத் தலத்திற்குத் ‘திருக்கோளிலி’ எனப் பெயர் அமைந்தது. அதுவே இந் நாளில் திருக்குவளை என மருவி வழங்கி வருகின்றது. இங்குப் பிரமதேவன் சிவபெருமானை வழிபட்டு, படைப்புத் தொழில் செய்யும் ஆற்றல் பெற்றான். பஞ்ச பாண்டவர்களுள் ஒருவனாகிய பீமசேனன், வேத்திரகீய நகரில் தங்கியிருந்தபோது, பகன் என்னும் அசுரனைக் கொன்ற பாவம் தீர, இங்கு இறைவனை வழிபட்டு அருள் பெற்றான். சைவ சமய ஆசிரியர்களில் ஒருவராகிய சுந்தர மூர்த்தி சுவாமிகள், தம் பொருட்டுக் குண்டையூர்க் கிழார் என்னும் நண்பரின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சிவபிரான் அளித்தருளிய நெல் மலையைத் திருவாரூருக்குக்கொண்டு வந்து சேர்த்தருளும்படி,

“நீள நினைந்தடியேன் உமை
  நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்
  வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்
  சிலநெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை
  அட்டித் தரப்பணியே

என்னும் தேவாரத் திருப்பதிகம் பாடி, அங்ஙனமே இறைவனால் அருள் செய்யப் பெற்ற சிறப்புடைய சிவத் தலம் இதுவேயாகும். அப்பர் (2), சம்பந்தர் (1), சுந்தரர் (1) என்னும் மூவரும், இத் தலத்தைத் தமது பாடல்களால் போற்றித் துதித்துள்ளனர்.

## கோயிலின் அமைப்பு :

ஆலயம் தலத்திற்கு நடுவண் உள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி ; கீழ்ப்புறம் திருக்கோயிலின் நுழைவில் இராசகோபுரம் அணி செய்கிறது. திருக்கோயிலின் எதிரே பிரம தீர்த்தம் உள்ளது. இராசகோபுரம் திருவாயிலில் நுழைந்தவுடன் வெளிப் பிராகாரம். வடபுறம் வசந்த மண்டபம் உள்ளது. சந்நிதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கொடிமரத் தூண் நிற்கிறது. இதையடுத்து இரண்டாங் கோபுரத் திருவாயில்.

இரண்டாம் கோபுரத்தில் நுழைந்தவுடன் உள் பிராகாரம் எதிரே சுவாமி சந்நிதி. தென்புறம் தியாகேசர் சந்நிதி, எதிரே சுந்தரர் பெருமான் உற்சவ மூர்த்தியாகப் பரவை நாச்சியாருடன் எழுந்தருளியுள்ளார். பிராகாரத்தை வலம் வரும்போது நிருதி திக்கில் பிரதான விநாயகராகிய தியாக விநாயகர் சந்நிதி, அதை அடுத்து விசுவநாதர், அடுத்து வாகன அறை. விசாலாட்சி, இந்திரபுரீசர், சந்திர லிங்கம், அதையடுத்து முருகனது தனித் திருக்கோயில். பக்கத்தில் வடபுறமாகச் சொக்க லிங்கம், அண்ணாமலையார் இலிங்க வடிவங்கள், அடுத்து நால்வர், திருமகள் ஆகிய மூர்த்திகள் உள்ளன. அம்மையார் திருக்கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் தனித் திருக்கோயிலாயுள்ளது. ஈசான திசையில் சபாநாதர் உயர்ந்த உருவத்தில் மிக அழகராய் விளங்குகிறார். அதையடுத்து மேற்புறம் நவக்கிரகங்கள் ஒரு முகமாகத் தென் திசையை நோக்கி விளங்குகின்றன. சுவாமிகருவறையின் வடபுறம் அர்த்தநாரீசுவரர், பிரம்மா, துர்க்கை, உமாமகேசர் வடிவங்களும், சுவாமி கர்ப்பக் கிருகத்தின் தென் பகுதியில் கணபதி, பிட்சாடனர், தட்சிணாமூர்த்தி ஆகிய மூர்த்திகளும் இருக்கின்றன. மேல்புறம் சங்கு சக்கரம் ஏந்திய திருமால் உருவமொன்றும் இருக்கின்றது.

பிராகாரத்தின் கீழ்ப்புறம் திருமாளிகைப் பத்தியில் சந்திரர், சூரியர் முதலிய உருவங்களும் உள்ளன. இரண்டாம் கோபுரத்தில் தென்புற மதிலில், பஞ்ச பாண்டவர் பூசித்து வழிபடும் கோலமும், பிரமன் பூசிப்பதும் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. சுவாமி கோயிலுக்கும் அம்பாள் கோயிலுக்கும் நடுவில் அகத்தியர் பூசித்த இலிங்கம் ஒன்று உள்ளது. அது தனிக் கர்ப்பக் கிருக அர்த்த மண்டபத்துடன் இருக்கிறது. சண்டீசர் திருக்கோயிலும் உள்ளது. சுவாமி சந்நிதியில் தலத் திருப்பதிகங்கள் பொறிக்கப் பெற்றுள்ள சலவைக் கற்கள் இருபுறமும் பதிக்கப் பெற்றுள்ளன.

கோயிலுக்கு வடபுறம் புனிதமும் புண்ணியமும் வாய்ந்த முத்தி நதியாகிய சந்திர நதி கிழக்கு நோக்கிச் செல்கின்றது. கோயிலுக்கு எதிரே பிரம தீர்த்தம் உள்ளது. தென்புறம் இந்திர தீர்த்தமும், மேல்புறம் அகத்தியர் தீர்த்தமும் உள்ளன. தென்மேற்கு மூலையில் சிவலோக விநாயகர் கற்றளியின் அருகில் விநாயக தீர்த்தம் உள்ளது. ஆலயத்தில் அம்மன் சந்நிதியில் சத்தி தீர்த்தம் என்று ஒரு கூவல் உள்ளது. மிகப் புனிதமானது. இது தான் அபிடேகம் முதலியவற்றிற்குப் பயன்படுகிறது.

தென்மேற்கு மூலையில் சிவலோக விநாயகர் வீற்றிருக்கின்றார். இவர் ஏமகாந்த மகாராசர்க்குச் சிவலோகம் காட்டியவர். கோயிலுக்குத் தெற்கே வரதராசப் பெருமாள் கோயில் இருக்கிறது. அருகில் தெற்கு வீதியில் அங்காளம்மன் கோயில் ஒன்று இருக்கிறது. கீழ்ப்புறம் மாரியம்மன் கோயில் உள்ளது. வடபால் மிக அருகில் குண்டையூரும், வலிவலமும், தெற்கே எட்டிகுடியும், மேற்கில் கைச்சினமும், கிழக்கில் சந்திர தீர்த்தம் கடலொடு சங்கமம் ஆகும் இடமாகிய காமேசுவரமும் இருக்கின்றன.

## கல்வெட்டுக்கள் ;

இக் கோயிலில் கல்வெட்டுக்கள் பல உள்ளன. அவற்றுள் பிற்காலச் சோழ பாண்டியர்களான சடாவர்மன், சுந்தர பாண்டியன், குலசேகர பாண்டியன், இராசராசன், இராசாதிராசன், மூன்றும் குலோத்துங்கன், மூன்றும் இராசேந்திரன் முதலிய சோழ பாண்டிய அரசர்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் அமைந்துள்ளன. திருக்கோளிலி (திருக்குவளை) என வழங்கும் இத்தலம் இராசேந்திர சோழ வள நாட்டு இடையள நாட்டு வெண்டாழை வேளூர்க் கூற்றத்துக்கு உட்பட்டதாய் இருந்தது. குலசேகர பாண்டியன் கல்வெட்டு ஒன்றினால், இத் தலத்திற்கு ''இருமரபும் துய்ய பெருமாள்புரம்'' என ஒரு பெயரும் வழங்கியதாகத் தெரிகின்றது.

## திருப்பணிகள் ;

வடவல்லத்தை இருக்கையாக உடைய இருன்குடியான், இந்திராவதி நல்லூர் உய்ய வந்தான், சீகாழிப்பிள்ளையான சயதுங்கவன் மன், மகா மண்டபந் தொடங்கிக் கீழவாசல் வரையும் திருப்பணி செய்தான். விளக்குகளுக்கு நிலம் விட்டான். இப்பணி சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251—1258) காலத்ததாகும். வடவல்லமும் இருன்குடியும் திருக்குவளைக்கு வடபால் நான்கு மைல் தூரத்தில் உள்ளன. இருன்குடி, இக்காலத்து இறையான்குடி என வழங்குகிறது. சந்திர நதிப் பெருக்கால் இத் தலத்து வட எல்லை அழிந்து பட்டதாகவும், மீளவும் பாலைக்குறிச்சி உடையான் திருமறைக்காட்டுக்குடையான் சீர்திருத்தினன் என்றும் தெரிகிறது.

பாலைக்குறிச்சி என்னும் ஊர் திருக்கோளிலிக்கு வடக்கே சுமார் 5 கல் தூரத்தில் இருக்கின்றது. இவ் வீதி எடுப்பிக்கப் பெற்ற காலம் கோச்சடைய பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டிய தேவர் அரியணையேறிய எட்டாவது ஆண்டு வைகாசி மாதத்து இருபத்தொன்பதாம் தேதியாகும். அதாவது கி.பி. 1259-ஆம் ஆண்டாகும். எனவே இக்கோயிலின் வடக்குத் திருவீதிகள் எடுப்பிக்கப்பெற்று இற்றைக்கு எழுநூற்றைந்து ஆண்டுகள் ஆகின்றன. இத் திருவீதிக்குத் திருமறைக்காடன் திருவீதி என்ற பெயரும் வைக்கப் பெற்றுள்ளது.

சுந்தர பாண்டிய தேவரின் யாண்டு 15-வதில் வல்லத்து இருன்குடியான் சேரனை வென்ற பாண்டிய தேவனுக்குப் பிரமாணம் பண்ணித் திருக்கோளிலி உடையார்க்கு பஞ்சத் திரவியம் ஆடியருளுதற்காகப் பண்டாரத்து 100 பொன் அளித்தான். ஆண்டு எட்டாவதில் பாலைக் குறிச்சியுடையான் திருமறைக்காடுடையான், வயிராதிராயன்சந்திரமௌலிப் பேராற்றுப் பெருக்கால் அழிந்த வடக்குத் திருவீதியைச் செப்பனிட்டு ஆற்று வடகரை தென்கரையும் சீர்திருத்திக் கொடுத்தான் என்பன கல்வெட்டுத் தொடர்.

செம்படவர்களில் ஆலன் என்பவன் அதிபத்த நாயனர் திருவுருவத்தை எழுந்தருளுவித்து அதற்கு அமுது படிக்காக இரண்டாயிரத்து நூறு காசைத் தாமோதரப்பட்டன் பக்கல் கொடுத்து இத் தருமம் முட்டின்றி நடைபெற ஏற்பாடு செய்தான். இவ்வறக் கட்டளை

இராசராச தேவனின் நான்காம் ஆண்டில் நிறுவப்பட்டது. சிவம்படவர் என்ற சொல்லே செம்படவர் என்ருகியிருக்கலாம்.

**அறக்கட்டளைகள் :**

இராசராசன் ஆட்சி 10-ஆவது யாண்டில் பழையனூர் நாட்டுப் பழையனூருடையான் வேதவனமுடையான் நுந்தாவிளக்குக்காக 100 காசு அளித்தான். குலோத்துங்கச் சோழ தேவரின் இருபதாம் ஆண்டில் கோளிலி உடையார்க்கு, திருச்சாட்டியக்குடியுடையார் திருமடைவிளாகத்து இருந்த ஒருவர் திருநுந்தா விளக்கு எரிப்பதற்கு இக் கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிரமாணர்களிடம் எண்ணூறு காசைக் கொடுத்துள்ளார்.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251—1258) ஆட்சி 18-ஆவது ஆண்டில் இவன் பிறந்த நாளாகிய திருவாதிரைதோறும் அரசர்க்கு நன்று உண்டாகப் பெருமானும் நாச்சியாரும் சிறப்பமுது செய்தருளித் திருவுலாப் போதவும், ஆளுடைய பிள்ளையார் திருநாளமுது செய்து திருவுலாப் போதவும், தேவாரம் அருளிப் பாடவும், நிலம் வாங்கி அளித்தான்.

வீரராசேந்திரன் (கி.பி. 1262) 7-ஆவது ஆட்சியாண்டில் இராசேந்திர சோழ வளநாடுடையார் திருக்கோளிலி உடையார்க்கு வெண்டாழை வேளூர்க் கூற்றத்துப் பெரிய உடையார் திருநுந்தா விளக்கு எண்ணெய்க்காக 135 காசு அளித்தான். யாண்டு 30-ஆவதில் பாலைக் குறிச்சியுடையான் திருமறைக்காடுடையான் தான் பிறந்த நாளாகிய கேட்டை நாளில் பெருமான் திருவுலாப்போத அமுதுபடி, சாத்துபடி, திருப்பள்ளித்தாமம், திருவிளக்கெண்ணெய் உள்ளிட்டவற்றிற்கும் சீபாதந் தாங்கவும், திருப்பள்ளித் தொங்கல் எடுக்கவும் பிறவற்றிற்குமாக நிலம் 5½ காணி அளித்தான். பாண்டிகுலாசனி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்து நாடுகிழான் அழகிய திருநாமத்துக் காணியாகத் தேவதானம் அளித்தான்.

குலசேகரபாண்டியனின் ஆட்சியாண்டு 31-ஆவதில் சித்தமல்லி வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்துப் பொன்னி நல்லூருடையான் சீராம தேவன் திருக்கோளிலி உடைய நாயனுர்க்கு இரண்டு நுந்தா விளக்கிட விளக்குப் புறமாக நிலம் அளித்தான்.

இவ்வூரில் மாகேசுவர விண்ணகர எம்பெருமான் கோயில் ஒன்று உண்டு என்பதை, சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தர பாண்டிய தேவர் கல்வெட்டு உணர்த்துகிறது. இப் பெருமாள் இக் காலம் வரதராசப் பெருமாள் என்னும் பெயருடன் திகழ்கின்றனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றில் குறிப்பிடப்பெற்ற குண்டையூர், இக்கோயிலில்உள்ள கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. அக் குண்டையூரில் உள்ள குண்டையூர் ஈசுவரமுடையார் கோயிலும், மூன்ரும் இராசேந்திர சோழன் கல்வெட்டில் சொல்லப்பட்டுள்ளன.

இரண்டாம் கோபுரத்தைக்கட்டுவித்தவன் தவலோகநாதன் என்பவன் ஆவன். இச் செய்தி அக்கோபுரத்தில் உள்ள ''நவலோக பாலன் கயிலாயன் வல்லை நரேசன் சற்றே அவலோகனத்தில் விடை கொடுத்தான் கலித் தடம் பொழுதே தவலோகநாதன் திருப்பணி'' என்னும் கல்வெட்டுப் பாடல் பகுதியால் கொள்ளக் கிடக்கின்றது. இவ்வூரில் திருஞான சம்பந்தர்க்குத் திருமடம் ஒன்று இருந்தது. அதற்கு 120 கலம் நெல் வருவாய் உள்ள ஒரு வேலி நிலம் கொடுக்கப்பட்டிருந்தது.

—ஆசிரியர்.

நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய்நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறம் அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலிஎம் பெருமானே

—சம்பந்தர்

மால தாகி மயங்கும் மனிதர்காள்
காலம் வந்து கடைமுடி யாமுனம்,
கோல வார்பொழிற் கோளிலி மேவிய
நீல கண்டனை நின்று நினைமினே

—அப்பர்

பாதிஓர் பெண்ணை வைத்தாய் படருஞ்சடைக் கங்கை வைத்தாய்
மாதர் நல்லார் வருத்தமது நீயும் அறிதி யன்றே
கோதில் பொழில்புடைசூழ் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
ஆதியே அற்புதனே அவையட்டித் தரப்பணியே

—சுந்தரர்.

# * நூலாசிரியரும் உரையாசிரியரும் *

### முன்னுரை :

ஆசிரியர்கள், நூலாசிரியர்—உரையாசிரியர்—போதகாசிரியர்—ஞானசிரியர் எனப் பலவகைப்படுவர். இவர்களுள் ஒருவர், மற்றொருவராகப் பெரும்பாலும் ஆவதில்லை. ஆயினும், இந்த நால்வகை ஆசிரியர்களுமாக ஒருசேரச் சேக்கிழார் பெருமான் விளங்கியருள்கின்றார் எனப் பெருங் கவிஞர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் பாடுகின்றார்.

### சேக்கிழார் :

''சுந்தரரின் திருத்தொண்டத் தொகை தொகையாகவும், நம்பி யாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதி வகையாகவும், தம்முடைய திருத்தொண்டர் புராணம் விரியாகவும் அமையும்படி இயற்றியதனால் நூலாசிரியர்; தமது நூலின் இடையிடையே திருப்பாசுரம் முதலிய தேவாரப் பாடல்களின் தெளிபொருள் இதுவென்று விளக்குவதனால் உரையாசிரியர்; குலோத்துங்க சோழன் போன்றவர்கள் பரசமய நூலிற் கொண்டிருந்த பற்றினை நீத்து, உய்யும்படி சிவசமய உண்மைகளை எடுத்துப் போதித்ததனால் போதகாசிரியர்; தமது நூலினைப் பயின்று ஓதுந்தோறும் யாவருக்கும் ஞானம் பெருகச் செய்தலால் ஞானசிரியர்'' எனத் தக்க நிலைகளில், சேக்கிழார் பெருமான் திகழ்கின்றார் என்பது, பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் விளக்கம்.

### சிவப்பிரகாசர் :

நூலாசிரியர்கள், உரையாசிரியர்கள் என்னும் இருவரில், உரையாசிரியர்களின் சிறப்பை நம்மிற் பெரும்பாலோர் மிகுதியாகப் போற்றுவதில்லை. உரை எழுதுதல் என்பது, எளிதான செயல் என்று நம்மிற் பலர் கருதுவதுண்டு. உரை எழுதுதல் என்பது, எளிதான செயல் அன்று; அஃதொரு கடினமான செயலேயாகும் என்னும் உண்மையினை, இற்றைக்குச் சுமார் முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்திருந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், தாம் இயற்றிய ''திருவெங்கைக்கோவை' என்னும் நூலில், ''அவயவம் எழுதுதல் அரிது என விலக்கல்'' என்னும் அகப்பொருள் துறையில், தோழியின் கூற்றாக வைத்து,

> ''மந்தாகினி அணி வேணிப்பிரான்
> வெங்கை மன்னவநீ,
> கொந்தார் குழல் மணிமேகலை
> நூல்நுட்பம் கொள்வதெங்ஙன் ?
> சிந்தா மணியும் திருக்கோவையும்
> எழுதிக் கொளினும்
> நந்தா உரையை எழுதல்
> எவ்வாறு நவின்றருளே''

என அழகுற விளக்கியருளிச் செய்திருத்தல் காணலாம். இதன்கண், சிவப்பிரகாசர் தலைவியின் அணிகலன்களைக் கூறுவதுபோல, மணிமேகலை சிந்தாமணி திருக்கோவை என்னும் செந்தமிழ்க் காவியங்களின் சிறந்த பெயர்களைக் குறிப்பிட்டிருத்தலும், இவற்றின் மூலத்தினை எழுதிக் கொண்டாலும், மேன்மேல் விரிந்து பெருகிச் செல்லுகின்ற (நந்தா) இயல்பினையுடைய உரையினை எவ்வாறு எழுதுதல் இயலுலும்? என வினவுதலும், இங்கு நாம் எண்ணியுணரத் தக்கன.

### கவிமணி :

இவ்வாற்றால் நூல் இயற்றுதலைப் போலவே உரை எழுதுதலும் கடினமானதொரு செயல் என்பது, துறைமங்கலம் சிவப்பிரகாசரின் கருத்தாதல் தெளிவு. இக் கருத்தினையே அண்மைக் காலத்தில் விளங்கியிருந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள், தமது பாடல் ஒன்றினால் மேலும் வலியுறுத்துகின்றார். ''நூல் இயற்றும் கவிராயர்கள் கண்ணை அழித்துக் கெடுக்கின்றனர்; ஆனால் அந்நூலுக்குப் பொருள் விளக்கம் செய்யும் உரைகாரர்களோ அழித்துக் கெடுத்த கண்ணை மீண்டும் படைத்துக் கொடுக்கின்றனர். உதாரணமாக,

> ''காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப் பெரிது''

---

* சென்னை ஆள்வார்பேட்டை வீனஸ் காலனி ஆத்திக சமாசத்தில் நடைபெற்ற ''திருவாசகமும் சிவராசயோகமும்'' என்னும் நூல் வெளியீட்டு விழாவில், நீதிபதி மாட்சிமிகு திரு. எஸ். மகராஜன், **B.A., B.L.** அவர்கள் தலைமையில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. (20—1—74)

—ஆசிரியர்.

என்னும் திருக்குறளில், 'காலத்தின்கண்' என வருவதற்குரிய 'கண்' உருபைக் கெடுத்துக் 'காலத்தினுல்' எனத் திருவள்ளுவர் வேற்றுமை மயக்கமாகக் கூறினுர். ஆனுல் பரிமேலழக ரோ, 'ஒருவனுக்கு இறுதி வந்த கால எல்லேக் கண்' எனக் கண் உருபை விரித்துரைத்து விளக்கிப் போந்தார். ஆதலின் கண்ணேக் கெடுப்பவர்கள் மேலானவரா? அல்லது கண்ணேக் கொடுப்பவர்கள் மேலானவரா?'' என வினவி, உரையாசிரியர்களின் சிறப்பை ஒருவகையில் தம் சதுரப்பாடு தோன்ற, அழ காகவும் நயமாகவும் விளக்கிப் பாடுகின்ருர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளே அவர்கள்.

''கண்ணேக் கெடுப்பர் கவிராயர்; அக் கண்ணே
எண்ணி உரைகாரர் ஈவாரே; மண்ணின் மேல்
ஆக்கு பவரோ? அழிப்பவரோ? மேலாவார்
நோக்கிநீ நன்றே நுவல்''

உரையாசிரியர்களில் இருவகையினர் உண்டு. ஒருவகையினர் நூற்பொருளே விளக்கித் தெளிவிப்பர். மற்ருெரு வகையினர் நூற்பொருளேக் கலக்கிக் குழப்புவர்.(1) இவ்விரு திறத்தாரில், பின்னேயோரே, பெரும்பான்மையும் மிகுதியாக உள்ளனர். எங்கோ எப்போதோ ஒருசிலர் மட்டுமே அருமையாக முன்னேய வகையினராகத் திகழ்வர்! அரிய அவ்வொரு சிலரே, உரையாசிரியர்கள் என மதித்துப் போற்றுவதற்கு உரியவராவர்.

''இருவருமே இறையருளால்
இனிய ஒளி பெறுகின்ருர்;
ஒருவர்இயற் றவும், ஒருவர்
உரைசெயவும் வருகின்ருர்''(2)

—ந.ரா.மு.

இத்தகைய வித்தகஞ்சான்ற உத்தம நல் உரையாசிரியர்களால் நாம் பெறும் நலன்களுக்கு அளவேயில்லே. அவர்கள், மூல நூலாசிரியர்களின் உள்ளத்தை ஒத்து நின்றுணர்ந்தும், (Sympathy, ஊடுருவி நின்றுணர்ந்தும் (Empathy), தெள்ளத் தெளிவாக விளக்கிக் காட்டி, நமக்கு நலம்பல புரிகின்ற னர். நூலாசிரியர்கள் போலவே, சிறந்த நல்ல உரையாசிரியர்களும் நமக்கு மிகமிக இன்றியமையாதவர்களாகத் திகழ்கின்றனர். சிறந்த நல்ல உரையாசிரியர்களின் அரிய பெரிய இனிய உரை விளக்கங்களேப் பயின்று மகிழ்தலினும், மேலான பேரின்பம் வேறெதுவும், இவ்வுலகியல் வாழ்வில் இல்லே எனலாம்.

(1) "We may first call to mind three competing statements, first the every day remark thatlanguage exists to express one's thoughts, next Tallyrand's well known mot that language exists to hide one's thoughts, and lastly Soven Kierkegaard's improvement of it, that language is used by many people to hide the fact that they have no thoughts."

—Otto Jespersen,
Mankind, Nation and Individual, p. 6.

(2) "Both must alike from Heaven
derive their light,
Those born to judge,
as well as those born to write".

—Alexander Pope

**மறைமலேயடிகள் :**

தனித்தமிழ் இயக்கத் தந்தையும், சைவ சித்தாந்தச் சான்ருேரும், மும்மொழிப் புலமை வேந்தரும், முனேத்தநற் கொள்கை வீரரும் ஆகிய தமிழ்க்கடல் மறைமலேயடிகள், சிறந்த உரையாசிரியர்களின் நூல்களேப் பயின்று மகிழும் தம்முடைய அறிவின்ப அனுபவத்தினேப் பின்வருமாறு எழுதியிருக்கின்ருர். ''நான் காளிதாசரின் நாடகங்களேயும், ஷேக்ஸ்பியரின் நாடகங்களேயும் மட்டுமேயன்றி, அவர்களின் நாடகங்களேப் பற்றிய உரைநூல்களேயும் தொடர்ந்து ஆராய்ந்து நெடுங்காலமாகப் படித்து வருகின்றேன்....தனிச் சிறப்பாக, மிகவும் சுவை நிரம்பியனவாகவும், பெரிதும் அறிவு விளக்கம் தருவனவாகவும் அமைந்துள்ள அல்ரிசி, கெர்வினஸ், சிலீகல், சுவின்பர்ன், டவ்டன், புருக், பிராட்லி, சைமன்ஸ், அட்சன், மூல்ட்டன், கார்சன், பிராண்டிஸ், மற்றும் சிறந்த பேரறிஞர்கள் பலர், ஷேக்ஸ்பியரின் நாடகங்களேப்பற்றி எழுதியுள்ள உரைவிளக்கங்களுக்கு இணேயாகக் குறிக்கத்தக்கது ஏதும் இல்லே என்றே கூறலாம். இந்த உரைநூல்களேப் பயில்வதனுல் ஏற்படுகின்ற உயர்ந்த ஆழ்ந்த பெரிய இன்ப அநுபவத்தோடு ஒப்பிடத்தக்கதாக, இவ்வுலகியல் வாழ்வில் வேறு எதனேயும் ஒருவர் அநுபவித்தல் இயலாது''(3) என்று தம்முடைய முன்னுரை ஒன்றிற் குறிப்பிட்டிருக்கின்ருர். ஆதலின், நூலாசிரியர்களேயும் உரையாசிரியர்களேயும் திறன் தெரிந்து தேர்ந்து போற்றிப் பயின்று, நாம் சிறப்பும் நலமும் எய்த முயல்வோமாக!

—ஆசிரியர்

(3) "I have been reading critically not only the plays of Kalidasa and Shakespeare but also the commentaries on their plays ... especially the very interesting and illuminating Shakespearian commentaries produced by Ulrici, Gervinus, Schlegel, Swinburne, Dowden, Brooke, Bradley, Symons, Hudson, Moulton, Corson, Brandes and others. In this life no one can experience a pleasure comparable in its height, amount and intensity to the intellectual and aesthetic pleasure which a study of these celebrated commentaries afford . . The pleasure given by these is equal only to that yielded by the plays themselves, nay, I may venture to say it is even a degree higher than that."

—MARAIMALAI ADIGAL

(முற்றொடர்ச்சி)

# திருமூலர் காட்டும் அறம்

'திருக்குறள் வேள்'
திரு கு. வரதராசப் பிள்ளை அவர்கள், B. A.,
திருச்சிராப்பள்ளி.

## (6) கள்ளுண்ணாமை :

பிறன்மனை நயத்தலைப் போன்று தீமையைத் தருவது கள்ளுண்ணுதலாம். ஆதலால் நல்லோர் கள்ளுண்பதற்கு அஞ்சுவர்; தீயோர் கள்ளுண்பதற்கு அஞ்சமாட்டார். பசுமாடு கூட, தாகவேட்கை உண்டானால் கழுநீரை உண்ணுமே தவிரக் குட்டை நீரை அருந்தாது. அவ்வாறிருக்க, மனிதன் சிவானந்தத் தேறலை உண்ணாது உலகானந்தத்தைக் கெடுக்கும் கள்ளை உண்டு கெடுகின்றனரே என்று ஆசிரியர் வருந்துகிறார். ''கழுநீர் பசுப்பெறிற் கயந்தொறும் தேரா கழுநீர் விடாய்த்துத்தங் காயஞ் சுருக்கும் முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்றோர் செழுநீர்ச் சிவன்றன் சிவானந்தத் தேறலே''. சிவானந்தத் தேறல் சுகானந்தத்தை அளிக்கும். ஆனால் அறிவிலிகள் கள்ளை உண்டு காமத்தில் மயங்கிக் கெடுவர்.

சத்தி வழிபாடு செய்பவர்கள் மது உண்டு மாள்வர்; காமமுடையோர் கள்ளுண்டு கலங்குவர்; ஆனால் மூலாக்கினியைத் தாண்டி நடத்தும் திறமுடையோரும், சிவன் நாமத்தைச் சொல்லி வழிபடும் அன்புடையோரும், இறைவனை உள்ளத்துள்ளே கண்டு திருவடியைப் பொருந்தி நிற்பர். கள்ளுண்பதால் வாய்மை கெடும்; மடவார்மேல் காதல் உண்டாகும்; ஞானநிலை தவறும்; அதனால் அவர்களுக்குப் பேரின்பம் கிட்டாது. ஆனால் சிவானந்தத் தேறல் உண்பவர் தத்துவங்களினின்றும் நீங்கி மயக்கத்தைவிட்டு ஆன்மா தனியேயாகி உண்மை இன்பம் எய்திச் சித்தி பெறுவர். ஆதலால் துன்பம் நீங்கி இன்பம் அடைய வேண்டுவோர் கள்ளுண்ணாமையாகிய சிறந்த அறத்தை மேற்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார் ஆசிரியர்.

## (7) தானச்சிறப்பு :

எதிர்மறை முகத்தான் அறம் கூறிவந்த ஆசிரியர் உடன்பாட்டு முகத்தான் தலையாய அறமாகிய கொடையைப் பற்றிக் கூறுகிறார். கொடையாவது, பிறருக்கு விரும்பிக் கொடுத்தலாம். கொடுக்கும்போது வேண்டியவர் வேண்டாதவர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று பாராது கொடுக்க வேண்டும். பழமையான பொருள் என்று போற்றிப் பாதுகாக்காமல் தேவைப்பட்டவர்க்குக் கொடுக்க வேண்டும். உண்ணும்போது விருந்தினர் யாராவது உளரா என்று பார்த்துப்பின் உண்ண வேண்டும். காக்கைக் கூடத் தான் உண்பதற்கு முன்னே தன் இனத்தையெல்லாம் அழைத்துத் தானே பின்னர் உண்ணுகிறது. ''செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத் தவர்க்கு'' என்பார் நாயனாரும்.

''யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை யாவர்க்கு மாம்பசுவுக்கொரு வாயுறை, யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி, யாவர்க்குமாம்பிறர்க்கின்னுரை தானே'' என்கிறார் திருமூலர். அறத்தை எல்லோரும் செய்யக் கூடியவகையில் எவ்வளவு எளிமைப் படுத்திக் கூறுகிறார்? அறம் செய்வதைக் காட்டிலும் அறம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் முக்கியமானது என்பதை வற்புறுத்துவதற்காகவே இவ்வாறு கூறுகிறார். ''அறம் செய விரும்பு'' என்பது ஔவையார் வாக்கு. இம்முறையில் அறம் செய்பவரே உண்மைப் பொருளை உணர முடியும். அறம் செய்யாதவரை நோக்கி ஓர் எச்சரிக்கை விடுக்கிறார் ஆசிரியர். மனத்தின்கண் உள்ள மாசுகளை நீக்கி மெய்ஞ்ஞானத்தைப் பெறமாட்டீர்கள்; செல்வம் நிரம்பியுள்ளபோது தருமமும் செய்ய மாட்டீர்; கண் இருந்தும் குருடராயினீர்; காலன் வந்து உயிரைப் பற்றிக் கொண்டு போகும்போது என்ன செய்வீர் என்று அறம் செய்யாமையால் வரும் தீமையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். ''அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர், தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர், விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து விழிக்கவன் றென்செய்வீர் ஏழைநெஞ் சீரே'' (254).

காலன் வரும்போது நம்முடைய நிலையைக் கருதமாட்டான்; நம்மை நல்லவர் என்று அறியமாட்டான்; இவர் இல்லாதவராயிற்றே, இளையவராயிற்றே என்றும் பார்க்கமாட்டான்;

காலமுடிவில் வந்து நிச்சயமாக நம்மை அழைத்துச் செல்வான்; ஆதலால் காலம் உள்ளபோதே விரைந்து செய்ய வேண்டிய செயலைச் செய்துவிட வேண்டும். பாதகர் தாம் அறத்தின் பயனை அறிவாரோ! இவர்கள் பாவிகள் ஆயிற்றே. ஆதலால் வட்டி வாங்கிப் பொருள்களை ஈட்டி வைப்பர். அறத்தால் வரும் இன்பத்தை அறியாதவராவர். ''வட்டி கொண் டீட்டியே மண்ணின் முகந்திடும் பட்டிப் பதகர் பயன் அறி யாரே''. அறம் அறியார் படும் துன்பத்தை ஆசிரியர் கூறும்போது நமக்கே அச்சம் உண்டாகிறது.

''இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந் தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்'' என்பது அவர் வாக்கு. மேலும் அவர்கள் சிவபுரத்தின் எல்லைக்குக் கூடச் செல்ல முடியாது. ஆனால் அறம் செய்தவர் பக்கம் நோயும் அணுகாது; இறைவன் திருவடியை அடைவதற்குரிய தகுதியும் பெறுவர். ஆதலால் துன்பம் நீங்கி இன்பம் பெறுவதற்குத் துணையாவது அறம் என்பதாகும்.

## (8) அன்புடைமை :

அறம் செய்வதற்கு அன்பே அடிப்படையாகும். அன்பு என்பது ஒரு பண்பு ஆகும். அதனைக் காண முடியாது. அஃது உடையார் மாட்டு உண்டாகும் மெய்ப்பாடுகளால் உணர முடியும். ''ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்'' என்பது பொய்யாமொழி. அன்பின் பெருமையைக் கூறவந்த திருமூலர் 'அன்பே சிவம்' என்று அறைகின்றார். அன்பு வேறு சிவம் வேறு அல்ல, இரண்டும் ஒன்றே என்று உணர்ந்தவர் அன்பே சிவமாய் அமர்ந்திருப்பர் என்கிறார் ஆசிரியர். ''அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார், அன்பே சிவமாவதாரும் அறிகிலார், அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே'' (270). எங்கே உள்ள நெகிழ்ச்சி உண்டாகிறதோ அங்கே சிவம் விளங்கும் என்பதாம். அவ்வாறு !அன்புடையார்பால் சிவன் செம்மேனியம்மானாகச் சோதி வடிவில் தோன்றியருளுவான்.

''பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன், மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே'' என்பது அன்பில் விளங்கும் பெருமானின் வருணனை. இறைவனை அடைய வேண்டி உடம்பிலுள்ள எலும்பையே விறகாகக்கொண்டு, தசையை அறுத்து அக்கினி குண்டத்திலிட்டு வாட்டினாலும் போதிய பயனைத்தராது; ஆனால் அன்போடு அவனது கருணையை நினைந்து உருகுவார்க்கு அவன் வெளிப்பட்டு அருளுவான். ''என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப் பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும், அன்போடுருகி அகங்குழை வார்க்கன்றி என்போல் மணியினை எய்த ஒண்ணாதே''. (272)

அவனது திருவடியை அடைய வேண்டுமென்ற ஆர்வம் உடையவரும், அன்பு உடையவரும் அவனைக் காண்பர்; ஆனால் நெஞ்சில் வாழ்க்கை பற்றிய கவலை உடையவர் பிறப்பு இறப்பைத் தான் காண்பர். அவர்கள் காட்டகத்தே சென்று நெறி அறியாது மயங்குவாரைப் போன்று சம்சார சாகரத்தைக் கடக்க முடியாது மயங்குவர். ஆதலால் தலையாய அன்பு செலுத்தி அவனை நாட வேண்டும்; அப்போது அவனும் நம்மிடம் அன்பு செலுத்தி நம்மை வாழவைப்பான். அவன் அன்புமயமாக உள்ளான் என்பது, ''அன்பினுள்ளாகி அமரும் அரும்பொருள் அன்பினுள்ளார்க்கே அணைதுணை யாமே'' என்ற மந்திரத்தில் இன்னும் தெளிவாக விளங்குவதைக் காணலாம்.

அடுத்து அன்புமயமான சிவன் அவனை அடைவதற்குரிய அன்பு நெறியாகவும் உள்ளான். ''வன்படைத் திந்த அகலிடம் வாழ்வினில் அன்படைத் தான்தன் அகலிடத் தானே'' என்ற வரிகளால் உலகவாழ்வினில் மக்கள் முன்னேற அன்பு நெறியைப் பெருமான் அமைத்தான் என்பது புலனாகிறது. சிவனை அடைவதற்குரிய சாதனங்கள், சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. இந்நான்குக்கும் அன்பு இன்றியமையாதது. அன்பின்றிச் சரியை முதலியவை பயன்படா. ஆதலால் அன்போடு மனம் கசிந்து உருக வேண்டும். அவ்வாறு அன்பு அல்லது பக்தியுடையவரே சிவனை உணர முடியும் என்பது. ''பத்தர் தம் பத்தியின் பாற்படில் அல்லது முத்தினை யார் சொல்ல முந்துகின்றாரே'' என்ற மந்திர வரிகளால் விளங்கும்.

ஆதலால் அக்கினிப் பிழம்பாகவுள்ள பெருமானை மனத்திலே வைத்து வாக்கினால் வழுத்தி வேண்டினால் அவன் இன்பம் கொடுப்பான் என்று நம்மையெல்லாம் இன்பம் பெற வேண்டி அழைக்கிறார் ஆசிரியர். அன்பே சிவம், அன்பே சிவனை அடைவதற்குரிய நெறி, இனி, அன்பே முத்தியுமாம். இந்நிலை அடைந்தவர் அனுபவத்தை அழகாகக் கூறுகிறார். ''அன்புள் உருகி அழுவன் அரற்றுவன், என்பும் உருவஇராப்பகல் ஏத்துவன் என்பொன் மணியை இறைவனை ஈசனைத் தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே'' என்பது அவர் பொன்மொழி. இவ்வாறு அன்பு செலுத்துபவரை இறைவன் அறிந்து பாசக்குழியிலிருந்து மேலேற்றி அருள்புரிவான்.

**(9) அரசன் :**

இதுகாறும் கூறிவந்த அறங்கள் முறையாக நடைபெற வேண்டுமானால், அரசன் நல்ல வகையில் அமைந்திருக்க வேண்டும். மேலும் ஆட்சி நடத்தும் மன்னன் அறநெறியில் நிற்ப வனாக இருக்க வேண்டும். இல்லையெனில் அவன் கூற்றினும் கொடியவனாவான். ஆதலால் நாட்டில் நன்னெறி தழைக்கச் செய்தலோடு, தீய நெறியில் நிற்போரையும் நன்னெறியில் நிற்கச் செய்தல் அரசனின் கடமையாகும். ''வேட நெறிநில்லார் வேடம்பூண் டென் பயன்? வேட நெறிநிற்போர் வேடம்மெய் வேடமே, வேடநெறிநில்லார் தம்மை விறல் வேந்தன் வேட நெறிசெய்தால் வீடது வாமே'' (240).

வேடம் நெறி செய்தலாவது, தோற்றத் துக்கு ஏற்றவாறு செயலும் ஒத்திருக்குமாறு செய்தல், தூய்மையற்ற செயலைச் செய்வ தற்குத் தூய்மையான வேடத்தைப் பூண்பது தங்களது கூடாவொழுக்கத்தை மறைப்பதற் காகவேயாம். ஞானம் சிகை நூல் முதலிய தரித்து ஞானிகள்போல் நடிக்கின்றவர்களை ஞானிகளைக்கொண்டே உண்மை நிலையைச் சோதித்து உணர்ந்து அவர்களுக்கு ஞானம் உண்டாக்குதல் நாட்டுக்கு நன்றாகும். ''ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி, ஞானிகள் போல் நடிக்கின்றவர்தம்மை, ஞானிகளாலே நரபதி சோதித்து, ஞானமுண்டாக்குதல் நல மாகும் நாட்டிற்கே'' (242).

இன்று எத்துணையோ பேர்கள் வேடம் பூண்டு வேடத்துக்குரிய நெறி நில்லாது ஒழுகு வதைக் காண்கிறோமே! அவர்களையெல்லாம் அரசு சோதித்துத்தண்டம் செய்து ஒறுத்தல், மக்கள் தீயநெறியில் செல்லாமல் தடுப்பதற் குரிய சிறந்த வழியாகும். பசுவினையும் பெண் களையும் காக்க வேண்டுவதும் அரசனது இன்றி யமையாத கடனாகும். அவ்வாறு காக்கவில்லை யாயின், அவ்வரசன் மறுபிறப்பில் நரகத்தை அடைவான் என்று ஆணை மொழிகிறார். ''ஆவையும் பாவையும் மற்றற வோரையும் தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையும், காவலன் காப்பவன் காவா தொழிவானேல் மேவும் மறுமைக்கு மீளா நரகமே'' (243). பிராண சத்தியால் உடம்பிலுள்ள குண்டலினி சத்தியை மேலேற்றிச் சந்திர கலையினின்றும் ஒழுகும் அமுதினைப் பருகாது மயக்கந்தரும் கள்ளினைப் பருகித் திரியும் வேடதாரிகளையும் தண்டித்தல் அரசன் கடமையாகும். அவ்வாறு செய்யவில்லையெனில் நாட்டில் விளையும் தீமைக்கும் அரசன் பொறுப்பாவான். ''கால் கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப் பால்கொண்டு சோமன் முகம் பற்றி உண்ணு தோர், மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை, மேல்கொண்டு தண்டஞ்செய் வேந் தன் கடனே''(246).

அரசன் அவரவர் சமய நெறிப்படி அவர வரை ஒழுகச் செய்ய வேண்டும்; அவ்வாறு நில்லாதவரை ஆகம முறைப்படி சிவனது தண்டம் கிடைப்பினும், அரசன் தண்டித்த லும் இன்றியமையாத ஒன்றாகும் என்று இறுதி யாக அறவுரை வழங்குகிறார். ''தத்தஞ் சமயத் தகுதிநில்லாதாரை அத்தன் சிவன் சொன்ன ஆகம நூல்நெறி எத்தண்டமுஞ் செயும் அம்மையில் இம்மைக்கே மெய்த் தண் டஞ்செய்தல் வேந்தன் கடனே''(247).

உலக வாழ்வு நிலையுடையது அன்று எனவும், அறம் ஒன்றே நிலையானது எனவும் உணர்ந்து மக்கள் நிற்பதோடு, அந்நெறி நிற்ப தற்கு அரசு துணை புரிய வேண்டும் என்பது திருமூலர் காட்டிய அறநெறியாகும். *

---

# அஞ்செழுத்தின் புணை

தனியனேன் பெரும்பிறவிப் பவ்வத்து, எவ்வத்
 தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்,
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலாற்
 கலக்குண்டு, காமவான் சுறவின் வாய்ப்பட்டு,
இனிஎன்னே உய்யுமாறு என்றென் றெண்ணி,
 அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை,
முனைவனே முதல்அந்தம் இல்லா மல்லற்
 கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே !

# "பொறிவாயில் ஐந்தவித்தல்"

**முன்னுரை :**

தமிழ்நாட்டு மூவேந்தருள் ஒருவனாகிய பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை, சிவபிரானின் முக்கண்களுள் நெற்றிக்கண் போன்றவன்' என்னும் கருத்து அமைய,

''ஓங்குமலைப் பெருவிறற் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூஎயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற!''

எனப் புறநானூற்றுப் பாடல் ஒன்றில், மதுரை மருதன் இளநாகனார் புகழ்ந்து பாராட்டுகின்றார். அந்த நிலையில், ''கறைமிடற்று அண்ணலின் காமர் சென்னிப் பிறைநுதல் விளங்கும் ஒருகண் போலச்'' சைவஆதீனங்களுள் சிறந்து விளங்குவது, திருவாவடுதுறை ஆதீனம். இவ்வாதீனம் இந்நூற்றாண்டிற் செய்துவரும் சிறந்த பணிகளுள் தலையாயது, அறிஞர் பெருமக்களே மருண்டு கலங்கும் நிலையில் மறைபொருளாக விளங்கி வந்த திருமந்திர நுண்பொருள்களை, மக்கள் அனைவரும் ஓரளவேனும் உணரவும் சிந்திக்கவும் செய்து வருதலாகிய சிறந்த தொண்டாகும்.

**திருக்குறளும் திருமந்திரமும் :**

நமது தலைவர் அவர்கள், தமது தலைமையுரையில் திருக்குறளுக்கும் திருமந்திரத்திற்கும் உள்ள இயைபு ஒப்புமைகளையெல்லாம், அழகுற எடுத்து விளக்கினார்கள். (1) திருவள்ளுவர் உலகியலை வகுத்தருளிய பெரியார், திருமூலர் அருளியலை விளக்கி உதவிய சான்றோர். (2) திருவள்ளுவரின் திருக்குறள் போலவே திருமூலரின் திருமந்திரமும் உலகுக்கு ஒரு பெரும் பொது நூலாக மிளிர்தற்குரிய மேம்பாடு மிக்கது. (3) திருக்குறள் போலவே திருமந்திரமும் ஓதுதற்கு எளிதாய் உணர்தற்கு அரியதாய்' ஒளிவிட்டு இலங்குவது! (4) திருக்குறள் இம்மை வாழ்க்கைக்கு உரியது, திருமந்திரமோ மறுமை வாழ்க்கைக்கு இன்றியமையாதது. (5) திருவள்ளுவரும் திருமூலரும் செந்தமிழ்த்தாய் ஈன்றெடுத்த இரட்டைப்பிள்ளைகள் போல்பவர் எனலாம். இவர்கள் இருவருக்கும் இடையே அத்துணைக் கருத்தொப்புமைகளும் சாயலும் காணப்படுகின்றன. (6) திருவள்ளுவர் உலகுக்குப் பொதுநூல் உதவினார், திருமூலர் உலகுக்குச் சிறப்புநூல் வழங்கினார். (7) திருக்குறள் தமிழ் வேதமும், திருமந்திரம் தமிழாகமமும் ஆகும். (8) திருக்குறள் உலகியல் ஒழுக்கங்களாகிய இல்லறம் துறவறம் என்னும் நெறிகளை இனிது விளக்குகின்றது, திருமந்திரமோ அருளியல் ஒழுக்கங்களாகிய சரியை கிரியை யோக ஞானங்களின் இயல்பினையெல்லாம் தெளிவுறத் தெருட்டுகிறது. ''ஞான முதல் நான்கும் மலர் நல் திருமந்திரமாலை'' என ஆசிரியர் சேக்கிழாரும் இவ்வுண்மையை இனிது குறிப்பிட்டருளுகின்றார். (9) திருக்குறளில் அருளியல் பாலில் நெய்போல் மறைந்து நிற்க, திருமந்திரத்திலோ ததிநெய் போல அருளியல் விளங்கித் தோன்றுகின்றது.

(10) உலகியல் ஒழுக்கம் நிலைபெற இறையருளியலுணர்வு மிகமிக இன்றியமையாது வேண்டப்படும். அங்ஙனமே அருளியல் வாழ்க்கை ஆக்கம் பெறுதற்கு உலகியல் ஒழுக்கம் விழுமியமுறையில் ஓம்பப்படுதல் வேண்டும். இவ்வுண்மைபற்றி ஒழுக்கநெறி வகுக்கப் போந்த திருவள்ளுவர், கடவுள் வாழ்த்துக் கூறினார். கடவுளியல் விளக்கத்தலைப்பட்ட திருமூலர் ஒரு சில உலகியல் ஒழுக்கங்களையும் தமது நூலின் தொடக்கத்தில் வற்புறுத்த முற்படுகின்றார். (11) திருக்குறள் செந்தமிழ்த் தாய் தந்த நன்கொடை! திருமந்திரம் சிவநெறித்தந்தை வழங்கிய கலைப்பெரும் பொருட் களஞ்சியம்! (12) திருவள்ளுவரை 'இளம் பாலாசிரியர்' எனவும், திருமூலரைப் 'பெரும் பேராசிரியர்' எனவும் கூறலாம். (13) கற்பவை கற்பிப்பது திருக்குறள்! கற்பன கற்று நிற்குநெறி நிற்கப் பழக்கிப் பயிற்றுவிப்பது திருமந்திரம்! (14) திருக்குறள் நூலோர்க்கு உரியது! திருமந்திரம் ''நூலாருள் நூல் வல்லோர்''க்கு உரியது.

**ஐம்பொறி புலன்கள் :**

திருமந்திரத்தில் ஒன்பதாம் தந்திரத்தில் ''ஐந்து இந்திரியம் அடக்கும் அருமை-முறைமை'' என இருதலைப்புக்கள் அமைந்தி

---

* திருவாவடுதுறை ஆதீனத்தில் நிகழ்ந்த 21-ஆம் திருமந்திர மாநாட்டில், மேலத்தஞ்சை நீதித்துறைத் தலைவர் திரு T. N. சிங்காரவேலு, B. A., B. L. அவர்கள் தலைமையில், ''ஐந்து இந்திரியம் அடக்கும் அருமை'' என்னும் திருமந்திரப் பகுதி குறித்துப் பேசியதனைத் தழுவியது. (28—1—74).

—ஆசிரியர்.

ருக்கின்றன. ''அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை; விடல் வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு'' எனவும், ''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி நின்ருர் நீடு வாழ்வார்'' எனவும் திருவள்ளுவர் அருளிச் செய்திருப்பது, திருவள்ளுவர்க்கும் திருமூலர்க்கும் இடையேயுள்ள கருத்தொப்புமையினைத் தெளிவுறக் காட்டுகின்றது. பொறி புலன்களை அடக்கி வெற்றி கொள்வதே, சமய வாழ்வின் குறிக்கோளாகும். சமய இலக்கியங்கள் அனைத்தும் ஒருசேர இதனைப் பெரிதும் வற்புறுத்துகின்றன. ஐம்பொறி புலன்கள் செம்பெருளாகிய இறைவனை நாம் உணர வொட்டாமல், நமக்கு அளவிலா இடர்களை விளைவித்து வருகின்றன். அவைபுரியும் கொடுமைகளை அருளாளர்கள் அனைவரும் தத்தம் பாடல்களில் பலவாருகக் குறிப்பிட்டு வருந்தியும், கடிந்தும் உள்ளனர்.

(1) ''மாறிநின் றென்னை மயக்கிடும்
வஞ்சப் புலன்''

(2) ''மாறுபட்டு அஞ்சென்னை வஞ்சிப்ப
யான்உன் மணிமலர்த்தாள் வேறுபட்
டேன்''

(3) ''புலன்கள் திகைப்பிக்க யானும்
திகைத்து
இங்கொர் பொய்ந்நெறிக்கே விலங்கு
கின்றேன்''

(4) ''எறும்பிடை நாங்கூழ் எனப் புலனல்
அரிப்புண்டலந்த வெறுந்தமியேன்''

(5) ''ஆனைவெம்போரிற் குறுந்தூறு எனப்
புலனல் அலைப்புண்டேன்''

(6) ''அடற்கரிபோல் ஐம்புலன்களுக்கு
அஞ்சி அழிந்தேன்''

(7) ''பொதும்புறு தீப்போற் புகைந்து
எரியப்
புலன்தீக் கதுவ வெதும்புறுவேன்''

என்றெல்லாம் எத்தனையோ பலவகைகளில், மணிவாசகர் ஐம்பொறி புலன்களின் அளப்பரிய கொடுமைகளையும், குறும்புகளையும் குறிப்பிட்டு அருள்கின்ருர். இங்ஙனமே, ஆழ்வார்கள் நாயன்மார்கள் முதலிய அருளாளர்கள் அனைவருமே, ஐம்பொறிகளின் கொடுமைகளைக் குறித்து அரற்றிப் புலம்பியுள்ளனர்.

## திருமூலர் உருவகங்கள் :

திருமூலர் ஐம்பொறி புலன்களின் அளக்கலாகாக் கொடுமைகளை, அழகிய உருவகங்கள் பலவற்றின்மூலம் உணர்த்துகின்ருர். அவற்றை அடக்கி வெற்றி காண்பதற்குரிய வழிவகைகளையும் நமக்கு அறிவுறுத்துகின்ருர். (1) ஐம்பொறி புலன்கள் அடக்க இயலாத மத யானைகளைப் போன்றவை, (2) அடங்காமற் பாய்ந்தோடுகின்ற குதிரைகளை நிகர்த்தவை, (3) நம் உடலாகிய காட்டில் இருந்து நம்மை எப்போதும் இம்சித்து அஞ்சுவித்துக்கொண்டிருக்கின்ற சிங்கங்களை ஒத்தவை.

''ஆக மதத்தன ஐந்து களிறுள
ஆக மதத்தறி யோடுஅணை கின்றில'' (1)

''எடுத்துற ஏறி இருக்கினும் ஆங்கே
வருத்தினும் அம்மா வழிநட வாதே'' (2)

''வெல்லகில் லேன்புலன் ஐந்துடன்தன்னை
யும்
கொல்லநின் ருேடும் குதிரைஒத் தேனே''
(3)

''அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன
அஞ்சும்போய் மேய்ந்துதம் அஞ்சுஅகமே
புகும்'' (4)

ஐம்பொறிகளாகிய யானைகளையும் குதிரைகளையும் அடக்க வேண்டும்; சிங்கங்கள் போன்ற அவற்றின் நகங்களை அறுத்துப் பற்களைப் பறிக்க வேண்டும். அங்ஙனம் செய்தற்கு யோகநெறி தான் ஏற்றது. யோகநெறி கடைப்பிடித்தால் அவைகள் நமக்கு அடங்கிவிடும். பின்னர்ச் சிவமாகிய நடுதறியில் அதனைப் பிணித்துக் கட்டி ஏவல் கொள்ளலாம். இதனல் இறைவனை எய்துதல் நமக்கு எளிதாகிவிடும்.

பாகனும் எய்த்தவை தாமும் இளைத்தபின்
யோகு திருந்துதல் ஒன்றறி யோமே (1)

அஞ்சின் உகிரும் எயிறும்அறுத் திட்டால்
எஞ்சாது இறைவனை எய்தலும் ஆமே (2)

பொறிபுலன்கள் இறைவனல் நமக்குத் துணையாகக் கொடுக்கப் பெற்றவை; ஆனல் அவைகள் நமக்குத் துணை புரியாமல், நமக்குத் தொல்லை விளைவிக்கின்றன. அவைகள் நமக்குக் கீழ்ப்படிந்து நமக்கு ஏவல் செய்தற்குரியவை; ஆனல் அவைகள் நம்மைக் கீழ்ப்படியச் செய்து நம்மை ஏவல்கொண்டு அலைக்கழிக்கின்றன. நமக்கு அஞ்சிப் பணிய வேண்டிய அவைகள், நம்மை அஞ்சுவித்துப் பணிய வைக்கின்றன. அறிவு விளக்கக் கருவிகளாகப் பயன்படவேண்டிய அவைகள், அறிவை மறைத்து நமக்குப் பயன்படாமல், மயக்கம் விளைத்து நம்மைத் துன்புறுத்துகின்றன. ''எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையான் வேருகும் மாந்தர் பலர்'' எனத் திருவள்ளுவர் கூறுதல்போல, அரசனுக்குப் பணிந்து துணையாய் நின்று நலம் புரிதற்குரிய அமைச்சர்கள், படைவீரர்கள் முதலினேர்,

சீவக மன்னனை எதிர்த்த கட்டியங்காரன் போல வஞ்சகர்களாகவும் (Traitors), காட்டிக் கொடுப்பவர்களாகவும் (Betrayers) மாறிவிடுவது போன்று, உயிர் ஆகிய அரசனுக்கு, வஞ்சகர்களாக மாறிய அமைச்சர்களும் படைவீரர்களும் போன்ற ஐம்பொறி புலன்கள் விளைவிக்கும் இடர்களுக்கு எல்லையே இல்லை.

''ஐவர் அமைச்சருள் தொண்ணூற் றறுவர்கள்
ஐவரும் மைந்தரும் ஆளக் கருதுவர்
ஐவரும் ஐந்து சினத்தொடே நின்றிடில்
ஐவர்க்கு இறையிறுத்து ஆற்றகி லோமே''

**பார்ப்பான் பசுக்கள் :**

ஐம்பொறி புலன்கள், மதயானை, அடங்காக் குதிரை, உறுமும் புலி, இம்சிக்கும் சிங்கம், சீறும் பாம்பு என்பன போலக் கொடியனவே ஆயினும், ஒரேவழி பசுக்களைப் போன்று நல்லனவுமாகும். அவைகள் மேய்ப்பார் இல்லாமல் வெறிகொண்டு திரிகின்றன. மேய்த்துக் காப்பவர்கள் ஏற்பட்டு, வெறியும் அடங்கினால், ஐம்பொறி புலன்கள் ஆகிய பசுக்கள், பால் நிரம்பவும் சுரந்து சொரிந்து, நமக்குப் பெரிதும் பயன்படும்.

''பார்ப்பான் அகத்திற் பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துப் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும்பாலாச் சொரியுமே''

எனத் திருமந்திரம் நமக்கு அறிவுறுத்துகின்றது. அறிவு நூல்களைக் கற்று, இறைவனைக் கண்டு அருள்பெறுதற்குரியதாகலின், ஆன்மா (உயிர்) ஈண்டுப் ''பார்ப்பான்'' எனப்பட்டது. நமக்குப் பெரிதும் பயன்படுதற்குரிய நல்ல கருவிகள் ஆதலின், ஐம்பொறிகள் ''பசுக்கள்'' எனப்பட்டன. பொறி புலன்களை அடக்கியாளாமல், அவற்றை விரும்புமாறெல்லாம் நாம் ஓடவிடுதலின், ''மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன'' என்றார். இறைபணி நின்று பொறிபுலன்களை அடக்கி வெற்றிகொள்வதனால் நலன்கள் பலவும் பெருகுதலின், ''பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியும்'' எனப்பட்டது.

**புலனடக்கம் :**

ஐம்பொறிகளை அடக்காமல், அவற்றின் வழியே இயங்கும் ஒருவனது உடல்நலம், மனநலம், உயிர்நலம் அனைத்தும் கெடும்; அவன் நீதியுணர்வும் ஒழுக்க நெறியும் இழப்பான்; தனக்கும் தன் குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும் அவமானத்தையும் அல்லல்களையும் விளைவிப்பான்; அவனது படைப்பாற்றல்கள் தேய்ந்து சிதைந்தொழியும்; அவன் தனக்குத் தானே நரக வேதனையைத் தேடிக் கொள்வான்.(1) இவ்வுண்மை தனி மனிதனுக்கு மட்டுமேயன்றி, நாட்டிற்கும் மக்கட் சமுதாயம் அனைத்திற்குமே பொருந்துவதாகும். புலனடக்கமும் ஒழுக்கமும் சிறந்து விளங்கும் நாடுகளும், சமுதாயங்களும், மேன்மேற்சிறந்தோங்கி வளர்ச்சியுற்று முன்னேறும். புலனடக்கமும் ஒழுக்கமும் அற்ற நாடுகளும் சமுதாயங்களும் நாளடைவில் வீழ்ச்சியுற்றுச் சிதைந்து தேய்ந்து சீரழிந்து ஒழியும். இவ்வுண்மையை உலகநாடுகளின் வரலாறுகளில் பரக்கக் காணலாம்.(2) ஐம்பொறிகளை அடக்கியாளும் திறன், வெறும் மனித முயற்சிகளினால் மட்டுமே அமைவதன்று. அஃது இறைபணி நிற்றலாலும் இறையருளின் துணையினாலும் மட்டுமே கைகூடுவதாகும்.(3).

**சிவானந்த லகரிச் செய்யுள் :**

நமது திருவாவடுதுறை ஆதீனத்தின் பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் நோய்வாய்ப்பட்டு, ஆவி யாக்கையின் அகத்ததோ புறத்ததோ என ஐயுறும் நிலையில்படுக்கையாகக் கிடந்தபொழுது, மகாவைத்திய நாதையர் என்னும் இசைப் பேரறிஞர் அவர்களைக் காண வந்தார். இருவரும் உரையாடிக் கொண்டிருந்தபொழுது ஆதிசங்கரருடைய சிவானந்தலகரிச் சுலோகம் ஒன்றை மகா

---

(1) " Overindulgence of the sex urge tends to undermine the physical and mental health and vitality of the individual, destroys his sense of morality, brings misery and shame upon himself and his family and friends, diminishes his creative energy, and ruins his prospects for happiness." (p. 45).

(2) " Civilized societies which have most strictly limited sexual freedom have developed to highest cultures " (88). The nation that permits chronically excessive, illicit, and disorderly sex activities contributes to the decline of cultural creativity " (85). The periods of social and cultural decline in ancient Greece and Rome were characterized by sex anarchy and mental disorders."

—PROF. PITRIM A. SOROKIN,
Sane Sex Order

(3) I had been labouring under the delusion that fruit diet alone would enable me to eradicate all passions . . . I soon realized that Brahmacharya is impossible to attain by mere human effort . . ."

—MAHATMA GANDHI,
My Experiments with Truth.


வைத்தியநாதையர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நோய் வாய்ப்பட்டு மரணப் படுக்கையில் இருந்தபோதும் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் கவிதையுள்ளம், உடனே அவ்வடமொழிச் சுலோகத்தினை அழகுற மொழிபெயர்த்துப் பின்வரும் தமிழ்ச் செய்யுளாக வெளியிட்டு மகிழ்ந்தது.

மோகமாம் அடவி திரிந்து அரிவையர்தம்
முலைக்குவட் டிடைநடம் ஆடித்
தாகமார் ஆசைத் தருக்குலம் தோறும்
தாவும்என் புன்மனக் குரங்கைப்
பாகமார் பக்தி நாண்கொடு கட்டிப்
பலிக்குநீ செல்க! யான் கொடுத்தேன்
ஏகநா யகனே! தில்லையில் ஆடும்
இறைவனே! எம்பெரு மானே!

**முடிவுரை :**

இறைவனின் திருவடிக்கண் அடைக்கலம் புகுந்து, அதன் சார்பும் துணையும் பெற்றால் தான், மனிதமனமும் அதன் வழிபட்ட ஐம்பொறிபுலன்களும், ஆகிய குரங்கின் குறும்புகள் அடங்கி நலம்பெறும் என்னும் சிறந்த பேருண்மை, இப்பாடலில், செவ்விதின் தெளிவுறுத்தப்பட்டிருத்தல் காணலாம். எனவே, பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்று, நாம் அனைவரும் நீடினிது நலமுற வாழ்வோமாக!

—ஆசிரியர்.



கருவூர் ஆனிலையப்பர் திருக்கோயில் குடநீராட்டு விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்த பெருமக்கள்.
(3—2—74)

# முருகன் பெருமை

திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், அறநிலையத் துறை, சென்னை.

**முன்னுரை :**

முருகன் வழிபாடு தமிழ்நாட்டில் தொன்று தொட்டு நிகழ்ந்து வருகின்றது. மக்கள் முதன் முதல் தோன்றிய இடம் குமரிக் கண்டமே என்றும், அதன்கண்ணும் குறிஞ்சித் திணைப் பகுதியே யாகும் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கும் மிக முற்பட்டதெனக் கருதப்படும் தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கணம், முருகனைக் குறிஞ்சித் திணைக்குரிய தெய்வம் என்று சிறப்புறக் குறிப்பிடுகின்றது. இவ்வாற்ருல் முருகன் வழிபாடு மிகத் தொன்னெடுங்காலம் முதலே நிகழ்ந்து வருதல் தெளியப்படும்.

**இயற்கைத் தெய்வம் :**

முருகன் இயற்கைத் தெய்வம். இயற்கையோடு இயைந்த இன்ப எழில் வாழ்க்கை நடாத்தி வந்த பழந் தமிழ்ப் பெரு மக்கள், முருகனை இயற்கையின் வாயிலாக இனிதறிந்தனர். முருகனின் திருவுருவை இயற்கைக் காட்சியின் வாயிலாகக் கண்டு கருதிக் கவினுறப் போற்றிக் களித்தனர். நீலக் கடலில், காலைச் செங்கதிரவன் தோன்றும் அழகிய இனிய காட்சியைக் கண்டு மகிழ்ந்த பழம் பெரும் தமிழ்ச் சான்ருேர்கள், அக் காட்சியின் வாயிலாக, நீல மயில் மீது இவர்ந்து வரும் செந்நிறம் உடைய முருகனை நினைத்துணர்ந்து, மிகப் பழங்காலம் முதலே வழிபடத் தொடங்கினர் என்பர் அறிஞர்.

**சங்க நூல்கள் :**

முருகனைக் குறித்து முன்னைத் தமிழ்ப் பெருஞ் சான்ருேர்கள் விளக்கி யருளிச் செய்துள்ள கருத்துக்கள், நினைத்துணருந்தோறும் அனைத்தெலும்பும் உள்ளுருக ஆனந்தத் தேன் சொரியும் இயல்பினவாக உள்ளன. முருகன் தன் அடியவர்கள் நினைத்தவற்றை யெல்லாம் நிறைவேற்றி முற்றுவித்துத் தருதலிற் சிறந்தவன் என்று, புறநானூறு குறிப்பிடுகின்றது.

முருகன் அருளே வடிவானவன். தன் அடியவர்கள் செய்யும் குற்றங்களைப் பொறுத்துக்கொண்டு, அவர்களுக்கு அருள் புரிபவன். ஆதலின் தண்டிக்கும் தன்மையே இல்லாத சிறந்த கடவுள் என்னும் கருத்தில், 'தெறல் அரும் கடவுள்' என்று, அகநானூறு என்னும் சங்க நூல் முருகனைச் சிறப்பித்துக் கூறுகின்றது.

**தமிழ்க் கடவுள் :**

முருகன் தமிழ்க் கடவுள். முருகனே தமிழ் மொழியை முதன் முதலில் அகத்தியருக்கு அறிவுறுத்தினுன் என்பது வரலாறு. மேலும்சிவபிரானுக்குப் பிரணவப் பொருளைத் தமிழிலேயே முருகன் உபதேசித்தான்.

''கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழால் பகர்வோனே''

என்பது அருணகிரிநாதர் திருப்புகழ். கூடல் மாநகரில், ஆலவாய் அவிர்சடைக்கடவுளுடன் குன்றம் எறிந்த குமரவேளும், சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தான் என்பர் நக்கீரர். ''சங்கத் தமிழின் தலைமைப் புலவன்'' என்பர் குமர குருபர அடிகள். தமிழ் மொழியின் மெய் எழுத்துக்கள் பதினெட்டும் தன்னுடைய கண்களாகவும், தமிழில் வல்லினம் மெல்லினம் இடையினம் என வழங்கும் எழுத்துக்கள் ஆறும் திருமுகங்களாகவும், தமிழில் அகரம் முதலிய உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் தோள்களாகவும், தனிநிலை எனப்படும் ஆய்தமே ஒப்புயர்வற்ற நிலையில் தனிச் சிறப்புற்றுத் திகழும் வேலாகவும் கொண்டு, தமிழ்த் தெய்வமாகிய முருகன், தமிழ் வடிவினனுக விளங்குகின்ருன்.

''கண்நிகர் மெய்யும், சென்னிக்
கணம்உறழ் இனத்தின் கூறும்,
திண்ணிய புயங்க ளேபோல்
திகழ்தரும் உயிரும், வேறென்
றெண்ணிடற் கரிய தாகும்
எஃகமும், இயலில் காட்டும்
புண்ணிய முருகன் செய்ய
பொற்பதம் போற்றி வாழ்வாம்''

என்பது, புலவர் புராணம் பாடிய திருப்புகழ்த் தண்டபாணி சுவாமிகள் அவர்களின் அரிய திருப்பாடல்.

குழந்தைகளுக்குக் குழந்தை வேலன் ஆகவும், இளைஞர்களுக்குப் பாலசுப்ரமணியன் ஆகவும், கலைஞர்களுக்கு ஆறுமுகம் கொண்ட அண்ணல் ஆகவும், வீரர்களுக்குத் தேவசேனபதி ஆகவும், மந்திர உபதேசம் பெற விரும்பி வழிபடும் அன்பர்களுக்குச் சுவாமிநாதன் ஆகவும், இல்லற நிலையினர்க்கு வள்ளிதெய்வயானை சமேத சுப்பிரமணியசுவாமி ஆகவும், பற்றற்ற தூய ஞானத் துறவற நிலையினர்க்குப் பழநியாண்டவர் ஆகவும் பிறவாறும் விளங்கி, அவரவர்களுக்கு ஏற்ற நிலைகளிற் பலவேறு வகைகளில், முருகப் பெருமான் அருள் புரிந்து காத்து வருகின்றான்.

## கந்த புராணம் :

முருகனின் வரலாறு கூறும் கந்த புராணம், உண்மையில் ஆராய்ந்துணர்ந்தால், ஒரு வகையில் நமது சொந்த புராணமே யாகும். கந்த புராணத்தில் வரும், சூரபதுமன் சிங்கமுகாசுரன் தாரகாசுரன் என்னும் மூவரும், முறையே ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களைக் குறிப்பவரே யாவர். தாரகன் கன்ம மலம். சிங்கமுகன் மாயா மலம். சூரபதுமன் ஆணவ மலம். கன்ம மலம் முதலில் அழியும். ஆதலின் தாரகாசுரன் முதலில் இறந்தான். மாயா மலம் அறிவை விளக்கும், ஒரோவழி மயக்கமும் செய்யும். அம்முறையில் சிங்கமுகாசுரன் நல்லியல்பும் தீய இயல்பும் ஒரு சேரக் கொண்டிருந்தான். ஆணவ மலம், ஆவாரக சக்தி, அதோ நியாமிகா சக்தி என்னும் இருதிற ஆற்றல்கள் உடையது. அவ்வாறே சூரபதுமனும் மனித உடலும் குதிரைத் தலையும் கொண்டு, சூரன், பதுமன் என இரு வேறு உடல்கள் ஒன்றி நின்றான். ஆணவ மலம் ஆற்றல் கெடுமேயன்றி, என்றும் அழிவதில்லை என்பது சைவ சித்தாந்தம். அம்முறையில், சூரபதுமன் தன் தீய இயல்புகள் அழிந்து, சேவலும் மயிலுமாக முருகனுக்குத் தொண்டு பூண்டு என்றும் அழியாத பெரு நிலை பெற்றான். அஞ்ஞானத்தை ஞானமே வெல்லும். சூரபதுமனாகிய அஞ்ஞானப் பிழம்பை, மெய்ஞ்ஞானமாகிய வேற்படை வென்றது. முருகனுக்கு வேல் ஞான சக்தி; வள்ளி அம்மை இச்சா சக்தி; தெய்வயானை கிரியா சக்தி. முருகனின் மயில் விந்து தத்துவம், கோழி நாத தத்துவம் என்னும் உண்மைகளைக் கந்த புராணம் கவினுற விளக்குகின்றது.

## ஆறு படை வீடுகள் :

முருகன் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்னும் ஆறு தலங்களில் எழுந்தருளி விளங்குகின்றான். முருகன் படை வீரர்களுக்கெல்லாம் தலைசிறந்த படை வீரன் ஆதலின், அவன் எழுந்தருளி விளங்கும் தலங்கள், படை வீடுகள் எனப் பெயர் பெற்றன. ஆறுபடை வீடுகளிலும் முறையே ஒளி வடிவம், அருள் வடிவம், தவ வடிவம், மந்திர வடிவம், எளிமை வடிவம், வியாபக வடிவம் என்னும் நிலைகளில், முருகன் விளங்கும் இயல்பினைத் திருமுருகாற்றுப்படை சிறப்புற விளக்குகின்றது.

## முடிவுரை :

முருகனை அன்புடன் வழிபட்டு, முருகா முருகா எனப் பலகாலும் கூறித் தியானிப்பவர்கள், என்றும் குறையாத பெருஞ் செல்வத்தைப் பெறுவார்கள்; அவர்களை ஒரு போதும் எத்தகைய துன்பமும் அணுகாது; அவர்களுக்கு எந்த ஒரு நோயும் வராது. அவர்கள் சுற்றமும் கிளையும் சூழ, உயர்ந்த இன்பங்களை நுகர்ந்துகொண்டு நீடுழி காலம் வாழ்வார்கள்.

''முருகா எனஉனை ஓதும்
தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார்;
வியாதி அடைந்து நையார்;
ஒருகால முந்துன்பம் எய்தார்;
பரகதி உற்றிடுவார்;
பொருகாலன் நாடு புகார்;
சமரா புரிப் புண்ணியனே''.

—சிதம்பர சுவாமிகள்.

# மாசாத்தனார்

மாசாத்தனார் அல்லது மாசாத்தன் (சாஸ்தா) என்பது, ஐயப்ப சுவாமிக்கு உரிய பல பெயர்களுள் ஒன்று. ஐயப்ப சுவாமி வழிபாடு, நம் தமிழ் நாட்டில் தொன்று தொட்டு நிகழ்ந்து வந்ததாகத் தெரிகின்றது. சங்க காலப் புலவர்களில் பலர், சாத்தனார் எனப் பெயர் பெற்றிருந்தனர். சிறப்பாக, மணிமேகலை என்னும் காப்பியம் இயற்றிய ஆசிரியரின் பெயர் 'சீத்தலைச் சாத்தனார்' என்பது, பலரும் அறிந்தது. தமிழ் இலக்கண நூல்களின் உரையாசிரியர்கள் பலரும், அடிக்கடி எடுத்துக் கையாளும் பெயர்களுள் சாத்தன் என்பதும் ஒன்றாகும். இதனால் சங்க காலந் தொட்டே சாத்தனார் வழிபாடு தமிழகத்தில் நிலவி வந்தமை புலனாகும்.

''பார்த்தனுக் கருளும் வைத்தார்
பாம்பரை ஆட வைத்தார்
சாத்தனை மகனா வைத்தார்
சாமுண்டி சாம வேதம்
கூத்தொடும் பாட வைத்தார்
கோளரா மதியம் நல்ல
தீர்த்தமும் சடைமேல் வைத்தார்
திருப்பயற் றூர னாரே''

எனவரும் தேவாரப் பாடலில், மாசாத்தனார் சிவபிரானின் திருமகனார் ஆவர் என்று, திருநாவுக்கரசு சுவாமிகள் குறிப்பிட்டிருத்தல் அறிந்து இன்புறத் தக்கதாகும். சாத்தன் குளம், சாத்தனூர் என்னும் பெயரில் பல ஊர்கள் இருப்பதும், சாத்தனார் என்னும் ஐயப்ப சுவாமியின் வழிபாடு தமிழகத்தில் நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்தமைக்குச் சான்று பகரும். இன்றும் தமிழகத்தில் எத்தனையோ பல சிற்றூர்களில் ஐயனார், ஐயனாரப்பர் என்னும் கிராம தேவதையின் கோயில்கள் பல ஆங்காங்கே இருக்கக் காண்கின்றோம். மோகினி வடிவம் கொண்ட திருமாலுக்கும், அவரொடு கூடிய சிவபெருமானுக்கும் புதல்வராகத் தோன்றியமையின், ஐயப்ப சுவாமிக்கு அரிகர புத்திரன் என்றும் ஒரு பெயர் உண்டு.

தமிழ்க் கடவுளாகிய முருகனுக்குத் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்னும் தலங்கள், ஆறுபடை வீடுகள் என்னும் பெயரில் அமைந்திருப்பது போல, ஐயப்ப சுவாமிக்கும் ஆறு படை வீடுகள் அமைந்திருக்கின்றன. குளத்துப் புழாவில் பாலகனாகவும், எருமேலியில் வேடுவனாகவும், ஆரியங்காவில் கிரகத்தனாகவும், அச்சன்கோயிலில் வானப்பிரத்தனாகவும், சபரிமலையில் சந்நியாசியாகவும், காந்தமலையில் சீவன்முக்தனாகவும், ஐயப்ப சுவாமி எழுந்தருளி விளங்கி வருகின்றார். மனிதன் தன் வாழ்வில் முறை முறையே எய்துகின்ற வாழ்க்கைப் படி நிலைகளை இவைகள் குறிப்பிடுகின்றன. ஐயப்பரின் ஆறு படை வீடுகளிலும் மிகவும் தலைசிறந்ததாகச் சபரி மலை என்னும் தலமே, பெரிதும் போற்றி வழிபடப்பட்டு வருகின்றது. ஒவ்வோர் ஆண்டிலும் பல நூறாயிரக்கணக்கான மக்கள் சபரிமலைக்குச் சென்று வழிபட்டு வருகின்றனர்.

ஐயப்ப சுவாமியின் வரலாறு மிக்க சுவையும் சிறப்பும் உடையதாகத் திகழ்கின்றது. தமிழகத்துப் பாண்டியர் மரபில் தோன்றியவராகிய பந்தள அரசர் வேட்டையாடுவதற்காக ஒரு நாள் காட்டிற்குச் சென்றார். அவர் பம்பா நதியின் கரையை அடைந்த போது ஒரு சிறிய குழந்தையின் அழுகை ஒலியைக் கேட்டார். சுற்று முற்றும் தேடிப் பார்த்துத் தன்னந் தனியே ஒரு குழந்தை துணையின்றிக் கிடந்ததைக் கண்டெடுத்தார். மகப் பேறு இல்லாத தமக்கு அவ் வழகிய சிறந்த குழந்தை கிடைத்ததனால், அவர் பெரிதும் மன மகிழ்ச்சி அடைந்தார். அதனைத் தன் அரண்மனைக்குக் கொணர்ந்தார். அரசனும் அரசியும் அக் குழந்தையின்பால் அளவற்ற அன்பைச்செலுத்தினர். குழந்தை தன் கழுத்தில் ஒரு மணியை அணிந்து கொண்டு இருந்ததனால், அதற்கு மணிகண்டன் என்னும் பெயரிட்டு மிகவும் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனர்.

இங்ஙனம் சில ஆண்டுகள் கழிந்தன. அரசர் வயது முதிர்ந்து தளர்ச்சி அடையலுற்றார். அந் நிலையில் மணி கண்டன் என்னும் இக் குழந்தையையே முடி சூட்டி அரசனாக்க வேண்டுமென்று, பந்தள மன்னர் விரும்பினார். ஆனால் அவர்தம் மனைவியாகிய அரசியோ இதற்கு இசையாமல், பின்னர்த் தனக்குப் பிறந்த மகனுக்கே முடிசூட்ட வேண்டுமென்று விரும்பினாள். அதனால் அவள் மணிகண்டனைக்

கொன்று விடுவதற்காகப் பல வகைச் சூழ்ச்சி களைப் புரிந்தாள். தனக்குத் தீராத தலைவலி ஏற்பட்டிருப்பது போலப் பாசாங்கு செய்து, அது தீருவதன் பொருட்டுப்புலிப்பால் கொணரு மாறு மணிகண்டனை அனுப்பினுள். மணி கண்டன் காட்டிற்குச் சென்ற போது, மகிஷி என்னும் அரக்கியால் துன்புறுத்தப்பட்டு மறைந்திருந்த இந்திரனைக் கண்டான். இந்தி ரனின் வேண்டுகோட்படி அவ்வரக்கியைக் கொன்று, மணிகண்டன் இந்திரனுக்கு உதவி புரிந்தான். அதனுல் மகிழ்ந்து நன்றி பாராட் டிய இந்திரன், தேவர்களை ஆண் புலியாகவும் பெண் புலியாகவும் புலிக்குட்டிகளாகவும் வடி வம் எடுக்கச் செய்து மணிகண்டனைப் பின்பற் றிச் செல்லுமாறு அனுப்பி வைத்தான். மணி கண்டன் புலிகளுடன் அரண்மனைக்கு வந்த தும், அரசனும் அரசியும் மற்றவர்களும், மணி கண்டன் சாதாரண மனிதக் குழந்தை அல்லன்; தெய்விக ஆற்றலும் சிறப்பும் வாய்ந்தவன் என்பதைத் தெரிந்து கொண்டனர். அரசி திகிலடைந்து மனம் திருந்தினுள். அரசர் மணிகண்டனை முடிசூட்டிக் கொள்ளுமாறு அன்புடன் வற்புறுத்தி வேண்டிக் கொண்டார்.

ஆனுல் மணிகண்டரோ தான் நாட்டை விடக் காட்டையே பெரிதும் விரும்புவதாக வும், தன்னுடைய வாழ்க்கையைத் தியானத்தி லும் தவத்திலும் கழிக்க விரும்புவதாகவும் கூறிச் சபரிமலை நோக்கிச் சென்றுவிட்டார். இந்தச் சமயத்தில் யோகி ஒருவர் தோன்றிக் காட்சியளித்து, அரசருக்கு மணிகண்டரைப் பற்றிய உண்மைகளைத் தெரிவித்தார். சபரி மலையின் உச்சியில் அவர் பொருட்டு ஒரு அழகிய கோயிலைக் கட்டும்படியும் பணித்தார். அவ்வாறே ஒரு சிறந்த அழகிய கோயிலை மணி கண்டருக்காக அரசர் கட்டுவித்தார். இக் கோயிலே தற்போது சபரி மலை ஐயப்பன் கோயில் என்று மிகவும் புகழ்பெற்றுத் திகழ் கின்றது. இப்போதுங்கூடப் பந்தள அரசரே ஐயப்ப சுவாமியின் அணிகலன்களின் பாது காவலராக விளங்கி வருகிருர். விழாக் காலங் களில் அவரிடமிருந்தே அவ்வணிகலன்கள் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

சபரிமலைக் கோயிலானது மேற்குத் தொடர்ச்சி மலையில் அடர்ந்த காடுகளின் நடுவே, யானை புலி முதலிய கொடிய விலங்கு கள் நிறைந்த சூழலில், ஓர் உயர்ந்த குன்றின் மேல் அமைந்துள்ளது. அடர்ந்த காடுகளின் ஊடே செல்லும் வழிகளில், இடர்ப்பாடுகள் மிகுந்து அச்சம் விளைவிக்கும் புனிதப் பய ணத்தை மேற்கொண்டு, தமிழ்நாட்டிலும் கேரள நாட்டிலிருந்தும் பல்லாயிரக் கணக் கான யாத்திரிகர்களும் பக்தர்களும், மார்கழி 11-ஆம் தேதியில் நிகழும் மண்டல பூசைக்கும், தை மாதம் முதல் தேதி நடைபெறும் மகர விளக்குப் பூசைக்கும், சித்திரை மாதம் முதல் தேதி நடைபெறும் விசு விழாவிற்கும், சபரி மலைக்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர். இவ் விழா நாட்களில் சபரிமலைப் பகுதி முழுவ துமே சிறந்த ஆன்மீக நல விழாக் கோலம் பூண்டு திகழ்கின்றது. விழா நாட்களில் ஐயப்ப சங்கீர்த்தனங்கள், அகண்ட பாராயணம் செய்யப்படுகின்றன.

சபரிமலை யாத்திரை, மிக்க புனிதமும் சிறப்பும் பயன்விளைவிப்பது மாகும். யாத் திரைக்குச் செல்ல விரும்புவோர், கார்த்திகை மாதம் முதல் தேதியன்று துளசி மணி மாலை அணிந்து கொண்டு, மண்டல பூசைக்கு முன்பு ஒரு மண்டலம் அல்லது 40 நாட்களும், மகர விளக்கு என்னும் காந்தமலைச் சோதி தரிசனம் செய்வதற்கு 60 நாட்களும், விரதம் மேற் கொள்ளுகின்றனர். அவ்விரத நாட்களில் பக்தர்கள் பல கடுமையான நோன்புகளைக் கடைப்பிடிக்கின்றனர். அந் நாட்களில் காலை யிலும் மாலையிலும் நீராடி விட்டு ஐயப்பனை ஒவ்வொரு நாளும் வழிபடுகின்றனர்; கடுமை யான பிரம்மச்சரிய ஒழுக்கத்தை மிகவும் கருத்தாகக் கடைப்பிடிக்கின்றனர். கருநீலம் அல்லது கருமை நிறமுடைய ஆடைகளை உடுத்து, பாய் இல்லாமல் தரையில் படுத்து உறங்குகின்றனர். சைவ உணவு அன்றி வேறு எதனையும் உண்ணுவதில்லை.

இளம் சிறுமிகளும், வயது முதிர்ந்த மக ளிரும், சபரிமலைக்குச் செல்ல அனுமதிக்கப்படு கின்றனர். ஆனுல் வளர்ச்சியுற்ற பெண்களும், இளமை மகளிரும் கண்டிப்பாக அனுமதிக்கப் படுவதில்லை. யாத்திரைக்குச் செல்லும் ஆண் கள் ஐயப்பன் எனவும், பெண்கள் மாளிகைப் புறத்து அம்மை எனவும் அழைக்கப்படுகின் றனர். அவர்கள் உண்மையாகவே ஐயப்ப னின் சார்பாளர்கள் எனப் போற்றப்படுகின் றனர். யாத்திரைக்குச் செல்வோர், ஏழை பணக்காரர்—உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடுகள் எதுவுமின்றி, பயணத்தின்போது தமக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் முத லியனவற்றையும், ஐயப்பனுக்குச் செலுத்து தற்கு வேண்டிய காணிக்கைப் பொருள்களை யும் இருமுடியிட்டு, தத்தம் தலைகளிலேயே சுமந்து செல்லுகின்றனர். அங்ஙனமின்றி இதற்காகப் பணியாட்கள் எவரையும் அமர்த் திக்கொள்ளுதல் கூடாது.

''நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும்; மற்றுத் தன்னை
நிலையினும் மேன்மேல் உயர்த்துநிறுப் பானும்
தலையாகச் செய்வானும் தான்''

என்றபடி, ஆன்மீக அருள் நெறியின் முன்னேற்றத்தின் பொறுப்பை அவரவர்களேதான் ஏற்றுச் சுமக்க வேண்டும் என்பது இதன் கருத்து.

சபரிமலை ஐயப்பனுக்குக் கொண்டு செல்ல வேண்டிய பூசைப் பொருள்களில் மிகவும் முக்கியமானது பசு நெய்யாகும். ஒரு முதிர்ந்த தேங்காயில், உள்ளிருக்கும் நீர் வற்றிவிட்ட பிறகு, நெய் ஊற்றி வைத்து மூடப்படுகிறது. அரிசி, கற்பூரம், நெய் ஊற்றிய தேங்காய் ஆகியவை, இதற்கெனத் தனியே அமைந்த துணிப்பையின் ஒரு பகுதியில் முடியப்படுகின்றன. மற்றொரு பகுதியில் வழிப் பயணத்தில் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் முதலியன வைத்துக் கட்டப் பெறுகின்றன. எருமேலி முதற்கொண்டு சபரிமலை வழி கரடு முரடாகவும், செங்குத்தாகவும், அடிக்கடி வழுக்கும் தன்மையுடையதாகவும் இருக்கின்றது. அவ்வழி அடர்ந்த காடுகளின் ஊடே செல்லுகின்றது. முதன் முதலாக யாத்திரை செல்லும், கன்னி ஐயப்பன்மார்கள் தம்முடைய உடம்பில் பச்சை குத்திக் கொள்வர்; வேட்டைக்குச் செல்வது போல நடிப்பர்; எருமேலிக்கு அருகில் உள்ள பேட்டை என்னும் இடத்தில் இருக்கின்ற ஐயனர் கோயிலின் பிராகாரத்தைச் சுற்றி நடனம் செய்வர். இதற்குப் 'பேட்டைத் துள்ளல்' என்று பெயர். பக்தி நெறியில் செல்லுபவன் உடம்பின் மீதுள்ள பற்றினையும், சாதி குலம் செல்வம் பதவி முதலிய செருக்குகளையும் விட்டுவிடுதல் வேண்டும் என்பது இதன் கருத்தாகும். வேட்டையாடுவது போல நடித்தல், ஒரு பக்தன் தன் உள்ளமாகிய காட்டில் மறைந்து வளர்ந்து வருகின்ற காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மார்ச்சர்யம் என்னும் தீய உணர்ச்சிகளை ஒழித்துவிடல் வேண்டும் என்பதனை உணர்த்துகின்றது.

எருமேலியிலிருந்து 41 மைல் நடந்து சென்று, பேரூர்த்தொடு கலாகட்டி அழுத்த மேடு கரிமலா என்பவற்றைக் கடந்து, யாத்திரிகர்கள் பம்பா நதியை அடைந்து, இயற்கையழகு மிகுந்த அந்தப் புனித இடத்தில் ஓய்வு எடுத்துக் கொள்ளுகின்றனர். இயற்கை வளமும் எழிலும் மிகுந்த இவ்விடத்தில் தங்கும்போது பக்தர்கள் அனைவரும், தமது வழி நடைப் பயணத்தின் இளைப்பும் களைப்பும் நீங்கிச், சிறந்த ஆறுதலும் மகிழ்ச்சியும் அடைகின்றனர். பம்பையாற்றின் கரையில், சிராத்தம், விருந்து, தீப விழா முதலியன நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாக விளங்கும். ''சுவாமியே சரணம் ஐயப்பா'' என்று பக்தர்கள் முழங்கும் பக்தி ஒலி, சுற்றுப் பக்கங்கள் எங்கிலும் பரவிப் பெரிதும் எதிரொலித்து நிற்கும். பம்பை யாற்றங்கரையின் சுற்றுப் புறங்களில் எல்லாம், ஆழ்ந்த பக்தியுணர்ச்சிப் பெருவெள்ளம் மேலிட்டுப் பொங்கி வழிந்து நிற்கும். பக்தியற்றவர்களும் கூட, பக்தியுணர்ச்சிப் பரவசம் மேலிட்டு, ஆனந்த வெள்ளத்தில் திளைத்து மகிழ்வார்கள். இவ்வுணர்ச்சியின்பப் பெருக்கின் மகிழ்ச்சியினை, அவரவர்களே அனுபவித்துத் தான் தெரிந்து கொள்ள இயலும். இவற்றை வெறும் சொற்களினுல் எழுதிக் காட்ட இயலாது.

பம்பை ஆற்றிலிருந்து நான்கு கல் தொலைவில், ஐயப்ப சுவாமியின் கோயில் உள்ளது. முதலில் விநாயகரை வழிபட்டுக் கொண்டு, யாத்திரிகர்களும் பக்தர்களும், சபரிமலை ஐயப்பனைத் தரிசிப்பதற்கு மிகுந்த ஆர்வத்துடன் மலையேறத் தொடங்குகின்றனர். இம்மலை கற்பாறைகள் நிறைந்து, மிகவும் செங்குத்தாக விளங்குகின்றது. இதற்கு நீலிமலை என்பது பெயர். ''சுவாமியே சரணம் ஐயப்பா' என்று தொடர்ந்து முழங்கிக் கொண்டு செல்பவர்கள், மிகவும் சுலபமாக இவ்வழியைக் கடந்துவிடுவர். இவ்வழியில் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் கூட, தம்மை அறியாமலே ஐயப்பனின் அருள் நாமத்தைச் சொல்லத் தொடங்கிவிடுவர்.

ஐயப்பனின் கோயில், ஓர் உயர்ந்தமேடையின் மீது அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் நுழைவாயிலில் 18 படிகள் இருக்கின்றன. தம் தலைகளின் மீது இருமுடியைச் சுமந்து செல்லுகின்ற பக்தர்கள் மட்டுமே, இந்தப் புனிதப் பதினெட்டுப் படிகளைத் தொடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். தாம் எத்தனை முறை யாத்திரைகள் சென்றுள்ளனரோ, அந்த எண்ணுடைய படிக்கல்லில் பக்தர்கள் ஒரு தேங்காயை உடைப்பர். பதினெட்டு முறை யாத்திரை சென்றவர்கள், மலையில் ஒரு தென்னை மரத்தை நடுதல் வேண்டும். ஐயப்பனின் திருவுருவப் படிமம் மிகச் சிறந்த கலைநல வேலைப்பாடு அமைந்தது. ஐயப்பர் வீர பத்மாசன நிலையில், வலக்கையில் சின்முத்திரை தாங்கி வீற்றிருக்கிருர். அவர்தம் திருமுகப் பொலிவு இனியதாகவும் அமைதி மிக்கதாகவும் விளங்குகின்றது. அவர் தம் நெற்றியில் வைணவ நெறிக்குரிய திருநாமம் அணி செய்கின்றது. அத்திரு முகத்தை ஒரு முறை தரிசித்தவர்கள், மேலும் மேலும் அதனைக் கண்டு களிக்க வேண்டுமென்று மிகவும் விரும்புவர். இது மிகவும் உண்மை ; ஒரு சிறிதும் மிகுத்துரையன்று. இங்ஙனம் பக்தர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் ஒரு சிறந்த வசீகரத் தெய்விகத் தோற்றப் பொலிவு, ஐயப்பரின் திருமுகத்தில் நிறைந்து காணப்படுகின்றது.

சபரிமலையில் விநாயகர், நாகராசர் ஆகிய இருவருக்கும் தனித் தனியே இரண்டு கோயில்கள் அமைந்துள்ளன. புனிதப் படிக்கட்டுகளுக்கு மிகவும் அருகில், மாளிகைப்புறத்து அம்மையின் கோயில் உள்ளது. இவ்வம்மை சபரிமலை ஐயப்பரால் சாப விமோசனம் பெற்ற மகிஷி என்னும் அரக்கியாவள். ஐயப்பரால் தன் பாவங்கள் நீங்கிச் சாப விமோசனம் அடைந்து, தூய்மை எய்தி, மாளிகைப்புறத்து அம்மை என வழங்கப்படும் இத் தெய்வம், தன்னை மணந்து கொள்ளும்படி ஐயப்பரை வேண்டிக் கொண்டதாகவும், அதற்கு ஐயப்பர் சபரிமலை யாத்திரையில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட ஆண்டில், கன்னி ஐயப்பன்மார் ஒருவரும் வரவில்லையாயின், அப்போது யான் உன்னை மணந்து கொள்ளுகின்றேன் என்று வாக்குறுதி அளித்ததாகவும், வரலாறு கூறுகின்றது. ஐயப்ப சுவாமிக்குப் பூரணை, புஷ்கலை என்னும் இரு தேவியர் உண்டு.

எங்கும் உலகாயதம் பரவி வரும் இந்நாளிலும், ஐயப்ப சுவாமி அநேக சிறந்த அற்புதங்களை நிகழ்த்தி, தன் பக்தர்கள்பால் அருள் புரிந்து வருகின்றார். குருடர்கள் கண்ணொளி பெறுகின்றனர். செவிடர்கள் கேட்கும் திறன் எய்துகின்றனர். நோய்களால் துன்புறுவோர் நோய்கள் நீங்கி நலம் பெற்று இன்புறுகின்றனர். தாம் தாம் விரும்பும் பேறுகளும் பக்தர்களுக்குச் சித்திக்கின்றன. மனக் கவலைகளும், உடற் பிணிகளும், வாழ்க்கைத் தொல்லைகளும் தீர்ந்து, பக்தர்கள் பல வகையான நலங்களைப் பெற்று வருகின்றனர். கலியுகத்திற் கண்கண்ட தெய்வமாகச் சபரிமலை ஐயப்பர் விளங்குவதை, அன்பர்கள் அனைவரும் தத்தம் வாழ்க்கை அனுபவ நிகழ்ச்சிகள் மூலம் உணர்ந்து மகிழ்ந்து வருகின்றனர். உண்மை அன்பும் பக்தியும் உடையவர்களுக்கெல்லாம், இறைவன் அவரவர்கள் விரும்பி வழிபடும் வகைகளில் அருள் புரிந்து வருகின்றான் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

—ஆசிரியர்.



அருள்மிகு மாசாத்தனார்

முற்றொடர்ச்சி

# அம்பிகையின் அழகு வெள்ளம்

(சவுந்தரிய லகரி)

**(9) தேவியை யோகத்தினால் அறியலாம் :**

நம்முடைய உடம்பில் மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்கள் உள்ளன. எருவாய்க்கும் கருவாய்க்கும் இடையில் மூலாதாரம்; குறிக்கும் கொப்பூழ்க்கும் நடுவே சுவாதிட்டானம்; கொப்பூழ்க்கண் மணிபூரகம்; மார்பிடத்தில் அநாகதம்; கழுத்தில் விசுத்தி; புருவ நடுவில் ஆக்ஞை என்னும் ஆதாரங்கள் உள்ளன. இவைகள் முறையே நான்கிதழ் ஆறிதழ் பத்திதழ் பன்னிரண்டிதழ் பதினாறிதழ் மூன்றிதழ்களையுடைய தாமரை மலர்கள் போல அமைந்திருக்கும். இவற்றில் முறையே நிலம் நீர் காற்று தீ வளி மனம் என்பன கலந்துள்ளன. இவ்வாறு உள்ள ஆறு ஆதாரங்களையும் செவ்விதிற் பகுத்தறிந்து படிப்படியே யோகப் பயிற்சியினால் மேலேறிச் சென்றால், இவ் ஆறு ஆதாரங்களுக்கும் அப்பாற்பட்டுத் தலையின் உச்சியில் ஆயிரம் இதழ்களை உடைய சகஸ்ராரம் என்னும் தாமரை மலர் ஒன்றிருக்கும். அதன்கண் உள்ள சிவந்த பீடத்தில், தேவி தன் கணவராகிய சதாசிவருடன் கூடி வீற்றிருப்பாள். குண்டலினிசத்தி எனப்படும் அத் தேவியை, ஞானிகள் யோகத்தினால் அந்த இடத்தில் தரிசிக்கலாம்.

மூலம் மணிபூ ரகத்தோடு இலிங்கம் மார்பு
முதுகளம் விற்புருவநடு மொழிவது ஆறு;
ஞாலமும் மென்புனலும் அனற்பிழம்பும்
காலும்
நாதமுறு பெருவளியும் மனமும் ஆக
மேல்அணுகிக், குளபதத்தைப் பின்னிட்டு,
அப்பால்
மென்கமலத்து ஆயிரம்தோட்டு அருண
பீடத்து
ஆலவிடம் பருகிய தன் மகிழ்நரோடும்
ஆனந்தம் உறும் பொருளை அறியலாமே

மூலாதாரமாவது எருவாய்க்கும் கருவாய்க்கும் இடையே தாமரைக் கிழங்கு போன்று இருக்கும். அதனைப் பற்றிக்கொண்டு துளையோடு கூடிய இடைகலை பிங்கலை சுழுமுனை என்னும் நாடிகள் எழுந்து நிற்கும். அவற்றுள் இடைகலையும் பிங்கலையும் ஆகிய நாடிகள் மூக்கின் இரு பக்கமாக வந்து நிற்கும். சுழுமுனை நாடி, ஆறு ஆதாரமாகிய ஆறு தாமரைகளையும் கோத்துக் கொண்டு, அவற்றின்மேல் ஆயிர இதழ்த் தாமரை மலரை நுனியிலே கொண்டு நிற்கும். அச் சுழுமுனை நாடியின் ஊடே பேரொளிப் பிழம்பாகக் குண்டலினி சத்தி விளங்கும். அது தன் உடலை வளைத்து ஒரு பாம்பு போல மூலாதாரத்தின் மேல் தன் படத்தை வைத்துக் கொண்டு யோக நித்திரை செய்யும்.*

அதனால் இம் மூன்று நாடியையும், மலம் மூத்திரம் உணவு முதலானவை வாயுவைப் பூரித்து நெருக்காதபடி நீங்கச் செய்யும். வாயுவைப் பூரித்தால் ஒடுங்கிய நாடி தாமரை நாளம் போல நிமிரும். இவ்வாறு நிமிரும்படி செய்து வரும் யோகப் பயிற்சியால் அபானத் துளையின் வழியாகக் காற்றுச் செல்லாமல், இடக்கால் குதியைக் குதத்தில் ஊன்றி, வலக்கால் குதியைக் குறியின்கண் ஊன்றி ஆசனமாக இருந்து, இடைபிங்கலை என்னும் மூக்குத் துளை இரண்டினுள் ஒன்றை அடைத்து, ஒரு துளையால் வாயுவைப் பூரகம் செய்தால், அதன்கண் காற்று நிரம்பி மூலாதாரத்தை முட்டி, பின்பு மற்ற நாடியின் வழியே செல்லும். அதனையும் நிரம்பப் பூரித்தால், அவ் வாயு மீண்டும் மூலாதாரத்தை முட்டிச் சுழுமுனை நாடி வழியே செல்லும். அதனையும் நிரம்பப் பூரித்துவாயுவைக் கும்பித்தால், சுவாதிட்டானத்தில் உள்ள நெருப்பு மூண்டு சுடர்விடும். அப்பொழுது மூலாதாரத்தில் தலை வைத்துக் கொண்டு பாம்புபோல் வளைந்திருக்கின்ற குண்டலினி சத்தியானது, மேல்நோக்கி எழுந்து சுழுமுனை நாடியின் வழியே, ஆறு ஆதாரங்களையும் கடந்து, சகஸ்ராரம் என்னும் ஆயிரம் இதழ்களை உடைய தாமரை மலரில் வீற்றிருக்கின்ற சதாசிவருடன் சேரும்.

*" The Kundalini Sakti, or the Divine Mother, or the " Serpent Power ", is the active creative force in the universe. In the human being this power lies dormant at the base of the spinal column, and its awakening is necessary for arousing spiritual consciousness and creativity. Once awakened, it ascends along the mystic Sushumna Canal through the six centres, or lotuses, until it reaches the thousand-petal lotus at the top of the head. In this ascent, it transforms sexual energy into spiritual or creative energy..."

—Prof. PITRIM A. SOROKIN,
Sane Sex Order, p. 62.

அங்ஙனம் சதாசிவத்துடன் கூடும் குண்டலினி சத்தியாகிய தேவியை யோகத்தால் அறிந்து அநுபவிக்கும் நிலையே முக்தி என்னும் வீடு பேறு ஆகும் என்பது இப்பாடலின் திரண்ட பொருள். மூலம்-மூலாதாரம். 'இலிங்கம்' (குறி) என்றது சுவாதிட்டானம். உந்தி மணிபூரகம். மார்பு, அநாகதம். களம் (கழுத்து) விசுத்தி. புருவ நடு ஆக்ஞை. இவை ஆறுக்கும் மேற்பட்டுத் தலையுச்சியில் இருப்பது, சகசிராரம். 'மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம்' எனக் கூறுதல் முறையாயினும், தோற்றமுறை பற்றி மூலாதாரம் மணிபூரகம் சுவாதிட்டானம் என்றார். 'குளபதம்' என்றது ஆருதாரங்களை. அருணம்-சிவப்பு. மகிழ்நர்-சதாசிவம். பொருள்-குண்டலினி சத்தி. இச் செய்யுள் நிரல் நிறையணி எனப்படும்.

## (10) ஞான ஆனந்த மின்னற்கொடி :

மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களையும் கடந்து சென்று, மூலாதாரத்தினின்று புறப்பட்டுப் படிப்படியே தலையின் மேல் துவாதசாந்தப் பெருவெளியில் ஆயிரம் இதழுடன் கூடியிருக்கும் தாமரை மலரின் நடுவே, மின்போன்ற குண்டலினி சத்தி வீற்றிருக்கும். அது நம்மை ஞான ஆனந்த வெள்ளத்தில் திளைத்து நிற்கச் செய்யும். அத்தகைய குண்டலினி சத்தியின் இரண்டு திருவடித் தாமரைகளின் உள்ளிருந்து ஊறிப் பொங்கி வரும் அமுத தாரையினை, உள் நாக்கின் வழியாக நுனி நாக்கைச் செலுத்திப் பருகுதல் வேண்டும். பருகினால் அது நம் மனித உடலில் பரந்து விளங்குகின்ற எழுபத்து ஈராயிரம் நாடிகளையும் நனைத்துக் குளிர்விக்கும். இவ்வாறு உடம்பில் அமுதம் பரவும்பொழுது, சொல்லரிய நிலையில், எல்லையற்ற பேரின்ப உணர்ச்சி ஏற்படும். காணாத காட்சிகளும், கேளாத ஒலிகளும் ஆகிய பலவகை அருளனுபவங்கள் தோன்றும். பிராணயாமப் பயிற்சியினால் உள்ளடக்கிய காற்றை வெளியே விடுப்பின், குண்டலினி சத்தியானது படிப்படியே கீழ் இறங்கித் தான் முன்பு இருந்த மூலாதாரத்திற்கு வந்து சேரும். அப்போது அக்குண்டலினி சத்தியானது பாம்பு தன் வளையில் புகும்போது உடலை வளைத்து உடம்பின் மேல் படத்தை வைத்து உறங்குவது போல வளைந்து நெளிந்து அமைதியுற்று விளங்கும். இங்ஙனம் ஓர் அரவைப் போல் குண்டலினி சத்தியானது அமைதியுற்றுத் துஞ்சும் நிலையை யோகப் பயிற்சியினால் காணும் நிலையே, குண்டலினி தரிசனம் என வழங்கும்.

''தாள்இணைக் கமலம் ஊறித்
 தரும் அமிழ்து உடலம் மூழ்க,
மீளஅப் பதங்கள் யாவும்
 விட்டு,முற் பழைய மூலம்
வாள்அரவு என்ன ஆகம்
 வளைத்து,உயர் பணத்தி னோடு
நாளும் மைக்கயற்கண் துஞ்சும்;
 ஞான ஆனந்த மின்னே!''

குண்டலினி சத்தி என்னும் அருளாற்றல் சகஸ்ராரம் என்னும் தாமரை மலரில் பொலிந்து விளங்குதலை, அம்பிகை பெண் வடிவில் அங்கு எழுந்தருளி விளங்குவதாக உருவகம் செய்தார். ஆதலின் 'ஞான ஆனந்த மின்' என்றும், 'கயற்கண்' என்றும் போற்றிப் புகழ்ந்தார். குண்டலினி சத்தியால் பொங்கிப் பெருகும் அருள் ஊறலை அம்பிகையின் திருவடி மலர்களிலிருந்து பெருகி வழியும் அமுதமாகக் குறிப்பிட்டார். அவ் அருளமுதம் உடல் உறுப்புக்கள் அனைத்திலும் பரவிப் பாய்ந்து, இன்பம் விளைக்கும் என, அவ்வருளனுபவத்தின் திறனைச் சுட்டினார். மணிவாசகப்பெருமான், தமது திருவாசகத்தில் ''சொல்லுவதறியேன் வாழி முறையோ.....வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய்தனன்......இன்தேன் பாய்ச்சி நிரம்பிய அற்புதமான அமுத தாரைகள் எற்புத் துளை தொறும் ஏற்றினன்......உருகுவது உள்ளங் கொண்டு ஓர் உருச்செய்தாங்கு, எனக்கு அள்ளூறு ஆக்கை அமைத்தனன்......ஒள்ளிய கன்னற் கனிதேர் களிறு எனக் கடைமுறை என்னையும் இருப்பதாக்கினன்.......என்னிற் கருணை வான்தேன் கலக்க அருளொடு பராவமுது ஆக்கினன்'' என இவ்வருளனுபவங்களையெல்லாம் இனிதெடுத்து மொழிந்திருத்தல், அறிந்து இன்புறுதற்குரியது.

மூலாதாரத்தில் குண்டலினி சத்தியானது, அமைந்திருக்கும் தன்மையினை ''வாள்அரவு என்ன ஆகம் வளைத்து, உயர் பணத்தினோடு நாளும் துஞ்சும்'' என்று அழகிய உவமையால் சுட்டினார். இது குண்டலினி சத்தியின் தன்மைகளை உள்ளவாறு எடுத்து விளக்கிக் கூறுகின்றது.* ஆதலால் இச் செய்யுள் 'தன்மை

---

*"At the base of the spine is the 'Serpent Fire' which exists in seven layers or seven degrees of force. This is the manifestation in etheric matter on the physical plane of one of the great World forces, one of the powers of Logos of which vitality and electricity are examples. The 'etheric' centres, when fully aroused by the 'Serpent Fire' bring down into physical conciousness whatever may be the quality inherent in the astral centre which corresponds to it . . . When vivified by the 'Serpent Fire' they become gates of consciousness between the physical and astral bodies. Thus the effect of rousing the Kundalini is said to exalt the physical consciousness through the ascending planes to the heaven world."

—SIR JOHN WOODROFFE,
Serpent Fire, p. 8—11.

யணி' எனப்படும். மேலைப் பாடலில் குண்டலினி சத்தியானது ஆதாரங்களின் வழியாக மூலாதாரத்தினின்று புறப்பட்டு மேலேறிச் செல்லுதலையும், இப்பாடலில் மேலேறிச் சென்ற குண்டலினி சத்தி அவ்வாதாரங்களின் வழியாகக் கீழிறங்கி வந்து மூலாதாரத்தை அடைதலையும் விளக்கியருளினர். தாள்இணை -இரண்டு திருவடிகள். கமலம்-தாமரை. அப்பதங்கள்-அந்த ஆறு ஆதாரங்கள். மூலம் - மூலாதாரம். அரவு-பாம்பு. வாள்-ஒளி. ஆகம் - உடல். பணம் - பாம்பின் படம். கயல் - மீன். துஞ்சும் - உறங்கும்.

## (11) தேவியின் சக்கரம் :

சக்தியை வழிபடுவோர் சமயிகள் என்றும், கவுளர் என்றும் இருவகைப்படுவர். சமயிகள் சக்தியும் சிவமும் ஒன்றே என நம்புவர். கவுளர் மூலாதாரத்தில் உறங்கும் குண்டலினி சத்தியாகிய கவுளினியை வழிபடுவர். சமயிகள் உபாசனை தவம் மந்திரசெபம் என்பவற்றைக் கொண்டு வழிபட்டு, ஆறு ஆதாரங்களின் மூலமாகச் சகஸ்ராரம் என்னும் ஆயிரம் இதழ்த் தாமரை மலருக்குக் குண்டலினி சத்தியை மேல் நோக்கி எழச் செய்து, சீவாத்மாவையும் பரமாத்வாவையும் ஒன்றுபடச் செய்வர். இவ்வழிபாடு அந்தர்யாகம் அல்லது அகவழிபாடு எனப்படும். கவுளர்கள் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சத்தியை எழுப்பாமலே உலக நலங்களையும் இன்பங்களையும் அடைதற்குப் புறத்தை வழிபடுவர். இது பகிர்யாகம் அல்லது புறவழிபாடு எனப்படும்.

இவ்வழிபாடுகளில் மந்திர செபம், சக்கரம் என்னும் யந்திர பூசை என்னும் இரண்டும் சிறப்பாகப் போற்றப்படும். கைவல்யாசிரமர் என்னும் உரையாசிரியர், தம்முடைய உரையில் 'ஸ்ரீ சக்கரம்' என்னும் யந்திரத்தை அமைக்கும் முறையினை விவரித்துள்ளார். அதன் இயல்பு வருமாறு : நான்கு புறத்தும் வாயில் அமைத்து, மூன்று சதுரம் வரைக. அதன் நடுவே மூன்று வட்டம் இட்டு, அதன் நடுவே பதினறு சதுரம் வரைக. அதன் நடுவே எட்டிதழும், அதன் நடுவில் ஒரு வட்டமும் வரைந்து, அதன் நடுவில் ஒன்பது இரேகை ஒன்றுக்கொன்று அளவு பெற எழுதுக. துடைக்கும் இரேகை அளவறிந்து துடைக்க. துடைத்தபின், ஒன்பது இரேகையும், ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி இராகு கேது என ஒன்பது கோள்களின் பெயரும், முறையே அமையும்.

அவற்றுள் ஞாயிற்றைச் சனியுடனும், திங்களைக் கேதுவுடனும், செவ்வாயை வட்டத்துடனும், புதனை இராகுவுடனும், கேதுவைப் புதனுடனும், இராகுவை ஞாயிற்றுடனும், சனியை வட்டத்துடனும், வெள்ளியைத் திங்களுடனும், வியாழத்தைச் செவ்வாயுடனும் கூட்ட நாற்பத்து மூன்று கோணமாயிருக்கும். இம்முறையில் வரைவது சங்காரக் கிரமம் எனப்படும்.


ஒரு முக்கோணமும், அதற்கு மேல் எண் முக்கோணமும், அதற்கு மேல் பதின்முக்கோணமும், அதற்குமேல் மற்றொரு பதின்கோணமும், அதற்குமேல் பதினன்கு கோணமும், அதற்குமேல் வட்டமும் எட்டிதழும், அதற்குமேல் பதினறு இதழும், அதற்குமேல் மூன்று வட்டமும், அதற்குமேல் மூன்றிதழ்ச் சதுரமும் ஆக முறையே வரைவது சிருட்டிக் கிரமம் எனப்படும்.

விந்துவை முக்கோணத்தில் எழுதுவது கவுளமதம் என்றும், முக்கோணத்தின் கீழாக ஒரு சதுரம் இட்டு, அதன் நடுவே விந்துவை எழுதுவது சமயிமதம் என்றும் கூறுவர். விந்து, சிவன் வடிவம் ஆகும். முக்கோணம், சக்தி வடிவம் ஆகும். இவ்வாறு எழுதிய விந்துவும் முக்கோணமும் சந்திர கண்டம் என்றும், எண் கோணமும் இரண்டு பத்துக் கோணமும் பதினன்கு கோணமும் அக்கினி கண்டம் என்றும், அதற்குமேல் உள்ள நான்கு வகையும் சூரிய கண்டம் என்றும், பெயர் பெறும். ஆதலின் இது' திரிபுரச் சக்கரம்' (ஸ்ரீ சக்கரம்) என்றும் சொல்லப் பெறும். இச்சக்கரத்திற்குரிய தேவி 'திரிபுர சுந்தரி' எனப்படுவாள். பின்வரும் பாடல் இதனை விளக்கும்.

சிவகோணம் முன்பகர்வது ஒருநாலு; சத்தி நெறி
செறிகோணம் அத்தொடுஒரு மருவுகோண்;
நவகோணம் உட்படுவது எழுமூவிரட்டி, ஒரு
நவில்கோணம் உற்றதுவும், வலயமாய்
இவரா நிரைத்ததளம் இருநாலும், எட்டு இணையும்
எழிலாய வட்டமொரு சதுரமாய்,
உவமானம் அற்ற தனித்தனி மூவகைக் கணும், என்
உமைபாதம் உற்ற சிறு வரைகளே

மேற்கூறிய சிவகோணம் நான்கும், சக்தி கோணம் ஐந்தும் ஆகிய ஒன்பது கோணத்தினுள்ளும் உண்டாவது நாற்பத்து மூன்று கோணம். இங்ஙனம் நாற்பத்து மூன்று கோணமாக உற்றதுவும், அதற்குமேல் வட்டமாக எழுதி நிரைத்த எட்டிதழும், அதற்குமேல் வட்டமாக நிரைத்த பதினறு இதழும், அதற்குமேல் அழகு பொருந்திய மூன்று வட்டத்தினிடமும், அதற்குமேல் மூன்று சதுரத்தினிடமும் திரிபுரசுந்தரியாகிய உமாதேவியின் திருவடிகள் பொருந்தியிருக்கும். எனவே இந்த

இரேகைகள் அல்லது வரிகள் பொருந்திய சக்கரத்தைப் பூசிக்க வேண்டும் என்பது, இச் செய்யுளின் பொருள். கோண்-கோணம். 'அத்தொடு ஒரு மருவு கோண்' என்றதனால், சத்தி கோணம் ஐந்து என்பது உணர்த்தப் பெற்றது. 'எழுமூவிரட்டி, ஒரு கோணம் உற்றது'-நாற்பத்து மூன்று கோணங்கள். தளம் - இதழ்.



திரிபுரைச் சக்கரம்

## (12) தேவியின் திருவுருவ நலன் :

எல்லாப் பொருள்களுக்கும் ஆதியாய், மூலமுதற் காரணமாய் விளங்குபவள் திரிபுர சுந்தரி. அவளுடைய திருவுருவம், உறுப்பு நூல் (சாமுத்திரிகா சாத்திரம்) கூறும் இலக் கணங்கள் அனைத்தும் நிரம்பியது ; நுண்ணிய அழகும், ஒளி நலமும் வாய்ந்தது. தேவியின் பேரழகைக் கண்டு இந்திராணி அரம்பை ஊர் வசி திலோத்தமை மேனகை என்னும் தெய்வ மகளிரும் நாணுகின்றனர். திரிபுரசுந்தரியின் முன்னர் இவர்களின் அழகு குறைந்து, அழ கின்மையாகத் தோன்றுகின்றது. அதனால் அவர்கள் தம்மைத் தாமே இகழ்ந்து கொள்ளு கின்றனர். தேவியின் அழகைக் கண்டு வியந்து திகைத்து நிற்கின்றனர். நாம் கடுந் தவம் புரிந்து அத்தவத்தின் பயனைச் சிவ பிரானோடு ஒன்று சேர்தலாகிய சிவசாயுச்சி யத்தினைப் பெறுவோமாயின், அந்நிலையில்தான் ஒப்பற்ற பேரழகு வாய்ந்த இத் தேவியின் திரு மார்பினை அணையப்பெற்று இன்புறுவோம். அவ்வாறன்றி வேறு எவ்வாற்றானும் இவளை அணையும் பேறு நமக்கு வாய்க்காது என்று நினைத்து மனம் உருகி வருந்துவர். தெய்வ மகளிரையே இங்ஙனம் வியந்து மயங்கித் திகைக்க வைக்கும் திரிபுரசுந்தரியின் திருவுருவ அழகைப் பிரமன் திருமால் இந்திரன் முதலிய தேவர்கள், யாது கண்டு எங்ஙனம் அளவிட இயலும்? அவர்களும் கூடத் தேவியின் திரு வுருவ நலச் சிறப்பினை அளவிட வல்லவரல்லர்.

''ஆதி சுந்தரி வடிவினை,
அயன்முதற் புலவோர்
ஏது கண்டு அளவிடுவது?
தமைஇகழ் இமையோர்
மாதர், இங்கு இவள் மகிழ்நரோடு
உறைகுவம் எனின், இப்
பேதை கொங்கைகள்
பெறுகுவம் என மறுகுவரால்''

எல்லாப் பொருளுக்கும் மூலமுதற் காரணமா யும் அடிப்படையும் ஆதாரமுமாயும் இருத்தல் பற்றித் திரிபுரசுந்தரியை, 'ஆதிசுந்தரி' என் றார். தேவியின் சுந்தர வடிவம் கண்டு தெய்வ மகளிரே வியந்து மயங்கித் தம்மைத் தாமே இகழ்ந்து கொண்டு நிற்கின்றனர். ஆதலின் அவ்வழகின் சிறப்பினை, ''அயன் முதற் புல வோர் ஏது கண்டு அளவிடுவது?'' என்றார். புலவர்-தேவர். 'இமையோர் மாதர்' என்றது இந்திராணி அரம்பை ஊர்வசி திலோத்தமை மேனகை முதலியவர்களைக் குறிக்கும். தேவி யின் திருவுருவ அழகின் முன்னர்த் தம்முடைய அழகு பொலிவிழந்து போயினமையின், இத் தேவ மகளிர் தம்மைத் தாமே இகழ்ந்து கொள்வாராயினர். மகிழ்நர்-கணவர் (சிவ பெருமான்). மகிழ்நரோடு உறைதல், சிவ சாயுச்சியம் என்னும் முக்தி நிலையைப் பெறு தல். சிவபிரானோடு ஒன்றிவிடின் தேவியை அடைந்து அணையலாம் என்னும் கருத்தால், ''இங்கிவள் மகிழ்நரோடு உறைகுவம் எனின், இப்பேதை கொங்கைகள் பெறுகுவம்'' என நினைத்தனர். அந்நினைவு கைகூடுதல் அருமை யாதல் பற்றி, 'மறுகுவர்' என்றார். அம்பி கையின் இளமை நலமும், நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் குண நலமும் கருதிப் 'பேதை' என்றார். ''பெண்டிரும் ஆண்மை வெஃகிப் பேதுறும் முலையினள்'' என்றபடி, பெண்வடிவிற்குப் பெண்டிரே மயங்கி ஆசைப் படுதல் கூறுதலின், இச்செய்யுள் 'குணஅதி சயம்' என்னும் அணியாகும்.

## (13) தேவியின் திருவருட்டிறன் :

தேவியை அன்புடன் வழிபட்டால், நாம் எல்லா நலன்களையும் எளிதிற் பெறலாம். தேவியை வழிபடுவோர் அடைய இயலாத இன்ப நலன்கள் எதுவும் இல்லை. ஒருவன் நெடுங்காலம் வாழ்ந்து முதிர்ந்த, மூப்பு மிக்க கிழவன். அவன் தெய்வமுமல்லன். சாதா

ரண மனிதன். அது மட்டுமின்றிக் காம விரகு அற்றவன். கொச்சையானவன். அழகு இருந்த ஊரிலும் இருந்து அறியாதவன். அத்தகைய இழிந்தவனே யாயினும், அவன் அம்பிகையை வழிபட்டு, அவளது அருளமுத வாரியில் திளைக்கும் பேறு பெறுவானாயின், அவனைத் தெய்வ மாதர்கள் எல்லாம் விரும்பி நிற்பர். கற்பக மலரின் மணம் வீசுகின்ற, தம்முடைய கூந்தல் அவிழ்ந்து சரியவும், மார்பகத்தின் மேலாடை சோர்ந்து வீழவும், நாணம் அழியவும், கைவளைகள் கழன்று பல இடத்தும் உருளவும், உடுத்த ஆடை இடையை விட்டு அகன்று நெகிழவும், அவனைக் காதலித்துப் பின்தொடர்ந்து ஓடி வருவர். இங்ஙனம் அவன் எல்லாப் பேறுகளையும் பெறுவான் என்று, ஆகமங்கள் எல்லாம் கூறுகின்றன. இஃது உண்மையே எனின், பொற்கொடி போன்ற அழகிய அம்பிகை நிகழ்த்துகின்ற வியத்தகு செயல்களை, உலகில் யாவர்தான் புகழவல்லார்? ஒருவருமே அதனை ஆய்ந்தறிந்து அளவிட்டுச் சொல்லுதல் இயலாது.

''அறக் கிழவன் மனிதன் விரகில்லாக் கொச்சை
அழகிருந்த ஊரில்இருந்து அறியானேனும்,
உறக்கருணை கொழிக்கும்உனது அமுதவாரி
ஊடணுகின், அவனை அரமகளிர் எல்லாம்
நறைக்குழலும் சரிந்திட, உத்தரீயம் சோர,
நாண்அழிய வளைசிதற உடுத்த ஆடை
புறத்துவிழ மயலொடும்பின் தொடர்வர் என்றால்,
பொற்கொடி! நின் புதுமைஎவர் புகழ வல்லார்?''

தேவியின் திருவருளைப் பெற்றோர், எய்தாத இன்பங்களும் பேறுகளும் இல்லை என்பது கருத்து. அம்பிகையின் அருளைப் பெற்றோரே அழகுடையவராவர் என்பது இதனால் உணர்த்தப்பெற்றது. தெய்வமகளிரே மயலுற்றுப் பின் தொடர்வர் எனின், மானிட மகளிர் அடையும் காதல் மயக்கங்களைச் சொல்லுதல் வேண்டா என்பது குறிப்பு. அறக்கிழவன் - மிகவும் முதிர்ந்த கிழத்தன்மை அடைந்தவன். விரகு-திறமை. கொச்சை - இழிந்தவன். வாரி-கடல். நறை-மணம். குழல்-கூந்தல். உத்தரீயம்-மேலாடை. காதலித்தற்குரிய நலம் எதுவும் இல்லாதிருந்தும் காதலிக்கப் பெறுவன் என்றலின், இச்செய்யுள் 'உறுப்புக் குறைவிசேடம்' என்னும் அணியாகும்.

## (14) தேவி திருவடிகளின் இருப்பிடம் :

நம்முடைய மனித உடலில் மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்கள் அமைந்துள்ளன. நம்முடைய இந்து சமய ஞானிகள், தமது யோகப் பயிற்சியினாலும், அகமுக நாட்டத்தினாலும், திருவருள் துணையினாலும், ஆற்றற் பெருக்க நிலையங்களாகிய இந்த ஆறு ஆதாரங்களையும் பற்றிய, அநுபவ உண்மைகளையெல்லாம் நம்மனோர் உணர்ந்து உய்யும் பொருட்டு வெளிப்படுத்தி யருளியுள்ளனர். இவ் ஆறு ஆதாரங்களும் அமைந்துள்ள இடம், அவற்றின் வடிவம், நிறம், அதிதெய்வம், மந்திரம் என்பன, அவர்களால் நுண்ணிதின் அறிந்து வெளியிடப் பெற்றுள்ளன.

*(1)* மூலாதாரம் : குதத்திற்கும் கோசத்திற்கும் நடு, முக்கோணம், நாலிதழ்க் கமலம், மாணிக்க நிறம், கணபதி, குண்டலி சத்தி, ஓங்காரம்.

*(2)* சுவாதிட்டானம் : கோசத்திற்கும் நாபிக்கும் நடு, நாற்சதுரம், ஆறிதழ்க் கமலம், செம்பொன்னிறம், பிரம்மா, சரசுவதி, நகாரம்.

*(3)* மணிபூரகம் : நாபிக்கமலம், மூன்றாம் பிறை, பத்திதழ்க்கமலம், மரகத நிறம், விட்டுணு, லட்சுமி, மகாரம்.

*(4)* அநாகதம் : இருதய கமலம், பன்னிரண்டிதழ்க் கமலம், முக்கோணம், படிக நிறம், உருத்திரன், பார்வதி, சிகாரம்.

*(5)* விசுத்தி : கண்டத்தானம், பதினாறிதழ்க்கமலம், அறுகோணம், மேக நிறம், மகேசுவரன், மகேசுவரி, வகாரம்.

*(6)* ஆக்ஞை : லலாடத்தானம், மூன்றிதழ்க் கமலம், வட்டம், படிக நிறம், சதாசிவம், மனோன்மணி, யகாரம்.

இந்த ஆறு ஆதாரங்களுள், மூலாதாரத்தில் ஐம்பத்தாறும், மணிபூரகத்தில் ஐம்பத்திரண்டும், சுவாதிட்டானத்தில் அறுபத்திரண்டும், அநாகதத்தில் ஐம்பத்துநான்கும், விசுத்தியில் எழுபத்திரண்டும், ஆக்ஞையில் அறுபத்துநான்கும் ஆகிய முந்நூற்று அறுபது கிரணங்கள் உள்ளன. அம் முந்நூற்றறுபது கிரணங்களின் மேல் அம்பிகையினுடைய திருவடிகள் இருக்கும்.

''பணைபார் புனல்கனலி வளிவான் மனத்தில்அறு
பதில்நால் ஒழித்தது, முன் அடைவிலே
இணைநால் ஒழித்தது, இருகதிர் ஏற உற்றது,
மூஇணை போயது, எட்டினொடு கதிர்கள் நால்

அணையா நிரைத்தது, உறுகதிர் நால்
அடுத்து,
அதன்அளவாய் இலக்கம் அறுவகை
யினால்,
உணரா உரைத்த கதிர்களின்மேல் இருக்
கும்
எனது உமைபாத செக்கர்விரி கமலமே''

மூலாதாரமும் சுவாதிட்டானமும் அக்கினி கண்டம், உருத்திரகிரந்தி எனப்படும். மணிபூரகமும் அநாகதமும் சூரியகண்டம், விட்டுணுகிரந்தி என வழங்கும். விசுத்தியும் ஆக்ஞையும் சந்திர கண்டம், பிரமகிரந்தி எனப் பெயர் பெறும். சுவாதிட்டானத்தில் அக்கினி இருப்பதனால் உருத்திர கிரந்தி என்றும், அநாகதத்தில் சூரியன் இருப்பதனால் விட்டுணு கிரந்தி என்றும், ஆக்ஞையில் சந்திரன் இருப்பதனால் பிரமகிரந்தி என்றும் பெயர் வழங்கப் பெறும்.

கிரந்தியாவன : சுழுமுனை நாடியில் மூன்று முடிச்சுகள் இருக்கும். குண்டலி சத்தி இம் முடிச்சுகளைக் கடக்குந்தோறும் ஓரோர் அவத்தையாக மூன்று அவத்தைகள் நிகழும். ஆறு ஆதாரங்களுள் சுவாதிட்டானத்தில் உள்ள அக்கினியின் சுவாலைகள் நூற்றெட்டினுள் கீழ்முகமாக மூலாதாரத்தில் ஐம்பத்தாறும், மேல்முகமாக மணிபூரகத்தில் ஐம்பத்திரண்டும் சென்றிருக்கும். அநாகதத்தில் இருக்கிற சூரிய கிரணங்கள் நூற்றுப்பதினாறினுள் கீழ்முகமாக மணிபூரகத்தைக் கடந்து, சுவாதிட்டானத்திலேஅறுபத்திரண்டு சென்றிருக்க, இதயத் தானமாகிய அநாகதத்தில் ஒழிந்த ஐம்பத்து நான்கும் இருக்கும். ஆக்ஞையில் இருக்கிற சந்திர கலைகள் நூற்றுமுப்பத்தாறினுள் கீழ்முகமாக விசுத்தியிலே எழுபத்திரண்டு சென்றிருக்க, அவ் ஆக்ஞையிலே ஒழிந்த அறுபத்து நான்கும் இருக்கும். நால்ஒழித்தது —ஐம்பத்தாறு, மூலாதாரம். இணைநால் ஒழித்தது-ஐம்பத்திரண்டு, மணிபூரகம். இருகதிர் ஏற உற்றது - அறுபத்திரண்டு, சுவாதிட்டானம். மூஇணைபோயது-ஐம்பத்துநான்கு, அநாகதம். எட்டினொடு கதிர்கள் நால் நிரைத்தது- எழுபத்திரண்டு, விசுத்தி. உறுகதிர் நால் அடுத்தது - அறுபத்துநான்கு, ஆக்ஞை. இம் முச்சுடரின் கிரணங்களை ஆறாதாரமும் அடைந்திருப்பதனால் அதனதனுக்குரிய கிரணம் எனப்பட்டது. இக் கிரணங்கள் எல்லாவற்றையும் கடந்து மேற்பட்டு இருப்பதனால், அம்பிகையின் திருவடிகளைக் ''கதிர்களின் மேல் இருக்கும் எனது உமை பாதம்'' என்றார்.

(தொடரும்)

—ஆசிரியர்.

---

The following are the particulars regarding the ownership of "THIRUKKOIL" the monthly newspaper, published, as called for, by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

(*See* Rule 8)

| | | |
|---|---|---|
| 1. | Place of Publication .. .. .. | Nungambakkam, Madras—600034. |
| 2. | Periodicity of Publication .. .. | Monthly. |
| 3. | Printer's Name .. .. .. | Tamil Arasu Press, Government Estate, Madras—600002. |
| | Nationality .. .. .. .. | Indian. |
| | Address .. .. .. .. | Government Estate, Madras—600002. |
| 4. | Publisher's Name .. .. .. | Thiru K. S. Narasimhan, B.A., B.L., I.A.S., Commissioner, H.R. & C.E. (Admn.) Department, Madras—600034. |
| | Nationality .. .. .. .. | Indian. |
| | Address .. .. .. .. | Nungambakkam Madras—600034. |
| 5. | Editor's Name .. .. .. | N. R. Murugavell, M.A., M.O.L., Editor, H.R. & C.E. (Admn.) Department, Madras—600034. |
| | Nationality .. .. .. .. | Indian |
| | Address .. .. .. .. | Nungambakkam, Madras—600034. |
| 6. | Name and Addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital | Thiru K. S. Narasimhan, B.A.,B.L., I.A.S., Commissioner, H.R. & C.E. (Admn.) Department, Madras—600034. |

I, K. S. NARASIMHAN, hereby declare that the particulars given above, are true to the best of my knowledge and belief.

DATED : 2—3—1974.
MADRAS—600034.

K. S. NARASIMHAN,
*Commissioner.*

15590



தைப்பூசத்தினத்தன்று வடலூர்ச்சத்தியஞானசபைத் திருப்பணிக் குழுவில் ரூ. 1,50,000 செலவில் கட்டப்பட்ட மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டித் திறப்பு விழாவில்,

அமைச்சர் மாண்புமிகு என். வி. என். அவர்களும், மேலவைத் துணைத் தலைவர் 'சிலம்புச் செல்வர்' திரு. ம. பொ. சிவஞானம், M.L.C., அவர்களும், 'சன்மார்க்கச் செல்வர்' திரு. நா. மகாலிங்கம் B.SC., A.M.I.E., அவர்களும், பிற பெருமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல். (6—2—1974).



கருவூர் ஆனிலையப்பர் திருக்கோயிலில் குடநீராட்டு விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்த பெருமக்கள். (3—2—74)